விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே



சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 11 புதன்கிழமை (26.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 189

## மன்னார் திருக்கேதீச்சர நுழைவாயில் வளைவு
# கத்தோலிக்க மதகுருமார் சிலரின் அழுத்தமே அனுமதியைத் தடை செய்யக் காரணமாம்

(மன்னார்)

மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தின் தோரண நுழைவாயில் வளைவு அமைப்பதற்கு மன்னார் பிரதேச சபை வழங்கிய அனுமதியை 24 மணி நேரத்துக்குள் இரத்துச் செய்து மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எச்.எம். முஜாஹிர் வழங்கிய உத்தரவு சைவ மக்களை அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளதுடன் பெரும் மனக் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் மாதோட்டத்தில் அமைந்துள்ள ▶23

## கிளிநொச்சி பாரதிபுரம் சந்தியில்
# புகையிரதத்துடன் இராணுவ ஹன்டர் விபத்து

## 5 இராணுவத்தினர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பாரதிபுரம் சந்தியில் பாதுகாப்பற்ற புகையிரத கடவையில் இடம்பெற்ற விபத்தில் இராணுவத்தின் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த ஐந்து இராணுவத்தினர் பலியாகியுள்ளனர். இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ▶23



அமைச்சர் ரவியின் மகளிடம்
## 6 மணி நேரம் வாக்குமூலம்

(கொழும்பு)

அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் மகள் ஒனெலா கருணாநாயக்க 6 மணிநேர வாக்குமூல பதிவை ▶23

மன்னார் ஊருமலையில்
## ஐஸ் போதையுடன் மூவர் கைது

(மன்னார்)

மன்னார் - ஊருமலை பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் மூன்று பேரை கைது செய்துள்ளதாக கடற் ▶23

## தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை மேல் மாகாண வினாத்தாள் பகுதி-II
உள்ளே →

நாட்டின் தற்போதைய பிரச்சினையை
## எதிர்காலத்துக்கு கொண்டு செல்லாது உடனடியாக தீர்க்க வேண்டும்
சபாநாயகர் கரு ஜயசூரிய

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய பிரச்சினைகளை எதிர்காலத்திற்கும் கொண்டுசெல்லாது உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு மேலும் தெரிவித்த அவர், "இந்த நாட்டில் நிலவிவரும் நிலைமை ▶23

## இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முழுமையாக இல்லாதொழிப்போம்
அனைவரையும் ஒன்றிணைய ஞானசாரர் அழைப்பு

(கொழும்பு)

இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு முழுமையாகத் தீர்வு காண்பதற்குரிய ஒரு முறையான திட்டமிடலோ அல்லது இணக்கப்பாடோ இன்னமும் எட்டப்படவில்லை.

எனவே இவை தொடர்பில் பகிரங்கமாகக் கலந்துரையாடுவதற்கும், யோசனைகளை முன்வைப்பதற்கும் அனைவரையும் கண்டிக்கு வருமாறு அழைக்கின்றோம் என பொது பல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

நாட்டில் தோன்றியுள்ள அடிப்படைவாதப் பிரச்சினையை முழுமையாக இல்லாதொழிப்பது குறித்து ஆராய்தல், யோசனைகளை முன்வைத்தல் என்பவற்றை நோக்காகக் ▶23

## முள்ளிவாய்க்காலில் கைக்குண்டு மீட்பு!

(முல்லைத்தீவு)

முள்ளிவாய்க்கால் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் இருந்து கைக்குண்டு ஒன்று நேற்று நண்பகல் மீட்கப்பட்டுள்ளது.

இறுதி யுத்தத்தின்போது விடுதலைப் புலிகளினால் கைவிடப்பட்ட கைக்குண்டு ஒன்றையே நேற்று நண்பகல் பா ▶23

ரிஷாத், மகேஷ் சேனநாயக்கவை
## பாராளுமன்ற தெரிவுக்குழு விசாரணைக்காக அழைப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க மற்றும் முன்னாள் அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரிஷாத் பதியுதீனுக்கு நேற்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

என்.ந்.தாக்குதலுடன் தொடர்புபட்ட ஒரு சிலர் கைது செய்யப்பட்ட நிலையில் ▶23

முஸ்லிம்களுக்கான தடை
## அரசியலமைப்பை மீறும் செயற்பாடு - சாலிய பீரிஸ்

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு வெண்ணப்புவ பிரதேச சபை தடை விதித்தமை அரசியலமைப்பை மீறும் செயற்பாடு என காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

குறித்த நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டமையே அதனை விட அதிர்ச்சியூட்டும் விடயம் என்றும் அவர் ▶23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உயர்தர மாணவர்களுக்கு விரைவில் ரப் கணனி

## கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம்



(கொழும்பு)

கல்வி துறையில் புரட்சியை ஏற்படுத்தி வரலாற்றில் வெற்றியை நிலை நிறுத்தி உயர்தரத்தில்பயிலும் மாணவர்களுக்கு ரப் (Tab) கணினிகளை பெற்றுக்கொடுக்கும் கல்வி அமைச்சின் வேலைத் திட்டத்திற்கு நேற்று அமைச்சரவையால் ஒப்புதல் வழங்கப்பட்டது என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் வளாகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது கல்வி துறையில் உன்னதமான வெற்றியாகும். மாணவர்கள் ஆசிரியர்கள பெற்றோர் உள்ளிட்ட கல்வித்துறையைச் சேர்ந்த அனைத்து தரப்பினருக்கும் இது சிறப்பான வெற்றியாகும்.

இந்த வேலைத்திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் அனைத்து தேசிய பாடசாலைகளிலும் உயர்தரத்தில் கற்கும் மாணவர்களுக்கு இதன் மூலமான கல்வி நடவடிக்கைகளுக்கு ஒரு இலட்சம் ரப் கணினிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கூடிய விரைவில் பாடசாலை கட்டமைப்பில் இந்த டப் கணினி விநியோகிப்பதற்கும் அதற்கான பயிற்சிகளை பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-3)


WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(C-6763)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com


# கஞ்சாவை வைத்திருந்தவருக்கு 150 மணித்தியால சமூகசேவை

## சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

35 மில்லிக்கிராம் கஞ்சாவை தம்வசம் வைத்திருந்த நபர் ஒருவரை 150 மணித்தியாலங்கள் சமூக சேவைக்கு உட்படுத்துமாறு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி சாவகச்சேரிப் பகுதியில் 35 மில்லிக்கிராம் கஞ்சாவை தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்திய போது வழக்கு ஒத்தி வைக்கப்பட்ட பின்னர் மீண்டும் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே குறித்த நபருக்கு 150 மணித்தியாலங்கள் சமூக சேவைக்கு உட்படுத்துமாறு நீதிமன்று உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-10,114)

# பூஜித தொடர்பில் சி.ஐ.டி. விசாரணை

(கொழும்பு)

முன் அறிவித்தல் இன்றி குற்றப் புலனாய்வுப் பிரிவு கட்டடத் தொகுதிக்கு வந்து, அங்கு மின் தூக்கி மற்றும் வரவேற்பு பணிகளில் ஈடுபட்டிருந்தவர்களை கேவலமாக திட்டி, துன்புறுத்தல்களுக்குள்ளாக்கியதாக கூறப்படும் விடயம் தொடர்பில் கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தொடர்பில் விசாரணைகளை நடத்தி நீதிமன்றுக்கு அறிக்கையிடுமாறு கோட்டை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க இதற்கான உத்தரவை நேற்று பிறப்பித்தார். (ம-3)

# களனி நுங்கமுகொடவில் துப்பாக்கிச்சூடு

## ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

களனி, நுங்கமுகொட பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.


நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் தங்க ஆபரண விற்பனை நிலையம் ஒன்றின் உரிமையாளர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேர் துப்பாக்கிச் சூட்டினை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை மதிமோகன் (மதி அண்ணா)



*வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட "மனமோகனதாஸ் பிரபு" ஸ்ரீரங்கநாதப் பெருமாள் ஆலயம் வட்டக்கச்சி மதி அண்ணா என்று அழைக்கப் படும் ஐயாத்துரை மதிமோகன் அவர்கள் 25.06.2019 அன்று இறைவனடிசேர்ந்தார்.*

*அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை-பொன்னம்மா (வட்டக்கச்சி) தம்பதிகளின் அன்பு மகனும், மதிவதனா (வட்டக்கச்சி), நிர்மலா (ஆசிரியர் - கிளி/ வட்டக்கச்சி மாயவனூர் வித்தியாலயம்), செல்வநிதி (இடைக்காடு - யாழ்ப்பாணம்), சிவகுமார் (சுவிஸ்), ரமேஸ்குமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தயாபரன், தயாநிதி, அயந்தரூபி (சுவிஸ்), அகல்விழி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், கோபிதா, ஜெயபிரணவி, மருட்சயன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தருணன், தருணிகா, அம்சிகா, அனுருத் (சுவிஸ்), கயன் ஐயா (ஸ்ரீரங்கநாதப் பெருமாள் ஆலய பிரதம குரு) ஆகியோரின் பாசமிகு பெரியதந்தையும் ஆவார்.*

*அன்னாரின் பூதவுடல் இன்று (26.06.2019) புதன்கிழமை அன்று மதியம் 1.00 மணியளவில் இல.904, கட்சன்வீதி, வட்டக்கச்சியில் உள்ள அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், பக்தர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

**இல. 904, கட்சன் வீதி,
வட்டக்கச்சி.**

(6782) தகவல் : குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும்
திருமதி மேரி நிரோஜினி மயூரன் அவர்களின்
அன்புத்தாயார்
திருமதி **மரியதிரேஸ் பேரின்பம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை

(9381)

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு :- 16.08.1951 இறப்பு : 25.06.2019



எமது பாடசாலை ஆசிரியையான
திருமதி சசிரேகா சுயதீப்
அவர்களின் அன்புத்
தந்தையான
அமரர்
**ஆறுமுகம் தர்மலிங்கம்**

அவர்கள் 25.06.2019 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
நீர்வேலி.

(9382)


வலம்புரி 021 221 7603
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532




நாளை 27.06.2019 சுழிபுரம் பறாளாய்
ஈசுர விநாயகரின் கொடியேற்றத்திருவிழா
கண்ணைக்கொத்திய காக்கா பிள்ளையாரே!
நேரம் :— முற்பகல் 11 மணியளவில்
சோழியூரான் பிறைசூடிக்குரு
(9379)


# பயங்கரவாதம் முறியடிக்கப்பட்டு விட்டதென கருதுபவர்கள் முட்டாள்களாகவே இருக்க முடியும்



◆ முற்றாக செயலிழக்க இன்னும் இரண்டு வருடங்கள் தேவை
◆ நாட்டின் பாதுகாப்புக்கு ஜனாதிபதியும் பிரதமருமே பொறுப்பு
◆ கனவுகளைக் கண்டுவிட்டு அதற்கேற்றால் போல் செயற்படுகிறார் மைத்திரி

## சரத் பொன்சேகா சாட்டையடி



**(கொழும்பு)**

**இலங்கையில் பயங்கரவாதம் முறியடிக்கப்பட்டு விட்டதென கருதுபவர்கள் முட்டாள்களாகவே இருக்க முடியும். ஆகையால் மக்கள் எப்போதும் அவதானத்துடன் இருப்பதே நல்லதென நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சரத் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்போம் எனக் கூறியவர்கள்தான் தற்போது ஜனாதிபதி முறையே சிறந்ததென கூறி வருகின்றனர்.

மேலும் ஜனாதிபதி, ஒவ்வொரு விதமான கனவுகளைக் கண்டு, அதற்கேற்றவாறு செயற்படுகின்றார்.

அதாவது, ஜனாதிபதித் தேர்தல் நெருங்குகின்றமையால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான காய்ச்சல் வருகிறது.

இதேவேளை நாட்டில் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு காரணமானவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு விட்டார்கள். இனி ஒருபோதும் அத்தகையதொரு அசம்பாவிதம் நிகழாது எனப் பிரதமர் தெரிவித்தார்.

ஆனால், இந்தியா மற்றும் ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் பயங்கரவாதத் தாக்குதல் முடிவுக்கு வரவில்லையெனவும் மீண்டும் தாக்குதல் இடம்பெறுவதற்கு வாய்ப்புள்ளதெனவும் கூறி வருகின்றது.


அந்தவகையில் நானும் பிரச்சினை ஆரம்பித்தவுடனே கூறினேன் இந்தப் பயங்கரவாதத்தை முழுமையாக செயலிழக்க செய்வதற்கு இன்னும் இரண்டு வருடங்களாவது தேவைப்படும் என்றேன்.

ஆனால் இங்குள்ள அரசியல் தலைமைகளுக்கு அதுபுரியவில்லை. எது எவ்வாறாயினும் நாட்டின் பாதுகாப்புக்கு ஜனாதிபதியும் பிரதமருமே பொறுப்பு என சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## வியாழேந்திரனும், கருணாவும் பிரபாகரனை பின்பற்றுகின்றனர்

### மொஹமட் மில்ஹான் கண்டனம்





(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அன்று ஆயுதமேந்திப் போராடியதன் விளைவு பாரதூரமாக அமைந்தது. இன்று இப்போராட்டங்களின் தொடர்ச்சியை தமிழ் அரசியல்வாதிகள் பௌத்த பிக்குமார்களுடன் ஒன்றிணைந்து முன்னெடுத்துச் செல்கின்றார்கள் என முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் மொஹமட் மில்ஹான் தெரிவித்தார்.

ஆயுதப் போராட்டத்தின் தொடர்ச்சியை தமிழ் அரசியல்வாதிகள் பிக்குமாருடன் இணைந்து கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு அமைய தற்போது தரமுயர்த்தினால் தமிழ்த் தரப்பு நாளை நாட்டு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முக்கிய பதவிகளுக்கு தமிழர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று போராடுவார்கள் இவற்றை நிறைவேற்ற நாட்டு மக்கள் ஒத்துழைப்பார்களா?

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை உள்ளடக்கிய 10 கோரிக்கைகளை முன்வைத்து முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பினர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை புதுக்கடை நீதிமன்றத்தின் அருகில் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து முஸ்லிம் மக்கள் உளவியல் ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அனைத்து இடங்களிலும் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இதன் பின்னணியில் அரசியல்வாதிகள் செயற்படுகின்றார்கள். கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறு கோரி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் மற்றும் கருணா போன்றவர்கள் போராட்டங்களை முன்னெடுப்பது பாரிய விளைவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தும்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அன்று ஆயுதமேந்திப் போராடியதன் விளைவு பாரதூரமாக அமைந்தது. இன்று இப்போராட்டங்களின் தொடர்ச்சியை தமிழ் அரசியல்வாதிகள் பௌத்த பிக்குமார்களுடன் ஒன்றிணைந்து முன்னெடுத்துச் செல்கின்றார்கள்.

இந்நாட்டில் சிறுபான்மை மக்கள் என்ற ரீதியில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அன்று தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இன்று முஸ்லிம் மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். தற்போதைய நிலையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக தமிழ் மக்களை திசை திருப்பி விடும் அரசியல் சூழ்ச்சிகளே காணப்படுகின்றன.

யதார்த்த தன்மையை சிறுபான்மை இன மக்கள் ஒன்றிணைந்து புரிந்துகொள்ள வேண்டும். ஒரு தலைப்பட்சமாகச் செயற்படும் ஒரு சில பௌத்த பிக்குகள் தற்போது முன்வைக்கும் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் எதிர்காலத்தில் தமிழ் - முஸ்லிம் சமூகத்திற்கு இடையில் பாரிய பிரச்சினைகள் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## இவ்வாரம் மரணதண்டனை நிறைவேற்றப்படலாம்

### மன்னிப்புச்சபை அச்சம்



(கொழும்பு)

போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட 13 பேருக்கும் மரண தண்டனையை நிறைவேற்றும் திட்டத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடனடியாக நிறுத்தவேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்தது.

தேசிய போதைப்பொருள் ஒழிப்புவாரமான இந்த வாரத்தில் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கான இரகசியமான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என ஊடகங்களில் வெளியான தகவல்கள் குறித்து அச்சமடைந்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்தது.

இந்தவாரம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டால் கடந்த 1976 ஆம் ஆண்டின் பின்னர் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட முதற் தடவையாக இது காணப்படும் என சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியது.

இதேவேளை மரண தண்டனை குறித்த தனது சாதகமான வரலாற்றை இலங்கை கைவிடப்போகின்றது என வெளியாகும் அறிக்கைகளால் நாங்கள் ஏமாற்றமடைந்துள்ளோம் என சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான இயக்குநர் பிராஜ் பட்நாயக் தெரிவித்தார்.

மரண தண்டனையை நிறைவேற்றுவதன் மூலம் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களை கட்டுப்படுத்த முடியாது என குறிப்பிட்ட அவர் மரண தண்டனை நிறைவேற்றப்படுவது மனித உயிர்களை பாதுகாப்பது முக்கியமானதாக கருதப்படும் மனிதாபிமான சமூகத்தை கட்டியெழுப்புவதில் ஏற்பட்டுள்ள தோல்வியையே புலப்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

பழிவாங்கும் நோக்கில் மேலும் மரணங்கள் இடம்பெறுவது இலங்கைக்கு தற்போது தேவையற்ற விடயம் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை ஜனாதிபதி மைத்திரி மரணதண்டனையை நிறைவேற்றும் நோக்கத்துடன் உள்ளார் என எங்களுக்கு தகவல்கள் கிடைத்ததென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# பஞ்ச் கொடுத்த பின்ச்

## ● அரையிறுதியில் ஆஸி உறுதி
## ● இங்கிலாந்து சரணாகதி

உலக கிண்ணத் தொடரின் அரையிறுதிக்கு முதல் அணியாக முன்னேறியது அவுஸ்திரேலியா. நேற்று நடந்த லீக் போட்டியில் இங்கிலாந்தை 64 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இங்கிலாந்தில் 12வது உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. லண்டன், லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்த லீக் போட்டியில் நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதின.


ஆக்ரோஷமாக ஆடி சதம் கடந்த ஆஸி அணித் தலைவர் பின்ச்

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி அணித் தலைவர் மோர்கன் களத் தடுப்பை தேர்வு செய்தார்.

**சுப்பர் ஆரம்பம்**

அவுஸ்திரேலிய அணிக்கு அணித்தலைவர் பின்ச், வோர்னர் ஜோடி சுப்பர் ஆரம்பம் கொடுத்தது. வோர்னர் 20வது அரை சதம் எட்டினர். மொயீன் அலி சுழலில் வோர்னர் (53) சிக்கினார். கவாஜா 23 ஓட்டங்களுக்கு போல்டானார்.

சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்த பின்ச், ஒருநாள் அரங்கில் 15வது சதம் எட்டினார். அடுத்த பந்தில் சிக்சருக்கு ஆசைப்பட்ட பின்ச் (100), ஆட்ட மிழந்தார்.

**மக்ஸ்வெல் ஏமாற்றம்**

மக்ஸ்வெல் 12 ஓட்டங்களுடன் வூட் வீசிய 'ஷோர்ட் பிட்ச்' பந்தில் ஆட்டமிழந்தார். ஸ்ரொய்னிஸ் (8) ஓட்.. ஆட்டமிழந்தார். தடுமாறிய ஸ்மித் 38 ஓட்டங்கள் எடுத்தார். கம்மின்ஸ் (1) கைவிட்டார். கடைசி ஓவரில் கரி 11 ஓட்டங்கள் எடுத்து உதவினார்.

50 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 285 ஓட்டங்கள் எடுத்தது. கரி (38), ஸ்டார்க் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**விக்கெட் சரிவு**

இங்கிலாந்து அணிக்கு பேர்ஸ்டோவ், வின்ஸ் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. அவுஸ்திரேலிய 'வேகங்கள்' மிரட்டினர். பெஹ்ரன்டர்ப் வீசிய முதல் ஓவரின் 2வது பந்தில் வின்ஸ் 'டக்' அவுட்டானார். மறுபக்கம் தன் பங்கிற்கு மிரட்டிய ஸ்ரார்க், ஜோ ரூட் (8), மோர்கனை (4) வீழ்த்த, இங்கிலாந்து 26/3 ரன் என திணறியது. பேர்ஸ்டோவ் 27 ஓட்டங்களுடன் திரும்பினார்.

**ஸ்ரோக்ஸ் ஆறுதல்**

ஸ்ரோக்ஸ் ஒருநாள் அரங்கில் 18வது அரைசதம் எட்டினார். இவர் 89 ஓட்டங்கள் எடுத்த போது ஸ்ரார்க் வீசிய 145 கி.மீ., வேக 'யார்க்கரில்' போல்டானார். மொயீன் அலியும் 6 ஓட்டங்களுக்கு திரும்பினார். வோக்ஸ் (26), அடில் ரஷித் (25), ஆர்ச்சர் (1) சொதப்பினார்.

இங்கிலாந்து அணி 44.4 ஓவர்களில் 221 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அவுஸ்திரேலியா 64 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# நியூசியை சமாளிக்குமா பாக்.,


பயிற்சியின்போது நியூசிலாந்து அணியின் போல்ட்

உலக கிண்ணத் தொடரில் நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகள் இன்று மோதுகின்றன. இதில் கட்டாய வெற்றியை நோக்கி பாகிஸ்தான் களம் காண்கிறது.

இங்கிலாந்தில் ஐ.சி.சி., உலக கிண்ணத் தொடர் நடக்கிறது. இன்று பேர்மிங்காமில் நடக்கவுள்ள லீக் போட்டியில் நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

நடப்பு தொடரில் தோல்வியே சந்திக்காமல் நியூசிலாந்து, இந்திய அணிகள் மட்டுமே வலம் வருகின்றன. நியூசிலாந்து புள்ளிப் பட்டியலில் (11) முதலிடம் வகிக்கிறது. துவக்க ஜோடியான கப்டில் (5 போட்டி, 133 ஓட்..). முன்ரோவின் (113) செயல்பாடு பெரிதாக இல்லை. மொத்த அணியையும் அணித் தலைவர் வில்லியம்சன் தோளில் சுமக்கிறார். இரண்டு சதம், ஒரு அரை சதம் உட்பட 373 ஓட்., குவித்துள்ளார். 'சீனியர்' வீரர் ரொஸ் ரெய்லர் கைகொடுத்தாலும், ரொம் லெதம் ஏமாற்றுகிறார். நீஷம், கிராண்ட் ஹோம் என கடைசி வரை வெற்றிக்கு போராட வீரர்கள் உள்ளனர்.

வேகப்பந்துவீச்சாளர்கள் போல்ட், பெர்குசன் இடையே ஆரோக்கியமான போட்டி நிலவுகிறது. சான்ட்னரின் 'சுழல்' பணி (5 போட்டி, 3 விக்.,) சிறப்பாக இல்லை.

**தடுமாறும் பாக்.,**


பாகிஸ்தான் அணி தடுமாறினாலும், தென்னாபிரிக்காவை வீழ்த்தியது. மொத்தமாக ஆறு போட்டியில் இரண்டில் மட்டுமே வென்றுள்ளது. மீதமுள்ள மூன்று போட்டிகளிலும் வென்றாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அணியின் பலவீனமே, சீரான ஆட்டம் இல்லாததுதான். இமாம், பகார் ஜமான் நம்பிக்கை தருகின்றனர். இரண்டு அரைச்சதம் அடித்துள்ள பாபர் ஆஸம், ஓட்டம் குவிக்கிறார். மொஹமட் ஹபீஸ், சொகைப் மலிக் 'சீனியர்' என்ற பொறுப்புடன் விளையாடுவது இல்லை. அணித் தலைவர் சர்பராஸ் தேவைக்கேற்ப செயற்படுவதில் கோட்டைவிடுகிறார்.

இத்தொடரில் மிகுந்த சந்தேகத்திற்கு இடையே இடம்பிடித்தார் மொஹமட் ஆமிர். 'வேகத்தில்' மிரட்டிய இவர் 5 போட்டியில் 15 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இவருக்கு ஒத்துழைப்பு தர யாரும் இல்லாதது அணிக்கு பின்னடைவு.




# காயம் தந்த சோகம்

## உலகக்கிண்ணத்தில் இருந்து ரசல் அவுட்


ஆன்ரே ரசல்

மே.தீவுகள் அணியின் சகலதுறை வீரர் ஆன்ட்ரே ரசல், முழங்கால் காயம் காரணமாக உலகக் கிண்ணத்த தொடரில் இருந்து பாதியில் விலகினார்.

இங்கிலாந்தில், ஐ.சி.சி., உலக கிண்ணத் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில் விளையாடி வரும் மே.தீவுகள் அணியில் சகலதுறை வீரர் ஆன்ட்ரே ரசல் இடம் பிடித்திருந்தார். சமீபத்தில் பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியின் போது இவரது முழங்காலில் காயம் ஏற்பட்டது.

இதனால் இவர், நியூசிலாந்துக்கு எதிராக விளையாடவில்லை. காயம் முழுமையாக குணமடைய நீண்ட நாட்கள் ஆகும் என்பதால், உலகக் கிண்ணத் தொடரில் இருந்து பாதியில் விலகினார். இவர். 4 போட்டிகளில், 36 ஓட்., 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி உள்ளார்.

ரசலுக்கு பதிலாக 'ரொப் ஓர்டர்' துடுப்பாட்ட வீரர் சுனில் அம்ப்ரிஸ் (வயது - 26), தேர்வு செய்யப்பட்டுள்ளார். கடந்த மாதம் அயர்லாந்தில் நடந்த முத்தரப்பு ஒருநாள் தொடரில் அயர்லாந்துக்கு எதிராக 148 ஓட்டங்கள் குவித்த இவர், இதுவரை 6 ஒருநாள் போட்டிகளில் (316 ஓட்.,) விளையாடி உள்ளார்.

உலக கிண்ணத் தொடரில் விளையாட அம்ப்ரிசுக்கு ஐ.சி.சி., அனுமதி அளித்துள்ளது.

இதனால் இவர், வரும் 27ல் மான்செஸ்டரில் நடக்கவுள்ள இந்தியாவுக்கு எதிரான போட்டிக்கு முன், மே.தீவுகள் அணியில் இணைந்து விடுவார்.

# ஒரு அடி முன்னாடி இரு அடி பின்னாடி

## டு பிளசி புலம்புல்


டு பிளசி

"பாகிஸ்தானுக்கு எதிரான தோல்வியால் அவமானம் அடைந்தோம். ஒரு அடி முன்னால் நடந்தா, இரண்டு அடி பின்னோக்கி செல்வது அணிக்கு நல்லதல்ல," என டுபிளசி தெரிவித்தார்.

உலக கிண்ணத் தொடரில் எதிர்பார்ப்புக்கு மாறாக தென்னாபிரிக்க அணி சொதப்பி வருகிறது. 7 போட்டிகளில் 5ல் தோற்ற (1 வெற்றி, 1 ரத்து) இந்த அணி அரையிறுதி வாய்ப்பை இழந்தது. இதுகுறித்து தென்னாபிரிக்க அணி யின் தலைவர் டுபிளசி கூறியதாவது,

பாகிஸ்தானுக்கு எதிரான தோல்வி எங்களை பேரழிவுக்கு தள்ளிவிட்டது. இப்படியே செல்வது கடினமானது. இந்த போட்டியில் நாங்கள் விளையாடிய விதத்தால் அவமானத்தின் உச்சிக்கே சென்று விட்டோம். மோசமான பந்துகள் அதிகம் வீசினோம். ஒருவேளை சரியான வேகம் மற்றும் அளவில் வீசியிருந்தால், அவர்களு க்கு தொல்லை கொடுத்திருக்கலாம்.

இதேபோல துடுப்பாட்டத்திலும் சொதப்பினோம். சிறப்பான ஆரம்பம் தந்து, 'பார்ட்னர்ஷிப்' நன்றாக சென்றது. இதன் பின் விக்கெட் சரிந்து விட்டது. சராசரிக்கும் குறைவான அளவில் தான் விளையாடி னோம். ஏனெனில் ஏற்கெனவே செய்த தவறுகளை அடுத்தடுத்து செய்தோம். ஒரு அடி முன்னால் நடந்தால், இரண்டடி பின் னோக்கிச் சென றோம். சிறந்த அணிக்கு இது நல்ல தல்ல.

தென்னாபிரிக்க அணிக்காக வீரராக மற்றும் அணித் தலைவராக விளையாடுவதில் பெரு மைப்படுகிறேன். ஏனெனில் இது எனக்கு நிறைய கொடுத்துள்ளது. ஆனால் எனது கிரிக்கெட் வாழ்க்கையில் உலக கிண்ணத் தொடரில் இப்படி மோசமான தோல்வியுடன் வெளியேறுவது அவமானமாக உள்ளது. எங்கள் தரத்துக்கு தகுந்து நாங்கள் விளையாட வில்லை என்பதால் மக்களுக்கு எங்களை விமர்சிக்க அனைத்து விதத்திலும் உரிமை உள்ளது. இவ்வாறு டுபிளசி கூறினார்.

# இலங்கையில் அமெரிக்கத் தளம் அமைக்க எதிர்ப்பு

# மைக் போம்பியோவின் விஜயம் இரத்தாக காரணம்

## இந்தியன் எக்னமிக் ரைம்ஸ் சுட்டிக்காட்டு

(புதுடில்லி)

**இலங்கையில் அமெரிக்கத் தளத்தை அமைப்பதற்கு காணப்படும் எதிர்ப்புக்கள் காரணமாகவே அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் போம்பியோ இலங்கைக்கான தனது விஜயத்தை இரத்துச்செய்தார் என இந்தியாவின் எக்னமிக் ரைம்ஸ்செய்தி வெளியிட்டது. இலங்கை விவகாரங்களை உன்னிப்பாக அவதானிப்பவர்களின் தகவல்களை அடிப்படையாக வைத்து எக்னமிக் ரைம்ஸ் இந்த செய்தியை வெளியிட்டது.**



இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமெரிக்காவின் ஆதரவை வெளியிடுவதற்காக நாளை 27 ஆம் திகதி மைக்போம்பியோ மேற்கொள்ளவிருந்த விஜயம் திட்டமிடல் பிரச்சினைகளால் இரத்துச் செய்யப்பட்டது என அமெரிக்கத் தூதரகம் தெரிவித்ததுடன் மைக் போம்பியோ பிறிதொரு தினத்தில் விஜயம் மேற்கொள்வார் எனவும் குறிப்பிட்டதாக எக்னமிக் ரைம்ஸ் இந்தியன் ரைம்ஸ் இணையத் தளம் செய்தி வெளியிட்டது.

மைக்போம்பியோ இந்தியாவிற்கும் ஓசாகாவில் இடம்பெறும் ஜி 20 உச்சிமாநாட்டிற்கும் செல்லவுள்ள அதேவேளை இந்த இரண்டு விஜயங்களுக்கும் இடையில் இலங்கை செல்லத் திட்டமிட்டிருந்தார்.

அவர் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் இந்து சமுத்திர மற்றும் இந்தோ பசுபிக் கடற்போக்குவரத்து சுதந்திரம் உட்பட பல விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

இந்து சமுத்திரத்தில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வரும் நிலையில் இலங்கையில் மூலோபாய பிரசன்னத்தை கொண்டிருப்பதற்கு அமெரிக்கா விரும்புகின்றது என எக்னமிக் ரைம்ஸ் தெரிவித்தது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் கொழும்பு துறைமுகத்தில் சீனாவின் நீர்மூழ்கிகள் தரித்து நின்றன எனத் தெரிவித்த எக்னமிக் ரைம்ஸ் எதிர்காலத்தில் சீனாவின் கடற்படை நடவடிக்கைகளுக்கு அம்பாந்தோட்டை துறைமுகம் பயன்படுத்தப்படலாம் என்ற அச்சம் காணப்படுகின்றது எனவும் சுட்டிக்காட்டியது.

இலங்கையில் அமெரிக்க படையினரின் பிரசன்னத்தையும் அமெரிக்காவின் தளம் அமைவதையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கடுமையாக எதிர்ப்பதாக அறிய முடிவதாக எக்னமிக் ரைம்ஸ் தெரிவித்தது.

அமெரிக்காவின் இந்தத் திட்டத்திற்கு எதிராக அதிகரித்து வரும் உணர்வுகளே அமெரிக்க இராஜாங்க செயலாளரின் விஜயம் இரத்துச் செய்வதற்கான பிரதான காரணமாக அமைந்தது என கொழும்பின் தகவல்கள் தெரிவித்தன என எக்னமிக்ரைம்ஸ் வெளியிட்ட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## தற்கொலைதாரிகளின் டி.என்.ஏ.அறிக்கை வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஒப்படைக்கப்படும்

(கொழும்பு)

அம்பாறை - சாய்ந்தமருது பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் உயிரிழந்த 15 பேரின் மரபணு பரிசோதனை அறிக்கையை நீதிமன்றம் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கமைய குறித்த அறிக்கை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஒப்படைக்கப்படும்.

உயிரிழந்தவர்களின் மரபணு பரிசோதனை அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக இரசாயனப் பகுப்பாய்வு திணைக்கள பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி கல்முனை சாய்ந்தமருது சுனாமி கிராமத்தில் உள்ள வீடொன்றில், பாதுகாப்புத் தரப்பினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையில் துப்பாக்கிச்சமர் இடம்பெற்றது.

இதன்போது பயங்கரவாதிகள் மேற்கொண்ட தற்கொலை தாக்குதலில் சஹ்ரானின் உறவினர்கள் உட்பட 15 பேர் உயிரிழந்திருந்தனர்.

அவர்களில் தற்கொலை தாக்குதல்களை மேற்கொண்ட சில பயங்கரவாதிகளினதும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களினதும் சடலங்கள் கடந்த 7 ஆம் திகதி தோண்டி எடுக்கப்பட்டன.

இவ்வாறு தோண்டி எடுக்கப்பட்ட சந்தேகநபர்களின் உடற்பாகங்கள் மரபணு பரிசோதனைகளுக்காக இரசாயனப் பகுப்பாய்வு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நீர்கொழும்பில் நேற்று பரபரப்பு! பாக்.பிரஜைகள் தப்பியோட்டம் பொலிஸார் துப்பாக்கிச் சூடு!

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பில் நேற்றுக் காலை சிறைக் கைதிகள் தப்பியோடியமையால் அந்தப்பகுதியில் பரபரப்பு நிலை ஏற்பட்டது.

நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களே இவ்வாறு தப்பியோடினர்.

பாகிஸ்தான் பிரஜைகள் இருவரும் நைஜீரிய பிரஜை ஒருவரும் தப்பியோடியதாக நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்ற பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மூன்று கைதிகளும் நீண்ட தூரம் ஓடிச் சென்றமையால் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். எனினும் தப்பிச் சென்ற கைதிகளைப் பிடித்த பொலிஸார் சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றனர்.

வெளிநாட்டு பிரஜைகளான இவர்கள் ஏன் தப்பிச் சென்றார்கள், இதன் பின்னணியில் யாரும் செயற்பட்டார்களா? என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லபடியாக அமையலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மேடம்:** கொடுக்கல்- வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் நலன் கருதி பயணங்கள் இடம்பெறலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**இடபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் புகழ் கூடும்.

**மிதுனம்:** தொட்ட காரியங்கள் கைகூடும், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**கும்பம்:** குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, எதிர்பார்ப்புக்கள் எளிதில் நிறைவேறும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், ரோக பயமுண்டு.

**மகரம்:** சகோதர வழியில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப் பது நல்லது, வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்வு அவசியம், நடப்பதெல்லாம் நன்மைக்கென நினைக்க வேண்டிய நாள்.

**தனுசு:** உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்லும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், இல்லத்திற்குத் தேவையாக பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**துலாம்:** பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், பகைவர்கள் மனம் மாறுவர், முயற்களில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**கன்னி:** பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, காரிய அனுகூலமுண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| சந் | | சுக் | சூரி.புத ராகு |
| | | | செவ் |
| | | | |
| சனி, கேது | குரு | | |

சந்திராஷ்டமம் அத்தம்

**26.06.2019**

ஆனி 11, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு

நவமி பின்னிரவு 3.49 மணிவரை

ரேவதி முழுவதும்

சுபநேரம் 4.25-5.55 மணிவரை

இராகுகாலம் 11.55-1.25 மணிவரை

உலக போதை ஒழிப்பு தினம்

வளவன்

# யாழில் 5-ஜி தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டால் 5 மாதச் சிசு கூட கருவிலே அழியும்!

## மருத்துவர்கள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையால் நிறுவப்பட்டுவரும் ஸ்மாட் செல்லூடர் கோபுரங்களின். செயற்பாட்டை விரைவுபடுத்த 5-ஜி தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுமாயின் கருவில் உள்ள 5 மாதச் சிசு கூட கருவிலே அழிந்துவிடும் என மருத்து வர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

யாழ்.மாநகர சபையால் அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தொழில்நுட்ப சேவையை விரிவுபடுத்தும் நோக்கில் தனியார் நிறுவனம் ஒன்றினூடாக நவீன தொழில்நுட்ப சேவையை வழங்கும் நோக்கில் 10 இற்கும் மேற்பட்ட தொலைத் தொடர்புக் கோபுரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

குறித்த நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கோபுரங்களில் தொழில்நுட்ப சேவை தொடர்பாக மாநகர சபை உறுப்பினர்களுக்கோ அப் பகுதி மக்களுக்கோ தெளிவான விளக்கம் அளிக்கப்படாமல் குறித்த கோபுரங்கள் அமைக்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் தரப்பில் குற்றம் சாட்டப்படுகிறது.

மாநகரத்தின் அபிவிருத்திக்கு தொழில்நுட்பச் சேவை அவசியமான நிலையில் மக்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய தொழில்நுட்பங்கள் பொருத்தப்படுமாயின் குறித்த சேவை தொடர்பில் மக்களின் எதிர்ப்பை சந்திக்க வேண்டி ஏற்படும்.

யாழ்.மாநகர சபையால் அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தொலைத் தொடர்பு சேவையை நவீனப்படுத்த குறித்த தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கும் போது மக்களிடமோ, சுகாதாரத்துறை மற்றும் சிவில் அமைப்புக்களுக்கு குறித்த திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தப்படாமல் ஒப்பந்தம் சபையால் கைச்சாத்திடப்பட்டது.

மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பிரதேசங்களில் குறித்த தொலைத்தொடர்புக் கோபுரங்கள் நிறுவப்பட்டு வருகின்றமையும் இதனூடாக குறித்த நிறுவனம் துணை நிறுவன சேவையை விரிவுபடுத்தும் நோக்கில் 5-ஜி தொழில்நுட்பத்தை பிரயோகிக்க நேரிடும்.

இவ்வாறு 5-ஜி தொழில்நுட்பம் பிரயோகிக்கப்பட்டால் அதனூடாக வெளியேற்றப்படும் றேடியேசன் கதிர் வீச்சுக்கள் மனித மற்றும் விலங்குகளின் உடலில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும். உலகில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கூட பரிந்துரையில் உள்ள ஓர் தொழில்நுட்பச் செயற்பாட்டை இலங்கையில் அதுவும் யாழில் பரிசோதனை செய்ய நினைப்பது எதிர்காலச் சந்ததியினரை அழிக்கும் செயல் என மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்தனர். (இ-10)

## 1008 சங்காபிஷேகப் பெருவிழா

நல்லூர் நாவலர் வீதி மடத்தார்பதி ஈழத்து சீரடி சாயி மந்திர் 13 ஆவது வருஷாப்திக நவோத்திர சகஸ்ர (1008) கலச சங்காபிஷேகப் பெருவிழா நாளை 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகும். இதில், மாலை 6.30 மணியளவில் பூஜை இடம்பெற்று பின் திரிமுக தர்ஷன வீதியுலாவும் இடம்பெறும். (5)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய விகாரி வருட மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் நடைபெறும்.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் தீர்த்தோற்சவமும் (ஆனி உத்தரம்) இடம் பெறவுள்ளன. (5)

◆◆◆◆◆◆◆◆◆◆◆


நல்லூர் மூத்த விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளன.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 8 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடி இறக்கமும் நடைபெறவுள்ளன. (5)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை வட மேற்கு பிரப்பம்பதி ஸ்ரீசெல்வ விநாயகப் பெருமான் தான் தோன்றி ஸ்ரீ ஞான வைரவப் பெருமான் ஆலய மணவாளக் கோல சங்காபிஷேகம் இன்று 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறும். (5)




யாழ்ப்பாணம் வண்ணை வட கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான கொடி யேற்றம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

## சாவகச்சேரி நகரசபைக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்

சாவகச்சேரிப் பிரதேச சபைக்கு அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பில் நான்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

சாவகச்சேரிப் பிரதேச சபையில் குறித்த கட்சியின் சார்பில் பங்குபற்றிய நான்கு உறுப்பினர்கள் தாமாகப் பதவி விலகியதை அடுத்து புதிய உறுப்பினர்களாக சி.கஜன்,க.துர்க்கா,இ.யோகேஸ்வரன், ஜெ.நிதர்சன் ஆகியோர் கட்சியின் சிபாரிசுக்கு அமைய யாழ். உதவித் தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்டனர்.

இவ்வாறு நியமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்களும் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை அமர்வில் பங்குபற்றினர். (இ-5-10-114)

# நொதேண் சமூகத்திற்கு செய்யும் சேவை பாராட்டுக்குரியது

## யாழ். வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் பாலராஜ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

விளையாட்டுக்கழகம் என்ற ரீதியில் நொதேண் சமூகத்திற்கு செய்யும் சேவை பாராட்டுக்குரியது என யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி த.பாலராஜ் தெரிவித்தார்.

நொதேண் விளையாட்டுக் கழகத்தின் மின்னொளியிலான நிரந்தரக் கரப்பந்தாட்ட ஆடுகள திறப்பு விழாவை முன்னிட்டு நடைபெற்ற புலமைப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.வலயத்துக்குட்பட்ட கல்வியங்காடு மாணவர்களை கௌரவிக்க நொதேண் எடுத்த முயற்சிக்கு யாழ்.வலயத்தின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான வர் என்ற ரீதியில் நன்றி தெரிவித்தார்.

விளையாட்டுக்கழகம் என்ற ரீதியில் இப்படியான சேவையை தொடர்ந்து செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்ட பாலராஜ் எதிர்காலத்தில் க.பொ.த. சாதாரண தரம் மற்றும் க.பொ.த. உயர் தரம் ஆகிய பரீட் சைகளையும் நொதேண் மாண வர்களுக்கு நடத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

எவ்விதமான சவால்கள் வந்தாலும் வலயம் என்ற ரீதியில் முழுமையான ஒத்துழைப்பை நொதேணுக்கு வழங்குவதாகவும் உறுதியளித்தார். (ம)

யாழ்.செய்திகள்

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான மணவாளக் கோல அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை முதல் 30.07.2019 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரையான 28 நாட்கள் நடைபெறவுள்ளன.

தினமும் மாலை 4 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் நடைபெறவுள்ளன.

அலங்கார உற்சவத்தின் 25 ஆம் நாள் காலை 1008 சங்காபிஷேகமும், மாலை 4.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும் நடைபெற்று இரதபவனியும் இன்று 26 ஆம் நாள் பகல் தீர்த்த உற்சவமும் நாளை 27 ஆம் நாள் பூங்காவனமும் நாளை மறுதினம் 28 ஆம் நாள் வைரவர் சாந்தியுடன் நிறைவு பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## குழாய்க் கிணறு அடிப்பவர்கள் பிரதேச சபையின் அனுமதி பெற வேண்டும்

சாவகச்சேரிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி குழாய்க்கிணறு அடிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக சாவகச்சேரிப் பிரதேச சபையில் நேற்று முன் தினம் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

குழாய்க்கிணறு அடிக்கும் போது நீர் வில்லிருந்து அதிக நீரை வெளியே எடுப்பதால் உப்பு நீர் உட்புகுவதற்கான சாத்தியங்கள் அதிகமாக இருப்பதாகவும் இதனால் எதிர்காலத்தில் குடிநீருக்குப் பாரிய தட்டுப்பாடு ஏற்படும் எனவும் தெரிவித்து சபை உறுப்பினர் கே.குகானந்தன் முன்மொழிவை சமர்ப்பித்தார்.

இதனை ஆராய்ந்த சபை இனிவரும் காலங்களில் தமது சபைக்குட்பட்ட பகுதிகளில் குழாய்க்கிணறு அடிக்க வேண்டுமாயின் சபையின் அனுமதி பெற்றே அடிக்க வேண்டும்.அவ்வாறு அனுமதி பெறப்படாமல் குழாய்க் கிணறு அடிப்பவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சபையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. (5-10-114)

## பொதுச்சந்தை வியாபாரிகளின் கோரிக்கை, குறைபாடுகள் தீர்க்கப்படும்

### நகர சபை தவிசாளர் சிவமங்கை உறுதிமொழி

சாவகச்சேரி பொதுச்சந்தை வியாபாரிகளுக்கும்-சாவகச்சேரி நகரசபையினருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை நகரசபையின் மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது சந்தையில் இடம்பெறுகின்ற சட்ட விரோத செயற்பாடுகளைத் தடுக்கும் முகமாகவும் நகரசபையின் வருமானத்தை உயர்த்தும் நோக்கிலும் சந்தையில் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பாகவும் அதனை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. சந்தையை அபிவிருத்தி செய்ய நிதி கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் விரைவில் வியாபாரிகளின் கோரிக்கைகள் மற்றும் குறைபாடுகள் தீர்த்து வைக்கப்படும் என தவிசாளர் சிவமங்கை இராமநாதன் வியாபாரிகளுக்கு உறுதி மொழி வழங்கினார். இச் சந்திப்பில் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர், செயலாளர், கணக்காளர், வருமானவரிப் பரிசோதகர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், நகரசபை உறுப்பினர்கள் மற்றும் சாவகச்சேரி பொதுச் சந்தை வியாபாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். சாவகச்சேரி பொதுச் சந்தையை குத்தகைக்கு வழங்குவது என்ற சபைத் தீர்மானத்தைக் கண்டித்து வியாபாரிகள் அண்மையில் ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர். அந்த ஆர்ப்பாட்டத்தின் போது முன்வைக்கப்பட்ட கோரிக்கையை சாவகச்சேரி நகர சபையினர் நிவர்த்தி செய்த நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-30)

## இலவசத் திருமணம் இறை அருளால்

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் கோட்பாட்டுக்கு இணங்கி சாதி, சமய வேறுபாடுகளின்றி அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு வழிகாட்டும் ஓர் நிகழ்வாகும். தாய், தந்தையரை இழந்து நிர்க்கதியாகி நிற்கும் இறைவனின் குழந்தைகளுக்கு திருமணம் செய்ய இறையருள் கைகூடியுள்ளது.

- மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- ஆறு திருமணத் தம்பதிகளுக்கும் ஒரே மேடையில் திருமணம் நடைபெறும்
- திருமணத்துக்கான பட்டுப்புடைவை, வேட்டி, சால்வை, மஞ்சள் கயிறில் ஒரு பவுன் தாலியுடன் குடியிருக்க வீடு, வீட்டுக்கான சமையல் பாத்திரங்களும் வழங்கப்படும்
- இறைவனின் குழந்தைகளுக்கு சாத்திர பொருத்தம் தேவையில்லை
- விரும்பம் உள்ளவர்கள் சுய விருப்பங்களுடன் புகைப்படத்தையும் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்
- மாற்றுத்திறனாளிகள் ஏற்கனவே திருமணம் நிச்சயித்திருப்பின் இருவரது புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்

**உங்கள் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு தபாலில் அனுப்பவும்**

விளம்பர இல.9368
C/O வலம்புரி,
இலக்கம் 3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

9368


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### கடைகள் வாடகைக்கு வழங்குதல் தொடர்பான. மீள் கேள்வி அறிவித்தல்

சுன்னாகம் உப அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய மூன்று கடைகள் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக வலிகாமம் தெற்கு பிரதேச சபையால் குத்தகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 27.06. 2019 தொடக்கம் 10.07.2019 பி.ப 3.00 மணி வரை.கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி : 11.07.2019 பி.ப 2.00 மணி.கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி: 11.07. 2019 பி.ப 2.00 மணி.கேள்வி திறக்கப்படும் இடம் : தலைமை அலுவலகம், வலி.தெற்கு பிரதேச சபை.

| கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT & NBT தவிர) | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்வி படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாது) (VAT & NBT தவிர) |
|---|---|---|---|
| மேல்மாடி கடை இல : 1 | 1,320.000.00 | 26.100.00 | 1,000.00 |
| மேல்மாடி கடை இல : 2 | 1,320,000.00 | 26,100.00 | 1,000.00 |
| மேல்மாடி கடை இல : 4 | 1,320.000.00 | 26.100.00 | 1,000.00 |

நிபந்தனைகள்:-

1.விண்ணப்பதாரி வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

2.கேள்விப்படிவம் பெற விரும்புவோர் கிராம சேவகரால் உறுதிப்படுத்திய கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.

3.கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை தனித்தனி கடித உறையில் இட்டு "செயலாளர்,வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு மூலப்பிரதி, இணைப்பிரதி எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.

4.மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும். குறித்த மாத வாடகை பணத்தினை ஒவ்வொரு மாதம் 31ம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதக்கட்டணத்தின் 10 வீதம் தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

5.கேள்விச்சித்திகாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தை செய்து கொள்ள வேண்டும்.

6.சித்திகர குத்தகைகாரர் வலிகாமம் தெற்கு பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.

7.சித்திகர குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக 03 மாத வாடகை தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.

8.சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிம சான்றிதழையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

9.கேள்விப்பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு/ தவிசாளருக்கு உண்டு.

10.மேலதிக விபரங்களை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

க.தர்ஷன்,
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

## பெயர் மாற்றம்

2ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் வசிக்கும் எனது பெயர் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் ஞானப்பிரகாசம் யேசுதாஸ் என பதியப்பட்டுள்ளது. அப்பெயரை ஞானப்பிரகாசம் அல்பேட் என மாற்றம் செய்து அப்பெயரையே என் சார்ந்த சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
ஞானப்பிரகாசம் அல்பேட்

(9377)

## ஏலவிற்பனை

ஜீ.எச்.ஏ.டீ.சில்வா அன் கோ 480B, A9 வீதி, கிளிநொச்சி நிறுவனத்தில் 30.06.2017 இற்கு முன்பாக வைக்கப்பட்ட அடைவு நகைகள் யாவற்றையும் 27.07.2019 இற்கு முன்பாக மீட்கவும் அல்லது மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை செலுத்தி புதுப்பித்துக் கொள்ளவும்.
புதுப்பிக்கத் தவறின் 28.07.2019 இல் ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

ஜீ.எச்.ஏ.டீ.சில்வா அன் கோ,
கிளிநொச்சி.

(9370)

## வேலணை பிரதேச சபை
## நயினாதீவு உயர் திருவிழா தொடர்பான அறிவித்தல்

பிரதேச சபைக்குரிய காணிகளில் வியாபாரம் செய்ய விரும்புவோர் 27.06.2019 அன்று முற்பகல் 11.00 மணிக்கு இடம்பெறும் பகிரங்க ஏலத்தில் பங்குபற்றி உரிய கட்டணத்துடன் இடத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

வியாபார அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள்
1. வியாபார இடம் தொடர்பான சம்மதக் கடிதம்/ ஒப்பந்தம்
2. கிராமசேவகரது நற்சான்றிதழ்
3. பொலிஸாரிடமிருந்து பெறப்பட்ட நற்சான்றிதழ்
4. பிரதேச சபையினது வியாபார அனுமதிப்பத்திரம்

வியாபார நிலையங்களுக்கு காணி வழங்குபவர்கள் கவனத்திற்கு
1. தங்களின் காணி என்பதனை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
2. காணி வழங்கிய விபரம்
3. பிரதேச சபைக்குரிய கட்டணம்

இது தொடர்பான மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம். (சி-9781)

உபதவிசாளர், பிரதேச சபை, வேலணை

## வெளிநாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கட்டுநாயக்க பகுதியில் வெளிநாட்டு துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார். கட்டுநாயக்க பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆட்டியம் பலம் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை திட்டமிட்ட குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போதே சந்தேகநபர் கைது செய் யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

ஆடியம்பலம் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து வெளிநாட்டுத் துப்பாக்கி ஒன்றும் 3 தோட்டாக்களும் மீட்கப்பட்டன.

திட்டமிட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் சந்தேகநபரை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதுடன், குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி 3
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L, Manager
எதிர்பார்ப்பு:படித்தபெண். அரசதொழில் (உள்நாடு.வெளிநாடு)
தொ.இ: B/9851

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி.பா: 18செவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:O/L, Dubai
எதிர்பார்ப்பு: A/L,தொழில் புரிபவர் (உள்நாடு)
தொ.இ: B/9853

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்:அவிட்டம் 2
கி.பா: 54 3/4 செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:CIMA, MBA, Chief Accountant
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, Lecturer, B.Sc Teacher (உள்நாடு)
தொ.இ: B/9855

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம் 4
கி.பா: 6சூரிசெவ் 3 இல்
உயரம்: 172cm
தகைமை/தொழில்: HNDA,Credit Officer
எதிர்பார்ப்பு: உள்நாடு. வெளிநாடு
தொ.இ: B/9857

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: 39 1/4
உயரம்: 166cm
தகைமை/தொழில்:HNDM, தபாலதிபர்
எதிர்பார்ப்பு: உள்நாடு.வெளிநாடு
தொ.இ: G/9858

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:சதயம்
கி.பா: 11 3/4 சூரிசெவ் 10 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:MSCI, Manager, UK
எதிர்பார்ப்பு: பட்டதாரி (உள்நாடு. வெளிநாடு)
தொ.இ: G/9863

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி 2
கி.பா: 23 3/4
உயரம்: 5'
தகைமை/தொழில்:B.Sc, PGD, ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி ஆசிரியர். அரசதொழில் (உள்நாடு. வெளிநாடு)
தொ.இ: G/9866

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா: 22 1/2 செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA பட்டதாரி
எதிர்பார்ப்பு: பட்டதாரி ஆசிரியர். அரசதொழில் (உள்நாடு)
தொ.இ: G/9867

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# போதைப் பொருளை ஒழிப்பதற்காக கிராமங்களில் கண்காணிப்புக்குழுக்கள்



போதையற்ற தேசத்தை உருவாக்குவதன் ஊடாக வளமான தேசத்தை சந்ததியினரிடம் கையளிப்பதற்கு ஜூன் 24 முதல் ஜூலை 1 வரை தேசிய ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு, நான் போதையை எதிர்க்கிறேன் என்னும் தொனிப்பொருளில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் விசேட செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் தேசிய செயற்றிட்டங்களின் யாழ்.மாவட்ட கருத்திட்ட ஒருங்கிணைப்பாளருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் இந்தச் செயற்றிட்டம் இடம்பெற்றது.

போதை ஒழிப்பிற்கான செயற்றிட்ட நிகழ்வில் ஜனாதிபதி செயலகத்தால் நடைமுறைபடுத்தப்படும் திட்டங்களான சிறுநீரக நோய்தடுப்பு, பிள்ளைகளை பாதுகாப்போம், சுற்றாடல் பாதுகாப்பு, உணவு உற்பத்தி, போசாக்கு திட்டம், வனரோபா ஆகிய திட்டங்களின் முன்னேற்ற நகர்வுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

யாழ்.மாவட்ட செயலணி குழுவும் நாடாளுமன்ற உறுப்பினரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.போதை ஒழிப்பிற்காக விசேடமாக கிராம மட்டத்தில் கண்காணிப்புக் குழுக்களை உருவாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

வறுமைக்கும் சுற்றுச் சூழலுக்கும் தொடர்பிருப்பதை போன்று போதைவஸ்து பாவனைக்கு அடிமையானோரும், கிராமமும் பல்வேறு பிரச்சினைகளுடன் வறுமையை எதிர்நோக்குவதற்கு காரணமாக அமைந்துள்ளதாகவும், தண்டனைகள் பெற்று சிறைச்சாலைகளுக்கு செல்வோரும் சீர்திருத்தம் பெற வேண்டுமே தவிர மேலும் குற்றங்களையும் போதைவஸ்து பாவனையை ஏற்படுத்தக்கூடிய தொடர்புகளை ஏற்படுத்துபவராக இருக்க முடியாது எனவும் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் தேசிய செயற்றிட்டங்களின் யாழ்.மாவட்ட கருத்திட்ட ஒருங்கிணைப்பாளருமான அங்கஜன் இராமநாதன் சுட்டிக்காட்டினார்.

மேலும் சிறுநீரக பாதிப்பை எதிர்நோக்கியுள்ள பிரதேசத்திற்கு வடிகட்டிய நீரை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சட்டவிரோதமான மண் அகழ்வை தடுப்பதற்காகவும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துமாறு கூறப்பட்டது. உணவு உற்பத்தி செயற்றிட்டத்தின் மூலம் 6000 ஹெக்டேயர் அளவில் மரவள்ளி செய்கையை ஊக்குவிப்பதற்கு கிராம சக்தி சங்கங்களின் ஊடாக உற்பத்தி கிராமங்களை இனம் காண்பதற்கும் பரிந்துரை செய்யப்பட்டது. உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் நலன் கருதி இம்முறையும் உரிய பயனாளிகளுக்கு கிடைக்கக்கூடியவாறு மானிய அடிப்படையில் ஜனாதிபதியின் செயற்றிட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும் விவசாய துறை சார் அதிகாரியிடம் உரிய பயனாளிகளை இனம் காணுமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தெரிவித்தார். (இ-7)

# நேர்முகத் தேர்வு



(கொழும்பு)

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சால் கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர் நேர்முகத்தேர்வில் யாழ்.மாவட்டத்தில் இருந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர். குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் கடந்த மே மாதம் கோரப்பட்டிருந்த நிலையில் தற்போது நேர்முகத்தேர்வு அலரி மாளிகையில் இடம்பெற்று வருகிறது. யாழ்.மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத்



தேர்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம் பெற்றது. இதில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டனர். நாடு பூராகவும் உள்ள 7500 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு





(சாவகச்சேரி)

போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கொடிகாமம் போக்கட்டி அ.த.க. பாடசாலையில் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் க.குணசாந்தன், கிராம உத்தியோகத்தர் சர்மிளா மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ம.இந்திரவதனி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வுகளை மாணவர்களுக்கு வழங்கினர். (7-29-30-114)

# போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு வாகனப் பேரணி





(யாழ்ப்பாணம்)

போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு, போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு வாகனப் பேரணி யாழ்.மாவட்ட செயலகத்திலிருந்து ஆரம்பமாகி கிளிநொச்சி மாவட்டத்தை நோக்கிப் பயணமாகியது.

யாழ்.மாவட்ட செயலகத்திலிருந்து நேற்றுக் காலை 8.45 மணியளவில் இந்தப் பேரணி ஆரம்பமானது. இந்தப் பேரணியை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் ஆரம்பித்து வைத்தார்.

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில், இம் மாதம் 24 ஆம் திகதி முதல், ஜூலை மாதம் முதலாம் திகதி வரை போதை ஒழிப்பு தினமாக ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்தச் செயற்றிட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. போதை ஒழிப்பிற்கு ஒன்றுபட்டு செயற்பட்டு, போதைப்பொருள் பழக்கத்தில் இருந்து விடுபடுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், போதை ஒழிப்பு வாரத்தில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு திணைக்களங்கள் மற்றும் செயலகங்கள் ஊடாக வெவ்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. போதைக்கு எதிராக விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில், இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வடமாகாண ஆளுநரின் வேண்டுகோளுக்கு இணங்க வடமாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இருந்து ஒரு வாகனப் பேரணியை உருவாக்கி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், எல்லோரும் ஒன்றிணைந்து, இந்த போதைக்கு எதிராக செயற்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில், யாழ்.மாவட்ட செயலகத்திலிருந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு மற்றைய மாவட்டங்களில் இருந்தும், சென்று, கிளிநொச்சி மாவட்ட மத்திய கல்லூரி மைதானத்தில் கூட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டது.

இந்த போதைப் ஒழிப்பிற்கு அனைத்து தரப்பினரும் தமது ஒத்துழைப்பை வழங்கி போதைப் பொருளை இல்லாதொழிக்க ஆதரவு வழங்க வேண்டுமென அவர் மேலும் கேட்டுக்கொண்டார். (இ-101)

# தரமுயர்த்தல் கோரிக்கைக்கு சாவகச்சேரி பிரதேச சபை ஆதரவு வழங்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

கல்முனை உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கோரி இடம்பெற்று வருகின்ற முயற்சிகளுக்கு சாவகச்சேரி பிரதேச சபை ஆதரவு வழங்க வேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் தங்கவேலு கோரிக்கை விடுத்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இந்தக் கோரிக்கையை சபையில் முன்வைத்தார். மேலும் இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

எமது சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் கல்முனை உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்த ஆதரவு வழங்கி சபைத் தீர்மானம் ஒன்றை ஏகமனதாக நிறைவேற்ற வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-30)

## ஏனைய மதத்தவர்கள்

# இந்துத்தெய்வங்களை தூசிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும்

## இந்து சமயப் பேரவை தீர்மானம்

**(யாழ்ப்பாணம்)**

**இந்து சமயத்தையும் இந்துத் தெய்வங்களையும் துசிப்பதை ஏனைய மதத்தினர் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் மத முரண்பாடுகளை வளர்க்க வேண்டாம் என்றும் கோரி யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை தீர்மானம் நிறைவேற்றியது.**

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட,

**தீர்மானம் -1**

இந்து மக்களின் மிகப்புராதன தீர்த்தமாகிய திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று அமைந்திருக்கும் சூழலில் பண்டு தொட்டு அம்மக்கள் வழிபாடியற்றி தம் நேர்த்திகளை நிறைவேற்றும் சிவன் ஆலயத்தையும் அதனைத் தொடர்ந்து அருள்மிகு விநாயகர் ஆலயத்தையும் உடைத்து அவற்றின் அத்திபாரங்களையும் கிளறிப் பெயர்த்து அழித்து ஒழித்த இலங்கை அரசின் தொல் பொருளியல் திணைக்களத்தின் தான்தோன்றித்தனமும் விஷமத்தனமானதுமான செயற்பாடுகளையும் இந்து சமயப்பேரவை மிக வன்மையாகக் கண்டிப்பதுடன் இந்நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துவதுடன் அவ்விடத்தில் சிவன் மற்றும் விநாயகர் ஆலயங்களை நிறுவுவதற்கு வேண்டிய முழு நட்ட ஈட்டையும் உடனடியாக கொடுப்பதுடன் இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தில் வெடுக்குநாறி மலை மற்றும் நீராவியடியில் நிகழ்த்திய கொடூரமான செயல்களுக்கும் தகுந்த பிராயச்சித்தங்கள் செய்து பல்லாயிரம் ஆண்டுகளாக இங்கு வாழ்ந்து வரும் இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்குமிடையில் திட்டமிட்ட மத முரண்பாடுகளை தோற்றுவித்து அவர்களுக்கிடையே சுசப்புணர்வை தோற்றுவிக்கும் முயற்சிகளைதொல்பொருளியல்திணைக்களம் உடனடியாக நிறுத்துவதுடன் இலங்கையின் ஐக்கியத்திற்கும்சுபீட்சத்திற்கும்பாடுபடவேண்டுமென உறுதியாக கேட்டுக் கொள்கின்றது.

**தீர்மானம்-2**

இந்நாட்டை பூர்வீகமாகக் கொண்டு பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழின மக்கள் அந்நிய ஐரோப்பிய அரசுகள் 16 ஆம் நூற்றாண்டில்ஆக்கிரமிக்கும்வரை இறைமையுடனான ஆட்சியை நடத்தியதை நினைவுகூர்ந்து 1948 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கை நாட்டுக்கு சுதந்திரம் கொடுத்த பொழுது பெரும்பான்மை மக்களை நம்பி ஏமாற்றப்பட்டு தமது உரிமைகளை ஒவ்வொன்றாக இழந்து அடக்கு முறைகளால் நொந்துபோய் 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தால் உயிர்களையும் உடைமைகளையும் இழந்து பரிதவித்த தருணத்தில் மொழி, மதம், கலாசாரம் ஆகியவற்றால் ஒன்றுபட்ட எமது தாய் நாடாகிய பாரததேசம் முன்வந்து இனப்பிரச்சினைகளைத் தீர்த்து தமிழ்மக்கள்தமதுஉரிமைகளைப் பெற்று கண்ணியமாக வாழ வழி செய்தும் அவ்வுரிமைகளை இன்று வரை அனுபவிக்கத் தடைசெய்யும் இலங்கை அரசை வழிக்கு கொண்டுவரும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு மீண்டும் தமிழ் மக்கள் கௌரவத்துடன் வாழ வழிசெய்யுமாறு பாரத நாட்டின் அரசை இந்து சமயப்பேரவை அதிவிநயமாகவேண்டிநிற்கின்றது.

**தீர்மானம்-3**

இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதாக ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசு அச்செயற்பாட்டில் இதுவரை ஒரு அடிகூட எடுத்து வையாதிருப்பதையிட்டு எமது அதிருப்தியை வெளியிடுகின்றோம்.

**தீர்மானம்-4**

வரலாற்று சிறப்பு மிக்க எமது ஆலயங்களினதும் எமது நிறுவனங்களினதும் தர்மச் சொத்துக்களை மாற்று மதத்தினர் உபயோகித்துவரும் துர்ப்பாக்கிய நிலையை மாற்றியமைக்க ஏற்ற பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கோருகின்றோம்.

**தீர்மானம்-5**

பௌத்த மதகுருவான ஞானசாரதேரரை விடுதலை செய்ய எத்தகைய அதிகாரத்தை ஜனாதிபதி பிரயோகித்தாரோ அதேபோன்று சிறைச்சாலையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பகிரங்கமாக கோருகின்றோம்.

**தீர்மானம்-6**

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்திற்கு மதிப்பளித்து அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பகிரங்கமாகக் கோருகின்றோம்.

**தீர்மானம்-7**

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு இந்து ஆலயங்களும் இந்து நிறுவனங்களும் நிகழ்ச்சிநிரல் ஒன்றைத் தயாரித்து அதனைச் செயற்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்று கோருகின்றோம். மேலும் இவை சம்பந்தமாக இந்து ஆலயங்களையும் இந்து நிறுவனங்களையும் அழைத்து கருத்தரங்குகளை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம்-8**

வரலாற்று பிரசித்தி பெற்ற இலங்கையின் முதன்மையான சிவாலயமாகிய திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மாந்தைச்சந்தியில் அமைந்துள்ள வாயில் வளைவை இவ்வாண்டு சிவராத்திரி தினத்திற்கு முதல் தினத்தன்று கத்தோலிக்க மதகுரு மார்க்கஸ்ஸாலும் அவரோடு சேர்ந்த மக்களாலும் பலாத்காரமாக வன்முறை ரீதியில் உடைத்தெறிந்தமையையும் அதனை சரியென நியாயப்படுத்தும் மன்னார் கத்தோலிக்க மறைமாவட்ட திருச்சபையையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மற்றும் அரச காணிகளிலும் கடற்கரைப்பிரதேசங்களிலும் இந்துக்களது பிரதேசங்களிலும் இந்து ஆலயங்களுக்கு அருகேயும் கிறிஸ்தவ மற்றும் பிறமத சொரூபங்களை சட்டவிரோதமாக நிறுவும் வன்முறைச் செயல்களையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்து சமயத்தையும் குறிப்பாக இந்து சமயத் தெய்வங்களைத் தூசிப்பதை ஏனைய மதத்தினர் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் மத முரண்பாடுகளை வளர்க்க வேண்டாம் என்றும் கோருகின்றோம் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (இ)

---

## குறை'களை' பதிகம் 50

# நேர்முகத்தேர்வென்றால் கொழும்பு செல்வது தான் தீர்வோ...

*கோழி மேய்த்தாலும்*
*கொர்ணமென்ட் வேலையாம் என்று*
*அரச வேலை தேடி*
*லோலோவென அலைகிறது தமிழினம்*

*பாவி இனத்தின் அரச வேலை ஆசை*
*வரும் வேகன்சி ஏதும் தவறுவதில்லை*
*இதுவோ அதுவோ*
*எதுவோஒன்று கிடைத்தால் போதுமென*
*நிறைகிறது தபால் பெட்டிகள்*

*அண்மையில் அலரிமாளிகையில்*
*ஒரு நேர்முகத் தேர்வு*
*வடக்கில் இருந்து மூவாயிரம்பேர்*
*ஒருநாள் ஒரே நேரம்*
*மூவாயிரம் பேர் ஒன்று கூடினால்*
*மூச்சு விடலாமா?*


*பெடியள் எண்டால்*
*பம்பல் அடிச்சுக்கொண்டு*
*அங்கை இங்கை நிண்டாங்கள்*
*பெண்பிள்ளைகள்-அதிலும்*
*கைக்குழந்தையுடன் சிலர்*
*வேகும் வெயிலுக்குள்*
*கடுகு வெடிச்சது போல வெடிச்சுதுகள்*

*நேர்முகத் தேர்வுகளை*
*அந்தந்த மாவட்டங்களுக்கு*
*அதிகாரிகள் வந்து நடத்தினால்*
*நேரமும் மிச்சமாகும்*
*செலவும் சிக்கனமாகும்*
*அலைச்சலும் இல்லை*
*அலுப்பும் இல்லை*

*மக்கள் சேவையைத் தேடிச் செல்லாது*
*மக்களைத் தேடிச் சேவை சென்றால்*
*அதுதான் உண்மையான மக்கள் சேவை*
*இதை உணர்ந்து கொண்டு*
*அடுத்த கட்டங்களில்*
*நேர்முகத் தேர்வுகளை*
*அந்தந்த மாவட்டங்களில் நடத்தினால்*
*அமையும் அமையும்*
*நன்றாய் அமையும்*
*இதுவே எம் தாழ்மையான வேண்டுகோள்*

**மாவை.நா.கஜேந்திரன்**

---



**யாழ்.நாரந்தனை வடக்கு செல்வா முன்பள்ளி சிறார்களின் மாதிரிச் சந்தை அண்மையில் நடைபெற்றது.**

# போதையிலிருந்து விடுபட்ட நாடு

## போதை ஒழிப்பு வாரத்தின் வடமாகாண நிகழ்வு கிளிநொச்சியில்






(பரந்தன்)

போதையிலிருந்து விடுபட்ட நாடு என்ற தொனிப்பொருளில் போதை ஒழிப்பு வார வடக்கு மாகாணத்தின் நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்பின் பேரில் தேசிய போதைப்பொருள் தடுப்பு வாரம் இம்மாதம் 23 திகதி தொடக்கம் முதலாம் திகதி வரை நாடளாவிய ரீதியில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.



அந்த வகையில் வடக்கு மாகாணத்தின் நிகழ்வு நேற்று முற்பகல் பத்து மணிக்கு கிளிநொச்சியில் ஆரம்பமாகி நடைப்பெற்றது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த திணைக்களங்களின் விழிப்புணர்வு வாகன அணிவகுப்பு கிளிநொச்சியை வந்தடைந்து கிளிநொச்சி நகரிலிருந்து ஊர்வலமாக மத்திய கல்லூரி மைதானத்தை சென்றடைந்தது.

பின்னர் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், காதர் மஸ்தான், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட அரச அதிபர்கள், வடக்கு மாகாண பிரதம செயலாளர், அமைச்சின் செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் மற்றும் இராணுவத்தினர், உத்தியோத்தர்கள். மாணவர்கள், சமூக மட்டப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(9-250-285-286-312)

## 'நான் போதையை எதிர்க்கிறேன்' விழிப்புணர்வு வாகனப் பேரணி





# முல்லை. மாவட்ட பொது வைத்தியாலையில் மகப்பேற்று வைத்திய நிபுணர் இல்லை

## வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலைக்கான மகப்பேற்று வைத்திய நிபுணர் மற்றும் மயக்கமருந்து வைத்திய நிபுணர் இன்மையால் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம்.உமாசங்கர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவுகின்ற வைத்தியத்துறைக்கான வெற்றிடங்கள் தொடர்ந்தும் நிரப்பப்படாத நிலை காணப்படுகின்றது.

அதாவது முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாவட்டப் பொதுவைத்தியசாலை, ஆதார வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள், ஆரம்ப சுகாதார வைத்திய நிலையங்கள் உள்ளடங்கலான பதினாறுக்கும் மேற்பட்ட வைத்தியசாலைகள் நெருக்கடிகளை எதிர் கொள்கின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சுகாதாரத்துறை பற்றி ஆராயப்பட்டபோது கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம்.உமாசங்கர், முல்லைத்தீவு மாவட்ட பொது



வைத்தியசாலையில் நீண்டகாலமாக கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு மேலாக மகப்பேற்று வைத்திய நிபுணர் இல்லாத நிலை காணப்படுகின்றது.

கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதி சுகாதார அமைச்சருடனான சந்திப்பிலும் இந்த விடயத்தை வலியுறுத்தியிருக்கின்றேன்.

17 ஆம் திகதி வெளிநாட்டு பயிற்சிகளை முடித்த மகப்பேற்று வைத்திய நிபுணர் குழுவொன்று வருவதாகவும் அதில், முன்னுரிமை அளிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இது மட்டுமல்ல, மயக்க மருந்து நிபுணர் இல்லாதநிலை காணப்படுகின்றது. இதைவிட ஏனைய வைத்திய நிபுணர்களும் வெளிநாட்டு பயற்சிகளுக்குச் செல்ல வேண்டிய நிலையில் இருப்பதனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிரந்தரமான ஒரு வைத்திய நிபுணர்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வைத்தியத்துறையைப் பொறுத்தவரையில் ஆளணி என்பது மிகப் பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

அதாவது ஐந்து வைத்திய சாலைகளில் ஒரு வைத்தியர்கள் என்ற அடிப்படையில் சேவையாற்றி வருகின்றனர்.

மூன்று வைத்தியசாலைகளில் நிரந்தரமான வைத்தியர்கள் இல்லை என்று குறிப்பிட்ட அவர், மாவட்டப்பொது வைத்தியசாலையின் நோயாளர் விடுதி வசதி மற்றும் பல்வேறு தேவைப்பாடுகள் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். (9-315)

## வவுனியாவில்

# மரக்கடத்தல் முறியடிப்பு

(வவுனியா)

வவுனியா நைனாமடுவில் நேற்று முன்தினம் மாலை மரக் கடத்தலில் ஈடுபட்டவர்களை பொலிஸார் வழிமறித்து மரக் கடத்தல் முயற்சியை முறியடித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

புளியங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் அடிப் படையில் புளியங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விதானகே தலைமையிலான பொலிஸார் நேற்று முன்தினம் மாலை நெடுங்கேணி நைனாமடு வீதியில் சோதனை மேற்கொண்டுள்ளனர். புளியங்குளம் நோக்கி சட்டவிரோதமான முறையில் பெறுமதிமிக்க முதிரைக் குற்றிகளை 7 மகேந்திரா கப் ரக வாகனத்தில் எடுத்துச் சென்ற போது வாகனத்தை வழிமறித்துள்ளனர். அப்போது வாகனத்தை நிறுத்தாது சாரதி வேகமாக செலுத்தியுள்ளார்.



வாகனத்தை துரத்திச் சென்ற பொலிஸார் சன்னாசிபரந்தன் பகுதியில் வழிமறித்த போது இருவர் தப்பித்துச் சென்றதுடன் வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர்கள் இருவரையும் கைது செய்ததுடன் முதிரைக் குற்றிகளையும் கைப்பற்றி மேலதிக விசாரணைகளுக்காக புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்தனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் நேற்று வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்திய போது 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்க நீதவானால் உத்தரவிடப்பட்டுள்ளது. (9)

# புகையிரதக் கடவை காப்பாளர்களுக்கு நிரந்தர நியமனம் வேண்டும்

எமது சேவையைக் கருத்திற் கொண்டு அரச நியமனங்களின் போது கடைப்பிடிக்கப்படும் அடிப்படைத் தகுதியில் மாற்றங்களை ஏற்படுத்தி எமக்கான நிரந்தரத் தீர்வு ஒன்றினை பெற்றுத்தர வேண்டும் என வடக்கு, கிழக்கு புகையிரதக் காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் றொகான் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

வவுனியா புகையிரக் கடவைக் காப்பாளர்களின் நிரந்தர நியமனம் தொடர்பான ஊடக சந்திப்பொன்று நேற்று வவுனியா ஊடக மையத்தில் இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஐந்து ஆண்டு காலமாக எங்களது நிரந்தர நியமனம் தொடர்பாக பலதரப்பட்ட வகையிலும் எங்களது முயற்சியை மேற்கொண்டு வருகின்றோம். நாள் ஒன்றுக்கு 250 ரூபா சம்பளத்தில் புகையிரத கடவைகளில் எமது கடமைகளை நேர்த்தியாக செய்து வருகின்றோம்.

தற்போது புகையிரத திணைக்களத்தில் சிபாரிசின் அடிப்படையில் பல ஊழியர்கள் இணைக்கப் படுகின்றார்கள். இருந்த போதும் அதில் எங்களுடைய ஊழியர்கள் உள்வாங்கப்படவில்லை.

வடக்கு, கிழக்கில் 450 ஊழியர்களும் அகில இலங்கை ரீதியில் 2359 பேரும் கடவைக்காப்பாளர்களாக இணைக்கப்பட்டுள்ளனர். இதில் பலர் அங்கவீன முற்றவர்களாகவும், வயது முதிர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

வடக்கு, கிழக்கில் 150 பேர் மாத்திரமே அரச தொழில் பெறுவதற்கான தகுதி உடையவர்களாக காணப்படுகின்றனர். எனவே இது தொடர்பான கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளோம் என மேலும் தெரிவித்தார். (9)

# நந்திக்கடலை துப்புரவு செய்ய வனஜீவராசிகள் திணைக்களம் முட்டுக்கட்டை

## கிடைத்த நிதி திரும்பிச் சென்றுள்ளதாக அரச அதிபர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நந்திக் கடலை துப்புரவு செய்வதற்கான நிதி கிடைக்கப் பெற்ற போதும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெறாதத னால் அந்தப்பணிகளை முன் னெடுக்க முடியவில்லை என்று மாவட்ட அரசாங்க அதிபர் ரூப வதி கேதீஸ்வரன் தெரிவித்துள் ளார்.

முல்லைத்தீவு நந்திகடல் பகுதியில் ஆயிரத்து ஐந்நூறு க்கும் மேற்பட்ட தொழிலாளர் கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றபோதும் குறித்த கடற்பகுதியில் காணப்படுகின்ற கழிவுகள் அகற்றப்பட்டு துப் புரவு செய்யப்படாமல் உள்ள துடன் குறப்பிட்ட காலத்தில் நந் திக்கடல் வற்று ஏற்படுகின் றது.

இதனால் தொழிலாளர்களின் தொழில் முழுமையாகப் பாதிக் கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த கடற் பகுதியை ஆழப்படுத்தித்தரு மாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்தபோதும் கடந்த ஆண்டு இதற்கான நிதி கிடைக்கப்பெற் றும் அந்த வேலைகள் முன் னெடுக்கப்படாத நிலையில் நிதி திரும்பிச் சென்றுள்ளதாக மீனவர்கள் குற்றம்சாட்டியுள்ள னர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட அரச அதிபர், இதனை துப்புரவு செய்வதற் கான நிதி கடந்த வருடம் கிடை க்கப்பெற்ற போதும், அதனை துப்புரவு செய்வதற்கான அனு மதிகளை வனஜீவராசிகள திணைக்களம் வழங்கவில்லை.

இது தொடர்பாக குறித்த திணைக்களத்தின் அதிகாரி கள் மட்டத்தில் கலந்துரையாடிய போது அதற்கான அனுமதி கிடைக்காததனால் அதனை செய்ய முடியாமல் போயுள்ளது.

மீளவும் மீனவர்களால் இந் தக்கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது.

இந்த வேலை உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டி யுள்ளது. இதுதொடர்பான கோரி க்கைகளை நாங்களும் முன் வைக்கின்றோம். இதற்கான முடிவுகளை அமைச்சு மட்டத் தில் எடுத்து இதனை முன்னெ டுக்க வேண்டுமென மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் கஜபதி தலைமையிலான குழுவினரை அனுப்பி இது தொடர்பில் ஆராய் வதாக வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் நேற்று முன்தி னம் தெரிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (9-315)

# வவு.பழைய பேருந்து நிலையத்தில் மீண்டும் சேவையை ஆரம்பித்துள்ள இ.போ.ச.- தனியார் பேருந்துகள்



(வவுனியா)

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் தனியார் பேரு ந்துச் சேவைகளும் இ.போ.ச. பேருந்துகளும் இணைந்து சேவையாற்றி வருகின்றன. கட ந்த புதன்கிழமை வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவனின் உத்தர விற்கு அமை வாக நேற்று முன் தினத்தி லிருந்து பழைய பேருந்து நிலையத்தில் உள் ளூர் பேருந்து சேவை கள் மேற் கொள்ளப் பட்டன. நேற்றைய தினத்திலிருந்து உள்ளூர் பேரு ந்து சேவைகளை இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்துகள் இணைந்து மேற் கொண்டு வருகின்றன.

புதிய பேருந்து நிலையத் திலிருந்து சேவைகளை மேற் கொள்ளும் அனைத்து உள்ளூர் பேருந்துகளும் பழைய பேருந்து நிலையத்தினூடாக தமது சேவை களை நேற்றுக் காலையிலிருந்து மேற்கொண்டு வருகின்றனர். இதனால் பழைய பேருந்து நிலையத்தின் செயற்பாடுகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள் ளன.

பழைய பேருந்து நிலை யத்தினூடாக பொதுமக்கள் தமது பயணங்களையும் மேற் கொண்டு வருவதால் பழைய பேருந்து நிலையத்தின் செயற் பாடுகள் வழமைக் குத்திரும்பி யுள்ளதை அவதானிக்க முடிந்தது. (9-250)

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா பொஹஸ்வெவ பகுதியிலிருந்து வவுனியா சந்தைக்குச் சென்ற விவசாயி காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி உயிரி ழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் பொஹஸ்வெவ பகுதியி லிருந்து வவுனியா நகரிலுள்ள சந்தைக்கு மோட்டார் சைக்கிளில் மரக் கறிகளைக் ஏற்றிச் சென்ற விவசாயி ஒருவர் மீது மாமடுவ வீதியிலுள்ள பிள்ளையார் கோவில் பகுதியில் மறைந்திருந்த காட்டு யானை தாக்கியுள்ளது. அப்பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய டொன்டடி ஆரியவம்ச என்ற விவசாயியே மேற்படி தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் பொஹஸ்வாவே பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.(9-250)




# தீக்காயங்களுக்குள்ளான இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

குடும்பத் தகராறு காரணமாக தனக்குத் தானே தீ மூட்டிய இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி முல்லைத்தீவு வைத் தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு தீர்த்தக்கரைப் பகுதியில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மனைவியை பயமுறுத்து வதற்காக தனது தலையில் பெற் றோலினை ஊற்றி தீயை மூட்டி யுள்ளார்.

இதன் போது எரிகாயாங்களு க்குள்ளான குறித்த குடும்பஸ்தர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து ள்ளார். (9-281)

# முல்லை.மாவட்ட அபிவிருத்திக்கு இரண்டாயிரத்து 290.423 மில்லியன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு வேலைத்திட்டங்களு க்காக இதுவரை இரண்டாயித்து 290.423 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப் பெற்று இதுவரை 551.209 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளதாக மாவ ட்ட செயலக தகவல்களில் தெரி விக்கப்பட்டுள்ளது.

அழிப்பேரலையினாலும் யுத் தத்தினாலும் பாதிக்கப்பட்ட முல் லைத்தீவு மாவட்டத்தில் பல் வேறு அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இவ் வாண்டு முல்லைத்தீவு மாவட் டத்தின் பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்காக இரண்டா யித்து 290.423 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப் பெற்று இதுவரை 551.209 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளதாக மாவட்ட செயலக தகவல்களில் தெரிவிக் கப்பட்டுள்ளது

அதாவது மீள்குடியேற்ற அமைச்சு, கிராம சக்தி வேலைத் திட்டம், கம்பரெலிய தேசிய உணவு உற்பத்தி தேசிய கொள் கைகள் மற்றும் பொருளாதார அமைச்சு உள்ளிட்ட 10 வரை யான நிதி மூலாங்கள் ஊடாக மேற்படி அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன. (9-315)

# மன்னார் நடுக்குடா பகுதியில் 939 கிலோகிராம் பீடி இலைகள் மீட்பு



(மன்னார் )

மன்னார் நடுக்குடா கடற் கரை பகுதியில் நேற்று முன் தினம் மாலை கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நட வடிக்கையின் போது 939.2 கிலோ கிராம் பீடி இலைகள் கொண்ட பொதிகள் மீட்கப்பட்டு ள்ளன.

வடமத்திய கடற்படை கட்ட ளையுடன் இணைக்கப்பட்ட கடற் படை வீரர்கள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது கைவிடப்பட்ட நிலையில் இருந்த 45 பொதிகளைக் கொண்ட பீடி இலைகளை மேற் படி மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக் காக யாழ்ப்பாணம் சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற் படையினர் தெரிவித்துள்ளனர்.

2019 ஆம் ஆண்டில் இது வரை 16 ஆயிரத்து 500 கிலோ பீடி இலைகளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (9-285)



முல்லைத்தீவு கரிப்பட்டமுறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு நேற்று நண்பகல் விஜயம் மேற்கொண்ட ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அங்கு மரத்தடி நிழலில் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

கல்வியூடாக உலகத்தின் எந்தவொரு உயரத்தினையும் எட்டிப் பிடிக்க முடியுமெனவும் கல்வியினை இடைவிடாது தொடர்ந்து சமூகத்தில் சிறந்த ஆளுமைகளாக மாறி பாமர மக்களுக்கு உதவி புரிய வேண்டுமெனவும் மாணவர்களைக் கேட்டுக்கொண்டார். (9)



கிராமசக்தி வேலைத்திட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று முன்தினம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் கிராமசக்தி வேலைத்திட்டத்தில் தெரிவான கிராமங்களின் முன்னேற்றம் தொடர்பில் ஆராய்ந்தனர். இதன்போது அக்கிராமங்களில் மேற்கொள் ளப்படப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், மக்களின் கருத்துக்கள், குறைகள், தேவைகள் என பலவும் ஆராயப்பட்டன. (9)

# பாரதம்

## குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காவிட்டால் நாடே முடங்குமளவுக்கு போராட்டம் வெடிக்கும்

### மு.க.ஸ்ராலின் எச்சரிக்கை

(சென்னை)

தமிழகத்தில் நிலவிவரும் குடிநீர்ப் பிரச்சினைக்கு அ.தி.மு.க. அரசாங்கம் உரிய தீர்வினைப் பெற்றுக்கொடுக்காவிட்டால், தமிழ் நாடே முடங்கும் அளவுக்கு பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்படும் என தி.மு.க. தலைவர் மு.க. ஸ்ராலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக தி.மு.க. சார்பில் சென்னை சேப்பாக்கத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.



குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், "தமிழக அரசிடம் நிதி, வேலை வாய்ப்பு, நீதி, நேர்மை, சட்டம் உட்பட தண்ணீருக்கும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. தேர்தல் வராமலேயே ஆட்சி மாற்றம் ஏற்படும்.

மழைக்காக யாகம் நடத்தியது தவறு எனக் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால் தங்களது பதவிகளை காப்பாற்றிக் கொள்ளவே யாகம் நடத்துகிறார்கள்" என அவர் மேலும் தெரிவித்தார். (7)

---

### ஊழல்வாதிகள் என்றால்

## சோனியாவையும் ராகுலையும் ஏன் சிறையில் அடைக்கவில்லை?

### மக்களவை காங்.தலைவர் கேள்வி


(டில்லி)

ஊழல்வாதிகள் என்றால் ஏன் சோனியாவையும் ராகுலையும் சிறையில் அடைக்கவில்லை? என காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி மத்திய அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்களவையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பேசிய மத்திய அமைச்சர் பிரதாப் சந்திர சாரங்கி "காங்கிரஸ் ஆட்சிக்காலம் நிர்வாகத் திறமையின்மை மற்றும் ஊழல்களால் நிரம்பியது" என்று கடுமையாக விமர்சித்தார்.

ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் கலந்துகொண்டு பேசிய காங்கிரஸ் மக்களவைத் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, "ஊழல்வாதிகள் என்றால் ஏன் சோனியாவையும் ராகுலையும் கைது செய்து சிறையில் அடைக்கவில்லை? அவர்களை நீங்கள் இந்த வழக்குகளில் கைது செய்துவிடுவீர்களா?





காங்கிரஸ் தலைவர்களை திருடர்கள் என்று கூறித்தான் பா.ஜ.க ஆட்சிக்கு வந்தது. ஆனால் அந்தத் தலைவர்கள் எல்லோரும் இப்போது இங்குதான் அமர்ந்திருக்கிறார்கள்.

காங்கிரஸ் தனது ஆட்சிக் காலத்தில் அணைகள் கட்டியும், கணிப்பொறியைப் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தும், விண்வெளி மற்றும் ஏவுகணைத் தொழில்நுட்பங்களில் வளர்ச்சியை அடைந்தும் அதைப்பற்றியெல்லாம் பேசி விற்பனை செய்யவில்லை" என மேலும் தெரிவித்தார். (7)

---

## தி.மு.க.நடத்தும் போராட்டங்களை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்

### ஜெயக்குமார் கூறுகிறார்

அரசியல் காழ்ப்புணர்வோடு தி.மு.க.நடத்தும் போராட்டங்களை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்களென அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஜெயக்குமார் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

"தண்ணீர் தட்டுப்பாடு குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் வாரம் ஒருமுறை ஆய்வுக் கூட்டம் நடத்தி, அதன் அடிப்படையில் அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை உட்பட தமிழகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் சுமார் 500 கோடி இந்திய ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டு அரசு சிறப்பாக செயற்பட்டு வருகிறது.

ஆனால் தி.மு.க. இத்தகைய செயற்பாடுகளை குழப்பும் வகையில் போராட்டங்களை முன்னெடுக்கின்றன. ஆனால் இவைகளை மக்கள் ஒருபோதும் நம்பமாட்டார்கள்" என ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். (7)

---

## ஆப்கானில் அதிரடிப்படை

## 51 பயங்கரவாதிக

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் படையினர் நடத்திய அதிரடித் தாக்குதலில் 35 தலிபான் பயங்கரவாதிகளும் 16 ஐ.எஸ். பயங்கரவாதிகளும் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்தி வரும் தலிபான்கள் மற்றும் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு ஆப்கானிஸ்தான் இராணுவம் போராடி வருகின்றது. அவர்களுக்கு நேட்டோ படை பக்கபலமாகச் செயற்பட்டு வருகின்றது.



---

## இரு போர் வி

## ஒரு விமானி

### மற்றைய விமா

(பெர்லின்)

ஜேர்மனியில் 2 போர் விமானங்கள் பயிற்சியின் போது நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

ஜேர்மனி நாட்டு விமானப்படைக்கு சொந்தமான மூன்று யூரோ போர் விமானங்கள் அந்நாட்டின் பிளீசென்சி பகுதியில் நேற்று முன்தினம் வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தன.

அப்போது எதிர்பாராத விதமாக இரண்டு போர் விமானங்கள் நடுவானில் ஒன்றோடு ஒன்று மோதின.

மோதிய சில விநாடிகளில் விமானங்கள் கட்டுப்பாட்டினை இழந்து, மியூரிட்ஸ் ஏரி அருகில் விழுந்து நொறுங்கின.

ஆனால்விமானங்கள்தரையை நெருங்குவதற்குள், விமானங்களில் இருந்த இரண்டு விமானிகளும் "பரசூட்" உதவியுடன் வெளியே குதித்தனர்.

இந்த விபத்தினை பார்த்துக் கொண்டிருந்த மற்றொரு போர் விமானத்தின் விமானி கட்டுப்பாட்டு அறைக்கு உடனடியாக தகவல் அளித்தார்.

இதனைத் தொடர்ந்து விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புக் குழுவினர், ஒரு விமானியை உயிருடன் மீட்டனர். மற்றொரு விமானியை தேடி வருகின்றனர். (7)



---


## எதியோப்பியாவில் ஆட்சிக் கவிழ்ப்புக்கு முயற்சி செய்த கும்பலின் தலைவனை சுட்டுக் கொன்றனர் பொலிஸார்

(அடிஸ் அபாபா)

எதியோப்பியாவில் அம்ஹாரா மாகாண அரசை கலைக்க முயற்சித்த கும்பலின் தலைவனை பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.

எதியோப்பியா நாட்டில் பிரதமர் அபிய் அஹமத் தலைமையிலான ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டனர். கடந்த சனிக்கிழமை அரசுக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தில் வன்முறை வெடித்தது.

இதையடுத்து சிலமணி நேரத்தில் எதியோப்பியா நாட்டின் இராணுவத் தளபதி மேகொன்னேன், அவரது வீட்டில் மெய்க்காப்பாளரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இதேபோல், அம்ஹாரா மாகாண அரசை கலைக்கும் முயற்சியாக அந்த மாகாண ஆளுநரும் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தத் தாக்குதலுக்கு முன்னாள் இராணுவத் தளபதி தான் காரணம் என ஆளும் கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர். இந்நிலையில், ஆட்சியைக் கவிழ்க்க முயன்ற கும்பலின் தலைவன் எனச் சந்தேகிக்கப்படும் பிரிகேடியர் ஜெனரல் அசாமி நியூ டிசி கேவை பொலிஸார் சுட்டுக் கொன்றதாக அரசு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. அம்ஹாரா புறநகர்ப் பகுதியான பாகிர் தார் பகுதியில் அவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



நாட்டைப் பிளவுபடுத்த நினைக்கும் தீய சக்திகளுக்கு எதிராக மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்று பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார். (7)

---

## ஐ.

## விசா

### ஐ.



ஈரா
செய்து
கணக்க
யும் அ
விசார
லது வி
ஐக்கிய
யாளர்
விடுத்து
உல
சேர்ந்த
யேங்கே
ஐ.எஸ்.
பிகேபோ

# வெளிநாடு

## படையினர் தாக்குதல்
## திகள் உயிரிழப்பு!



இந்தநிலையில், நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள குனர் மாகாணத்தில் தலிபான்கள் மற்றும் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் நிலைகளை குறிவைத்து இராணுவத்தினர் அதிரடித் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இந்தத் தாக்குதலில் 35 தலிபான் பயங்கரவாதிகளும் 16 ஐ.எஸ் பயங்கரவாதிகளும்கொன்று குவிக்கப்பட்டனர். மேலும் பயங்கரவாதிகளின் பதுங்கு குழிகள், ஆயுத கிடங்குகள் உள்ளிட்டவை நிர்மூலமாக்கப்பட்டன. (7)

## விமானங்கள் மோதல்
## ானி உயிருடன் மீட்பு

### விமானியை காணவில்லை



## ஐ.எஸ்.உறுப்பினர்களை விசாரணை அல்லது விடுதலை செய்யவும்

### ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் வலியுறுத்து



ஈராக்கிலும் சிரியாவிலும் கைது செய்து தடுத்துவைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான ஐ.எஸ். உறுப்பினர்களையும் அவர்களது குடும்பத்தவர்களையும் விசாரணைக்குட்படுத்தவேண்டும் அல்லது விடுதலை செய்யவேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பசலெட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உலக நாடுகள் தங்கள் நாடுகளைச் சேர்ந்த ஐ.எஸ். உறுப்பினர்களை பொறுப்பேற்கவேண்டும் என வலியுறுத்தியதுடன் ஐ.எஸ். உறுப்பினர்களின் குழந்தைகள் மிகமோசமான மனித உரிமை மீறல்களிற்கு உட்பட்டுள்ளனர்எனவும்தெரிவித்தார்.

குற்றங்களில் ஈடுபடாதவர்கள் எனச் சந்தேகிக்கப்படாதவர்களை தொடர்ந்தும் தடுத்துவைத்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் சர்வதேச தராதரங்களின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுக்காத பட்சத்தில் ஐ.எஸ். உறுப்பினர்களின் வெளிநாட்டுக் குடும்பத்தவர்களை அவர்களது நாடுகளிற்கே திருப்பி அனுப்பவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (7)

### இரு நாடுகள் இடையே நீடிக்கும் பதற்றம்


## ஈரான் மீது கடும் பொருளாதாரத்தடை

### அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நடவடிக்கை

ஈரான் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா நேற்று விதித்தது. இதற்கான நிறைவேற்று ஆணையில் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

அணு ஆயுத தடை ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா-ஈரான் இடையே மோதல் ஏற்பட்டு இருந்த நிலையில், ஈரான் நாட்டின் மீது பறந்த அமெரிக்க உளவு விமானத்தை அந்த நாடு கடந்த வாரம் சுட்டு வீழ்த்தியது. இது அமெரிக்காவுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

எனவே ஈரான் மீது இராணுவத் தாக்குதல் நடத்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார். பின்னர் கடைசி நேரத்தில் அதை திரும்பப் பெற்றார். எனினும் ஈரான் மீது கோபத்தில் இருக்கும் அமெரிக்கா, அந்த நாட்டுக்கு ஏதாவது தண்டனை



விதிக்க வழி தேடி வந்தது.

இந்தநிலையில் ஈரான் மீது கடுமையான பொருளாதார தடைகளை அமெரிக்கா நேற்று விதித்தது. மேலும் ஈரானிய தலைவர் மற்றும் அதிகாரிகள் அமெரிக்காவில் நிதி பரிவர்த்தனை செய்யவும் தடை விதிக்கப்பட்டது. இதற்கான நிறைவேற்று ஆணையில் ட்ரம்ப் கையெழுத்திட்டார். (7)

## அமெரிக்காவின் தடைகளால் ஈரான் கடும் அதிருப்தி

### பேச்சுவார்த்தையும் நிராகரிப்பு

அமெரிக்கா விதித்துள்ள புதிய பொருளாதாரத் தடைகளால் கடும் அதிருப்தி அடைந்துள்ள ஈரான், அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தையை நிராகரித்துள்ளது.

அணு ஆயுத தடை ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா-ஈரான் இடையே மோதல் ஏற்பட்டு இருந்த நிலையில், ஈரான் மீது பறந்த அமெரிக்க உளவு விமானத்தை அந்த நாடு கடந்த வாரம் சுட்டு வீழ்த்தியது.

இதனால் ஈரான் மீது கோபத்தில் இருக்கும் அமெரிக்கா, ஈரான் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. மேலும் ஈரானிய தலைவர் மற்றும் அதிகாரிகள் அமெரிக்காவில் நிதி பரிவர்த்தனை செய்யவும் தடை விதிக்கப்பட்டது. இதற்கான நிறைவேற்று ஆணையில் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

இந்த புதிய பொருளாதாரத் தடைகளால் ஈரான் கடும் அதிருப்தி அடைந்துள்ளது. அத்துடன் அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தையையும் நிராகரித்துள்ளது.

இதுபற்றி ஈரான் நாட்டின் ஐ.நா. தூதர் மஜித் தாகத் ரவாஞ்சி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

ஈரான் மக்கள் மீதான பொருளாதாரப் போரை அமெரிக்கா நிறுத்த வேண்டும். மிரட்டும் போக்கு தொடரும் பட்சத்தில், பேச்சுவார்த்தையை தொடங்க முடியாது. அச்சுறுத்தல் இருக்கும் வரை, ஈரானும் அமெரிக்காவும் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையை தொடங்க எந்த வழியும் இல்லை. அத்தகைய பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை இன்னும் உருவாகவில்லை.

பாதுகாப்பை மேம்படுத்துவது தொடர்பாக பிராந்திய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். இந்த விடயத்தில் ஐ.நா. தனது பங்களிப்பை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (7)

## எரிவாயுக்குழாய் வெடித்ததில் 10 பேர் உடல் கருகி உயிரிழப்பு

(அபுஜா)

நைஜீரியாவில் எரிவாயுக் குழாய் வெடித்து விபத்துக்குள்ளானதில் 10 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவின் தெற்குப் பகுதியில் ரிவெர்ஸ் மாகாணத்தில் உள்ள கோம்கோம் நகரில் எரிவாயு உற்பத்தி செய்யும் எரிசக்தி நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் பராமரிப்புப்பணிகள் நடைபெற்று கொண்டிருந்தன. அப்போது சற்றும் எதிர்பாராத விதமாக அங்குள்ள எரிவாயுக் குழாய்களில் வெடிப்பு ஏற்பட்டது. இதனால் அங்கு எரிவாயு கசிந்து தீப்பிடித்தது.




கொழுந்துவிட்டு எரிந்த தீயில், பராமரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் பலர் சிக்கிக்கொண்டனர். உடனடியாக தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர்.

எனினும் இந்த கோர விபத்தில் 10 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர். (7)

# இலங்கைக் குண்டுத் தாக்குதல்களுடன் ஐ.எஸ். அமைப்புக்குத் தொடர்பில்லை

## மறைமுக சக்தியே காரணம்-ஹக்கீம்



(தலாத்து ஓயா)

**உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு இருக்கும் என்று தான் நம்பவில்லை எனவும் இதற்குப் பின்னால், முறைமுக சக்தி ஒன்றே இருந்திருக்கிறது எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவித்தார்.**

தலாத்துஓயாவில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

'இந்தத் தீவிரவாதத் தாக்குதல்களுக்குப் பின்னால், முறைமுக சக்தி ஒன்றே இருந்திருக்கிறது. இது தொடர்பாக நியாயமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். முஸ்லிம்களின் சனத்தொகை பெருக்கம் தொடர்பாக உதய கம்மன்பில. பொய்யான புள்ளி விபரங்களை வெளியிடுகிறார்" என்றும் ஹக்கீம் தெரிவித்தார். (இ-7)

# ஒருமைப்பாடு ஏற்பட்டால் மாத்திரமே மக்களின் பாதுகாப்பு உறுதியாகும்

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

(மருதானை)

நாட்டில் வாழும் சிங்கள. தமிழ். முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ இனத்தவரின் மத்தியில் ஒருமைப்பாடு ஏற்பட்டால் மாத்திரமே மக்களின் பாதுகாப்பு உறுதியானதாக இருக்கும். இனங்களுக்கு இடையிலான தேசிய ஒற்றுமையே மக்கள் பாதுகாப்பிற்கான அடிப்படையாகும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார்.


மதம் சார்ந்த தீவிரவாத



வெறித்தனத்தையும், இனவாதத்தையும் தோற்கடித்து தேசிய பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பையும், தேசிய ஒற்றுமையையும் உறுதிப்படுத்தும் நோக்கில் மக்கள் விடுதலை முன்னணியால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மருதானையிலுள்ள சமூக. சமய நடுநிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் வைத்து மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவால் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் உரையாற்றிய போதே டில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# தோப்பூர் உப பிரதேச செயலகத்தையும் உடனடியாகத் தரமுயர்த்த வேண்டும்

## மாகாண முன்னாள் உறுப்பினர் அன்வர் அறிக்கை



(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தின், தோப்பூர் உப பிரதேச செயலகத்தையும் தரமுயர்த்த வேண்டுமென கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆர்.எம்.அன்வர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்ட அவர்,

தோப்பூர் உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கோரி அப்பிரதேச மக்கள் பலமுறை அரசியல் ரீதியாக மட்டுமன்றி அஹிம்சை போராட்டத்திலும் ஈடுபட்டு வந்தனர்.

முஸ்லிம்கள் வாழும் தோப்பூர் பிரதேசத்தின் செல்வநகர் பகுதி. சேருவில பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்ட பகுதியாகும்.

இதன் காரணமாக கடந்த காலங்களில் அப்பகுதிக்குள் இருக்கும் நீநாகேணி முஸ்லிம்களின் காணிப் பிரச்சினை தொடர்பில் இன்னும் தீர்வு எட்டப்படாத நிலையிலும். காணி உறுதிப்பத்திரம் வழக்கப்படாத நிலையிலும் பல அநியாயங்கள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

புராதன பூமி என்ற போர்வையில் காணிகள் அபகரிக்கப்படுகின்ற நிலைமையே இங்கு காணப்படுகின்றது.

மக்களின் நியாயமான கோரிக்கை எதுவாக இருந்தாலும் எந்த இனமாக இருந்தாலும் அது கால தாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டும்.

நிலத்தொடர்போடு காணப்படும் அதிகாரபூர்வமான தோப்பூர் பிரதேச செயலகத்துக்கான கோரிக்கை இந்தத் தருணத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். அதனை நிறைவேற்றுவதற்குரிய சகல நடவடிக்கைகளையும் அரசியல் தலைமைகள் கட்சி பேதமின்றி. இன வேறுபாடின்றி முன்னெடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## படிப்பும் பண்பாடும்

ஒரு ஊரில் சோமநாதர் என்ற ஒரு பெரியவர் இருந் தாராம். மிகவும் நல்ல மனிதர். அவரிடம் பணம் இருந்தது. அதோடு குணமும் இருந்தது. அது மிகவும் அபூர்வம் தானே!

தர்ம சிந்தனை உள்ளவர். நாலு பேருக்கு நம்மால் முடிந்ததை செய்ய வேண்டும் என்று நினைக்கின்றவர். அவர் என்ன செய்தார் என்றால் இரண்டு பண்டிதர்களை வீட்டிற்கு அழைத்து அவர்களைக் கௌரவிக்க வேண்டும் என்று நினைத்தார்.

ஞான பண்டிதர் என்று ஒருத்தர். ராம பண்டிதர் என்று ஒருத்தர். அவர்கள் இரண்டு பேரையும் பார்த்து கொஞ்சம் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டுப் போக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சரி என்று ஒத்துக் கொண்டார்கள். ஒரு நாள் இரண்டு பேருமே வந்து சேர்ந்தார்கள். இந்தப் பெரியவர்கள் அவர்கள் இரண்டு பேரையும் மிகவும் அன்பாக வரவேற் றார். கூப்பிட்டு உட்கார வைத்தார். விருந்திற்கு ஏற்பாடு செய்தார்.

அதற்குள்ளே அந்த இரண்டு பண்டிதர்களிலே ஒருத் தர் நான் முதலிலே போய் குளித்து விட்டு வருகின்றேன் என்று புறப்பட்டார். அவர் புறப்பட்டுப் போனதன் பின் உட்கார்ந்திருந்த இன்னொருத்தரிடம் சோமநாதர் பேச்சுக் கொடுத்தார்.

இப்ப குளிக்கப் போயிருக்கின்றாரே உங்கள் கூட்டாளி ஞான பண்டிதர் அவர் பெரிய வித்துவான். தத்துவஞானி என்று ஊர் உலகமெல்லாம் பேசிக்கொள்கின்றார்களே என்றார். அப்படி அவரைப் புகழ்ந்து பேசியதை இவராலே சகிக்க முடியவில்லை.

ஊர் உலகத்திற்கு என்ன தெரியும் அவரைப் பற்றி! அவர் ஒரு பெரிய வித்துவான் என்று சொல்லிக் கொள் கின்ற அளவிற்கு அவரிடம் என்ன இருக்கின்றது? ஒன்றுமில்லை. எல்லாம் வெறும் வேஷம். உண்மையைச் சொல்லப் போனால் அது ஒன்றும் தெரியாத மாடு என்று பொரிந்து தள்ளிவிட்டார்.

அந்தப் பெரிய மனிதன் இவர் இப்படிச் சொல்லுவார் என்று கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. மனம் நொந்து போய் பேசாமல் உட்கார்ந்திருந்தார்.

சிறிது நேரத்திலே குளிக்கப் போயிருந்த ஞான பண்டிதர் திரும்பி வந்தார். அவர் வந்ததும் ராம பண்டிதர் குளிக்கப் புறப்பட்டார். இவர் போனதன் பின் ஞான பண்டிதரிடம் பேச்சுக் கொடுத்தார் சோமநாதர்.

ஏங்க உங்கள் கூட்டாளி பெரிய ஞானி போல இருக்கே? என்றார். இதைக்கேட்டதும் அவர் முகம் வாடிப் போய் விட்டது. யார் ஞானி அவரா? அவரைப் பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது போல இருக்கு. அது ஒரு மோசமான கழுதை! என்றார்.

இதைக் கேட்டதும் அந்தப் பெரிய மனிதன் இன்னமும் நொந்து போனார். பதில் எதுவும் சொல்லவில்லை. பேசாமல் இருந்தார்.

சாப்பாட்டு நேரம் வந்தது. குளிக்கப் போயிருந்தவரும் வந்து சேர்ந்தார்.

அந்தப் பெரியவர் இவர்கள் இரண்டு பேரையும் கூப்பிட்டுக் கொண்டு போய் உட்கார வைத்தார். ஒரு தட்டிலே புல்லு... ஒரு தட்டிலே தவிடு... கொண்டு வந்து வைத்தார். இதைப் பார்த்தவுடனே அந்தப் பண்டிதர்களுக்கு கோபம் வந்து விட்டது. எங்களை மிருகம் என்று நினைத்து விட்டீர்களா? எங்களை இப்படி அவமானப் படுத்துவதற்காகவா? உங்கள் வீட்டிற்கு கூப்பிட்டீங்க? என்று சொல்லி சத்தம் போட ஆரம்பித்து விட்டார்கள்.

ஐயையோ... அப்படியெல்லாம் நினைத்து விடாதீர்கள். நீங்கள் இரண்டு பேரும் பண்டித மணிகள். உங்கள் வார்த்தைக்கு மரியாதை கொடுத்தேன் அவ்வளவுதான்.

நீங்க தான் அவரை மாடு என்றீர்கள். அவர் தான் உங்களை கழுதை என்றார். மாடும் கழுதையும் என்ன சாப்பிடுமோ அதைத் தான் உங்கப் பண்டிதர்கள் என்று நினைத்து விருந்திற்கு ஏற்பாடு செய்தேன்.

நீங்கள் இங்கே வந்த பிறகு தான் நீங்கள் யார் என்பதை உங்கள் மூலமாகவே புரிந்து கொண்டேன். அதன்பின் அதற்குத் தகுந்த மாதிரியான விருந்தை ஏற்பாடு செய்தேன் அவ்வளவுதான்! என்றார்.

இந்த உலகத்திலே நாமெல்லாம் அதிகம் படித்து விட்டால் மட்டும் போதாது. பண்பாடு வேண்டும். அதுதான் முக்கியம். அதை புரிந்து கொள்வதற்குத்தான் இந்தக் கதை.

இப்பவும் நம்முள் பல பேர் அடிக்கடி மிருகங்களைச் சம்பந்தப்படுத்திப் பார்க்காமல் இருக்க முடிவதில்லை. இரண்டு நண்பர்கள் பேசிக் கொண்டார்கள்.

உன்னிடம் நான் நண்பனாகியதற்குப் பதிலாக ஒரு எருமை மாட்டிடம் சிநேகிதம் பண்ணியிருக்கலாம் என்றார் ஒருத்தர்.


பண்ணியிருக்கலாம்! ஆனால் அதற்கு எருமை மாடு சம்மதிக்க வேண்மே! என்றார் அடுத்தவர்.

## ஜனாதிபதியையும் அரசையும் விமர்சிக்கும்

# சமூக ஊடகங்களை முடக்கும் செயற்பாடு சுதந்திரத் தன்மையை கேள்விக்குறியாக்கும்

## சட்டத்தரணிகள் சங்கம் எதிர்ப்பு





(கொழும்பு)

ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் விமர்சிக்கும் கருத்துக்களைப் பதிவிடும் பேஸ்புக், யூடியூப் சமூகவலைத்தளங்களை முடக்கும் செயற்பாடுகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகைய செயற்பாடுகளின் ஊடாக சமூக வலைத்தளங்களில் காணப்படும் சுதந்திரத் தன்மை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் அபிப்பிராயங்களை மாற்றியமைத்து அரசாங்கத்திற்கு சாதகமான பின்னணியொன்றை உருவாக்கிக் கொள்ளும் வகையில் சமூகவலைத்தளங்களை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்வது தொடர்பில் பேஸ்புக் நிறுவனம் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று தேசிய ஒற்றுமைக்கான சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியது.

இது குறித்து தேசிய ஒற்றுமைக்கான சட்டத்தரணிகள் சங்கம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையில் ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் விமர்சிக்கும் கருத்துக்களைப் பதிவிடும் நபர்களின் தனிப்பட்ட பேஸ்புக் கணக்குகள் மற்றும் யூடியூப்பை மையமாகக் கொண்டியங்கும் செய்தி ஊடகங்களின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் கடந்த சில வாரகாலமாகப் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக எமக்கும் பலரிடமிருந்தும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனை ஆராய்ந்து பார்த்ததிலிருந்து முடக்கப்பட்ட, சைபர் தாக்குதலுக்குள்ளான பேஸ்புக் கணக்குகள் என்பன ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் விமர்சித்தமை வெளிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் சைபர் தாக்குதல்களைத் தடுக்கும் வகையில் நிறுவப்பட்டுள்ள அரச நிறுவனம் தற்போது அரசியல் செல்வாக்குகளின் அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றது. அதேபோன்று பேஸ்புக் நிறுவனத்தில் இணைந்து பணியாற்றும் பக்கச்சார்பான மொழிபெயர்ப்புப் பணியாளர்களும் தவறான புரிதலினாலும் இவ்வாறு பலரின் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளமையை அறிய முடிகிறது.

இதனூடாக அதிகளவிலானோர் பயன்படுத்தும் பேஸ்புக் மற்றும் யூடியூப் ஆகிய சமூக வலைத்தளங்களை எதிர்வரும் தேர்தல்களில் அரசாங்கத்திற்கு சாதகமான முறையில் பயன்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 2015 இல் முந்தைய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான பிரசாரங்களை இந்த சமூக வலைத்தளங்களின் ஊடாக முன்னெடுத்த இளைஞர், யுவதிகளுக்கு இலவச வை-பை மற்றும் கூகுள் பலூன் வசதிகளை வழங்குவதாக உறுதியளித்த இந்த நல்லாட்சி அரசாங்கம், இத்தகைய செயற்பாடுகளின் ஊடாக சமூக வலைத்தளங்களில் காணப்படும் சுதந்திரத் தன்மையைக் கேள்விக்குறியாக்கியுள்ளமை குறித்து நாம் எமது கடுமையான கண்டனத்தை வெளியிடுகின்றோம்.

அதேபோன்று நாட்டு மக்களின் அபிப்பிராயங்களை மாற்றியமைத்து அரசாங்கத்திற்கு சாதகமான பின்னணியொன்றை உருவாக்கிக் கொள்வதுடன், எதிரணியின் கொள்கைகளை பின்தள்ளும் வகையில் சமூக வலைத்தளங்களை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்வது குறித்து பேஸ்புக் நிறுவனம் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவித்தார். (இ-7)

---

# நிலக்கீழ் அறையில் இயங்கி வந்த கச்சேரி பொலிஸாரால் முற்றுகை

(இரத்தினபுரி)

வெள்ளவாயவில் கைது செய்யப்பட்ட நபர் வழங்கிய தகவலின் பேரில் இரத்தினபுரிக்கு விரைந்த பொலிஸார் வீடொன்றின் நிலக்கீழ் அறையில் அமைந்திருந்த சுரங்க அறையில் நடத்தப்பட்டு வந்த போலி அரசாங்க செயலகத்தை (கச்சேரி) கண்டுபிடித்து பெருமளவிலான போலி ஆவணப் பொருட்களை மீட்டனர்.

வெள்ளவாய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து குறித்த நபரை வெள்ளவாயப் பொலிஸார் போலிப் பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் பலவற்றுடன் கைது செய்து விசாரணைக்குட்படுத்தினர்.

இந்நிலையில், குறித்த நபர் வழங்கிய தகவலின் பேரில் வெள்ளவாய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி. குணசேகர தலைமையிலான குழுவினர் இரத்தினபுரிக்கு சென்று வீடொன்றை சுற்றிவளைத்து தேடுதல்களை மேற்கொண்டிருந்த வேளையில் வீட்டிற்கு அடியில் சுரங்க அறையொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்போது சுரங்க அறையை சோதனையிட்ட பொலிஸார் அங்கு அரச அலுவலகங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் பலரது பெயர்களுடன் கூடிய 68 இறப்பர் இலச்சினைகள், பிரபல சட்டத்தரணிகள் பலரது கையொப்பங்களுடன் கூடிய இலச்சினைகள் 05, காணி உறுதிகள் 15, மாநகர சபை வரிப்பண ஆவணங்கள் 23, பூமி ஆய்வியல் அறிக்கைகள் மற்றும் இரத்தினக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் 09, மணல் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் 19, தேசிய அடையாள அட்டைகள் 17, கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ்கள் 12, பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் 29, காணி தொடர்பான ஆவணங்கள் 06, மின்சாரக் கட்டணப் பற்றுச்சீட்டுக்கள் 65, வருமான வரிச் சான்றிதழ்கள் 06, க.பொ. த. சாதாரண தர மற்றும் உயர் தரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்கள் 12, ஸ்கான் இயந்திரங்கள், கணனித் தொகுதிகள் போன்றன மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட பொருட்களுடன் இரு இளைஞர்களையும், வெள்ளவாயப் பொலிஸார் கைது செய்தனர்.

இது தொடர்பான புலனாய்வு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விசாரணைகள் நிறைவுற்ற பின்னர் வெள்ளவாய நீதவான் நீதிமன்றத்தில் கைது செய்யப்பட்டவர்கள் ஆஜர் செய்யப்படுவரென பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மீட்கப் பட்ட ஆவணங்கள் அனைத்தும் போலியாகத் தயாரிக்கப்பட்டவையென ஆரம்ப விசாரணையின் போது தெரிய வந்தது. (இ-7)

---

# வெலிக்கடை கைதிகள் 150 பேர் வேறு சிறைகளுக்கு மாற்றம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து 150 கைதிகள் வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டனர். இவர்கள் பூசா மற்றும் அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டனர்.

இவர்களில் மரணதண்டனை விதிக்கப்பட்ட 69 கைதிகளும் அடங்குவதாக சிறைச்சாலைகள் பணிப்பாளர் நாயகம் தென்னக்கோன் தெரிவித்தார்.

இதனையடுத்து பூசா மற்றும் அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைகளின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில், மேற்கொள்ளப்படவுள்ள திருத்தப்பணிகள் காரணமாக கைதிகள் வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்ட 150 கைதிகளும் அடுத்த மாதத்தில் மீண்டும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அழைத்துவரப்படுவர் என்றும் சிறைச்சாலைப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். (இ-7)

---

"நாட்டை மக்கள் ஆட்சி செய்ய வேண்டும்"

# தந்தையின் கனவை நனவாக்க கிடைத்ததில் எனக்கு மகிழ்ச்சி - சஜித்

(அம்பாந்தோட்டை)

இலங்கையில் மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று கடந்த 2000 ஆம் ஆண்டு என்னுடைய தந்தை ரணசிங்க பிரேமதாஸ எதிர்பார்த்தார். எனினும் அவரால் நிறைவேற்ற முடியாத அந்தக் கனவை நிறைவேற்றுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமை மகிழ்ச்சியளிப்பதாக வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.



அம்பாந்தோட்டை - வெலியபுர பிரதேசத்தில் மாதிரி கிராம வீட்டுத்திட்டத்தின் அடிக்கல் நாட்டும் விழா நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டளவில் நாடளாவிய ரீதியில் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள 20 ஆயிரம் மாதிரி கிராமங்கள் அமைக்கும் இலக்கை அடைந்து கொண்டிருக்கின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது.

இன்று இந்த மாதிரி கிராம வேலைத்திட்டத்தின் மூலம் பயன்களைப் பெற்றுக் கொள்ளும் 55 குடும்பங்களும் மிகச் சிறிய வீடுகளிலேயே வாழ்ந்தனர். அனைவரும் பொது மலசலகூடங்களையே பயன்படுத்தினர். ஆனால் இன்று அந்த நிலைமை எம்மால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2,499 மாதிரி கிராம திட்டத்தின் கீழ் 25 வீடுகளும், 2500 மாதிரி கிராம வீட்டுத்திட்டத்தின் கீழ் 30 வீடுகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன. இந்த மாதிரி கிராம திட்டம் கிராம சக்தி வீட்டுத்திட்டத்தின் கீழ் உள்ளடங்குகின்றது.

ரணசிங்க பிரேமதாஸவினுடைய காலத்திலும் ஜூன் மாதத்திலேயே இவ்வாறான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. நாமும் எமது இலக்கை அடைவதற்காக இந்த மாதத்தில் இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளமை சிறப்பம்சமாகும்.

இவ்வருடம் செப்டெம்பர் மாதத்தில் இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க தீர்மானித்திருந்த போதிலும், அதற்கு இரு மாதங்களுக்கு முன்னரே ஆரம்பிக்க முடிந்தமை மகிழ்ச்சியளிக்கின்றது.

என்னுடைய தந்தை ரணசிங்க பிரேமதாஸ கடந்த 2000 ஆம் ஆண்டு இவ்வாறு மாதிரி கிராமங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று கூறியிருந்தார். எனினும் அதனை நிறைவேற்றுவதற்கு முன்னரே அவர் கொல்லப்பட்டார். அவருடைய கனவை நிறைவேற்றக் கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தமையையிட்டு பெருமையடைகின்றேன்.

கடந்த 2015 ஆம் ஆண்டு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டபோது 40 மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்பட்டு இந்த வேலைத்திட்டம் ஆரம்பமானது. அவை பின்னர் நூறிலிருந்து தற்போது 2500 வரை அதிகரித்தது. வறுமையிலுள்ள மக்களை அதிலிருந்து மீட்பதும், அவர்களுக்குத் தேவையானவற்றை செய்து கொடுப்பதுமே இன்று நாட்டின் தேவையாகவுள்ளது. அத்தோடு நாட்டைப் பொதுமக்கள் தான் ஆட்சி செய்ய வேண்டும் என்பதும் எமது எதிர்பார்ப்பாகும் என அவர் தெரிவித்தார். (இ-7)

### பல விடயங்களை கோட்டைவிட்ட கூட்டமைப்பு

# தமிழர்களின் மாற்றுத் தேர்வு தேரர்களாக இருக்கக்கூடாது

### அமைச்சர் மனோ சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**தமிழ்த் தலைமைகளின் இயலாமை காரணமாகவே தமிழ் மக்கள் மாற்று வழி தேடுகிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் கிழக்குத் தமிழர்களின் மாற்றுத் தேர்வு தேரர்கள் அல்ல. அதேபோல் தமிழர்கள் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டு, தேரர்கள் உள்ளே நுழைந்தமைக்கு பிடிவாதகார முஸ்லிம் தரப்பினரும் பொறுப்பேற்க வேண்டும். இதற்கான விளைவு விரைவில் அனைவரையும் சுடும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.**

இது குறித்து தனது முகநூலில் பதிவொன்றை இட்டுள்ள அவர்,

நான் வரித்துக்கொண்ட அரசியல் நாகரிகம் ஒன்று இருக்கிறது. எனது கொள்கையை விட்டுக் கொடுக்காமல், இயன்ற வரை அனைவரையும் அன்புடன் நிதானமாக அனுசரித்துப் போவேன். அப்படித்தான் நான், த.தே.கூட்டமைப்பையும் அரவணைத்து அனுசரித்து போகின்றேன். அதனால்தான் கல்முனை மக்களின் அழைப்பின் பேரில் கல்முனைக்கு போக முடிவு செய்த போது கூட்டமைப்பின் அம்பாறை எம்.பி. கோடீஸ்வரனை அழைத்து சொன்னேன்.

அவர்தான் நண்பர் சுமந்திரன் எம்.பி.யை, வஜிர அமைச்சரின் உறுதிக் கடிதத்துடன் கூட்டி வாருங்கள் அண்ணா என்று என்னை வலிந்து கேட்டுக்கொண்டார்.

ஆகவே நான்தான் நண்பர்கள் தயா கமகேவையும் சுமந்திரனையும் கல்முனைக்கு அழைத்து வந்தேன். அங்கே சுமந்திரனுக்கு கிடைத்த எதிர்மறை வரவேற்பை நான் வெறுக்கின்றேன். எனக்கு நேர்மறை வரவேற்பு கிடைத்தது என்பதற்காக சுமந்திரனை தாக்க முயன்றதை நான் ஒருபோதும் ஏற்க முடியாது. த.தே.கூ. பல விடயங்களை கோட்டை விட்டுள்ளது என்பது உண்மை. ஆனால் அதற்கான பதில் இதுவல்ல.

அதேபோல், மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகளை நிராகரித்து விட்டு, பௌத்த தேரர்கள் கூறியதன் பேரில் போராட்டத்தை ஆரம்பிக்கவும், முடிக்கவும் முனைவது சரியானதல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



பொதுக்குணம்

ஒட்டி நற் கிச்சிலியினொண் கிழங்குங் கபமும் பூட்டு முடமும் புண்ணும் போம்.

பொருள்:- கிச்சிலிக் கிழங்கால் கபநோயும் கீல் பிடிப்பும் விரணமும் நீங்கும்.

**Botanical Name:- Curcuma Zedearia**

**Family Name:- Zingiberaceae**


**English Name:- Zedeary**

**Sinhala Name:- Haran kaha**

இது ஈராண்டு வளரக் கூடிய செடியாகும். மிகுந்த வாசனை உடையது உருளை வடிவ நீண்ட விரல் போன்ற நீட்டங்களைக் கொண்ட மெல்லிய மஞ்சள் நிறமான கற்பூரவாசனை உடைய மட்ட நிலத்தண்டுகளை கொண்டது. இலைகள் தனியிலை 30 தொடக்கம் 60 சென்ரிமீற்றர் நீளமுடையது. கூரிய முனைகளைக் கொண்டது. இலையின் 30 நரம்புப் பகுதி ஆழமான ஊதா நிறமுடையது. பூக்கள் ஒழுங்கற்று இருபாலான நீண்ட இலைக்காம்புடையது. புனல் வடிவ ஊதா நிறமானவை. பழங்கள் கோள வடிவானவை. நீண்ட வட்ட விதைகள் வெள்ளை நிறம். தை மாதத்திலிருந்து பங்குனி மாதம் வரை அதன் பூக்களைக் காணலாம்.

**பரம்பலும் இனவிருத்தியும்**

மட்ட நிலத்தண்டுகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். நிழலான, சதுப்பான மண்வளமுள்ள இடங்களில் கூடுதலாக பயிரிடலாம்.




**மருத்துவக் குணங்கள்**

இதன் மட்ட நிலத் தண்டுகள் மருத்துவ குணமுடையவை. மிகுந்த வாசனையும் உடையவை. பசியைத் தூண்டக்கூடியவை. காசநோய், மூட்டுக்களில் ஏற்படும் பிடிப்பையும் தீர்க்கவல்லது. இவற்றை விட வாய்நாற்றம், குடற்புண் காமாலை ஆகியவற்றிற்கு பயன்படக்கூடியதாகும். இதன் மட்ட நிலத்தண்டுகள் சேகரிக்கப்பட்டு நன்கு கழுவி, சிறுசிறு துண்டுகளாக்கி நிழலில் உலர்த்தி பயன் படுத்தப்படுகின்றன.

கிச்சிலிக்கிழங்கு-5 கிராம், அதிமதுரம்-5 கிராம், திப்பிலி-5 கிராம் எடுத்து 400 மில்லி லீற்றர் நீர் விட்டு 225 மில்லி லீற்றர் ஆக சுண்டக்காய்ச்சிய குடிநீரை 30-60 மில்லி லீற்றர் அளவு இருமலுக்கு கொடுக்கலாம். இம்மூன்று உலர் சரக்குகளையும் தமிழ் மருந்துக் கடைகளில் வாங்கலாம்.

வீட்டில் மிளகாய்த் தூள் தயாரிக்கும் போதும் 1 கிலோ கிராம் செத்தல் மிளகாய் அளவிற்கு 50 கிராம் உலர்ந்த கிச்சிலிக் கிழங்கை தோல் சுரண்டி வறுத்து சேர்க்க வேண்டும். இது இலகுவில் சமிபாட்டிற்கு உதவும். இதனால் மிகுந்த வாசனையாகவும் மிளகாய்த்தூள் இருக்கும். குடலிலுள்ள வாயுவை அகற்றக் கூடியது. குடற்புண் உடையவர்கள் காரமான மிளகாய்த்தூளை பயன்படுத்தக்கூடாது. அவர்களுக்கு தயாரிக்கும் சரக்குத் தூளில் கிச்சிலிக்கிழங்கை அளவாக சேர்க்க வேண்டும். குடற்புண்ணை ஆற்றும் சிறந்த மூலிகையாகும்.

மற்றும் குளியல் பொடியான நலங்க மாவில் கிச்சிலிக்கிழங்கை சேர்க்க முடியும். தற்போது பல விதமான சவர்க்காரங்கள் மக்களால் பயன்படுத்தப் படுகிறது. ஆனாலும் தோலில் ஏற்படக் கூடிய பிரச்சினைகளை நீக்கவும் தோலை பராமரிக்கவும் மென்மையாக வைத்திருக்கவும் சிறந்த மூலிகை குளியல் பொடியாகும். (Herbal bath Powder)

வெட்டிவேர் - 100 கிராம், கஸ்தூரி மஞ்சள் - 100 கிராம், கிச்சிலி கிழங்கு - 100 கிராம், சந்தனத் தூள் - 100 கிராம், உலர்ந்த எலுமிச்சை தோல்- 50 கிராம், பச்சை பயறு - 200 கிராம்

இவற்றை பொடித்து அரித்து வைத்து தினமும் தேய்த்து உடலில் 1/2 மணிநேரம் ஊறவிட்டு குளிக்க மேற்படி தோல் நோய் நீங்கி தோல் அழகு பெறும்.

**கண்ணிற்கு கீழ் கருவளையம் இருத்தலுக்கு**

திருநீற்று பச்சை - 100 கிராம், கிச்சிலி கிழங்கு - 50 கிராம் சேர்த்து அரைத்து கண்ணிற்கு பூசலாம்.

புண்களிற்கு கிச்சலிக் கிழங்கை வெங்காயத் துடன் சேர்த்து அரைத்து பூசலாம்.




இதையே சிதைவினால் உண்டாகும் புண்களுக்கு பூசி வரலாம்.

வாய் நாற்றம் உடையவர்களுக்கு 35 கிராம் கிச்சிலிகிழங்கை சிறு சிறு துண்டாக்கி 500 மில்லி லீற்றர் நீர் விட்டு 1/4 பங்காக வற்ற காய்ச்சி குடிநீரை தாங்கக் கூடிய சூட்டில் வாய் கொப்பளித்து வரலாம்.

குடலில் வாய்வுத் தொல்லை, வயிற்றுப் பொருமல் இருப்பவர்கள் உள்ளி, வெந்தயம், கிச்சிலி கிழங்கு சம அளவு எடுத்து அதற்கு 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக வற்ற குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி லீற்றர் காலை, மாலை எடுக்க வாயுத் தொல்லை, வயிற்றுக் கோளாறு நீங்கும்

புதினாக் கீரை, உழுத்தம் பருப்பு, பொட்டுக் கடலை, கிச்சிலி கிழங்கு, புளி ஆகியவற்றை சேர்த்தரைத்து சிறிதளவு வாயிற் போட்டு தண்ணீர் குடிக்க வாய்நாற்றம், வாய்குமட்டல், வாந்தி குணமாகும்.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

283

மூதவையை ஒழித்ததன் மூலம் சிறுபான்மையினரின் உரிமைகள் மேற்படி அவ்வையினால் பாதுகாக்கப்படுமென சோல்பரி ஆணைக்குழுவினர் எதிர்பார்த்தமை தவறாகிப் போனது பாராளுமன்றத்தில் போதிய பிரதிநிதித்துவம் இல்லாத பகுதியினருக்காக சோல்பரி ஆணைக்குழுவினரால் அறிமுகப்படுத்தப்பட்ட நியமன உறுப்பினர் முறைமை இல்லாமற் போய்விட்டது.

எல்லாவற்றிற்கும் மேலாக, சிறுபான்மையினரின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாப்பதன் பொருட்டு சோல்பரி ஆணைக்குழுவினரால் அறிமுகப்படுத்தப்பட்ட 29(2) பிரிவை இல்லாதொழித்து அதற்குப் பதிலாக அடிப்படை உரிமைகள் என்ற பரந்த அளவிலான ஒரு ஷரத்தை அறிமுகப்படுத்தி சிறுபான்மையினர் மத்தியில் நிரந்தரமான பாதுகாப்பற்ற நிலையை சிங்களப் பெரும்பான்மை அரசு ஏற்படுத்தியது.

இறுதியாகப் பெரும்பான்மை சிங்களக் கட்சிகளோடு இடது சாரிக் கட்சிகள் அவற்றின் கொள்கை அடிப்படையில் இணைந்து கொள்ள மாட்டா என சோல்பரி ஆணைக்குழுவினர் எதிர்பார்த்ததன் விளைவாக ஜி.ஜி. பொன்னம்பலத்தின் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை ஏற்க மறுத்திருந்தனர்.

மேற்படி இடதுசாரிக் கட்சிப் பிரதிநிதிகள் இருப்பதனால் அவர்களின் ஆதரவு சிறுபான்மைக் கட்சியினருக்கு இருக்கும் என்றும் அத்துடன் சிறுபான்மையினரான முஸ்லிம்களும் இந்தியத் தமிழரும் இலங்கைத் தமிழரின் சிறுபான்மைக் கட்சிகளுக்கு ஆதரவாக இருப்பர் என்றும் சோல்பரி ஆணைக்குழுவினர் எதிர்பார்த்ததன் விளைவாகவே, அவர்கள் சிங்களப் பெரும்பான்மை அமைச்சரவையினால் தயாரிக்கப்பட்ட நகல் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தமது அரசியலமைப்பை அமுல்படுத்தினர்.

உதாரணமாக 1960,1970 ஆம் ஆண்டுகளின் தேர்தல்களின் பின்னர் இடதுசாரிக் கட்சிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஐக்கிய முன்னணி என்ற அடிப்படையில் அரசை அமைக்க உதவின.

1970, 1977 ஆம் ஆண்டுகளின் தேர்தல்களை அடுத்தும், அவற்றிற்கு முன்னைய தேர்தல்களின் பின்னரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய



கொல்வின் ஆர்.டி. சில்வா

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

தேசியக் கட்சியும் முஸ்லிம் பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற்று தமது அரசைப் பலப்படுத்தத் தவறவில்லை.

1977 களில் இந்தியத் தமிழருக்கு வாக்களிக்கும் உரிமை கிடைத்ததன் விளைவாக அவர்களும் பெரும்பான்மை சிங்களக் கட்சிகளுக்கு தமது ஆதரவை வழங்கி வருவதை அவதானிக்க முடிகிறது.

எனவே மொத்தத்தில் சிறுபான்மைத் தமிழரின் குறிப்பாக இலங்கைத் தமிழரின் அரசியல் உரிமைகளைப் பொறுத்தவரை, சோல்பரிக் குழுவினர் சிபாரிசு செய்த அத்தனை விதிமுறைகளும் இலங்கைக்கு 1948 இல் சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்து மீறப்பட்டும் மறுக்கப்பட்டும் வந்திருக்கின்றன என்பதைத் தெளிவாகக் காண முடிகின்றது.

அரசியலமைப்பு சட்டவிதிகள் என்பவற்றில் ஏற்பட்ட மாற்றங்களுடன் கொள்கை, நிர்வாகம் என்பன சம்பந்தமான நடைமுறைகளிலும் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தன.

பல்கலைக்கழக அனுமதி நடைமுறையில் ஐக்கிய முன்னணி அரசால் 1970 இல் தரப்படுத்தல் (Standardization) என்னும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன்படி தமிழ் மாணவர் ஒருவர் பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு பிரவேசப் பரீட்சையில் மேலதிக புள்ளிகளைப் பெற வேண்டியிருந்தது.

இதையிட்டு கே.எம்.டி. சில்வா, கொல்வின் ஆர்.டி. சில்வா இருவரும் சிறப்பான விளக்கம் அளித்துள்ளனர். இதையிட்டு கே.எம். டி. சில்வா பின்வருமாறு கூறினார்.

தமிழ் மாணவர் மருத்துவத் துறையில் அனுமதி பெறுவதற்கு மொத்த 400 புள்ளிகளில் 250 புள்ளிகளைப் பெறவேண்டியிருக்க சிங்கள மாணவர் 229 புள்ளிகள் மட்டுமே பெற வேண்டியிருந்தது.

சிங்கள மாணவரும் தமிழ் மாணவரும் ஒரே பரீட்சையை ஆங்கில மொழியில் எழுதியபோதும் இதே முறைமை கடைப்பிடிக்கப்பட்டமை முன்னையதைவிட மோசமாக இருந்தது.

சுருங்கக்கூறின் ஒரே மொழியில் பரீட்சைக்குத் தோற்றும் இருவேறு இனத்து மாணவர் வேறுபட்ட தகைமைப் புள்ளிகளைப் பெற வேண்டியிருந்தனர்.

1977 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட அடிப்படையிலான ஒதுக்கீடு முறை இலங்கைத் தமிழருக்கு மேலும் பாதகமாக இருந்தது. கே.எம்.டி.சில்வா இதையிட்டு பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்.

1977 ஆம் ஆண்டளவில் பல்கலைக்கழக அனுமதி விடயம் தமிழ்த் தலைவர்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான முரண்பாட்டில் முக்கியமாக இருந்தது. இது தமக்கு எதிரான பாரபட்சம் எனக் கருதிய தமிழ் மாணவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் புரட்சிக் கிளையை உருவாக்கினர்.

பலர் தமிழீழத் தனியரசை அமைக்க வன்முறை பயன்படுத்தல் வேண்டுமென ஆலோசனை தெரிவித்தனர். இங்கிதமற்ற நடைமுறைகளும் சிறுபான்மையினரின் நலன்களையிட்டு உணர்ச்சியற்று இருப்பதும் இனங்களுக்கிடையில் நிலவும் முறுகல் நிலையைத் தீவிரப்படுத்தும் என்பதற்கு இது ஒரு யதார்த்தமான பாடமாக இருந்தது.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன றிபியூன் வார சஞ்சிகைக்கு 1979 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பேட்டியளிக்கையில் தெரிவித்த கருத்து, சிறிமாவோ பண்டாரநாயக்க இவ்விடயத்தில் கடைப்பிடித்த கொள்கைகளை நியாயப்படுத்துவது போல் அமைந்தது. அது பின்வருமாறு,

நாம் மொழி, இனம் என்ற அடிப்படையிலான தரப்படுத்தலை ஒழித்துவிட்டோம். இப்போது அது அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடையாத மாவட்டங்கள் என்ற அடிப்படையிலான தரப்படுத்தலாக உள்ளது.

(தொடரும்)

"கையொப்பத்தால் களுத்துறையில் அமைதியின்மை"

# அரச வைத்தியசாலைகளின் அனைத்து வைத்தியர்களும் பணிப்பகிஷ்கரிப்பு

களுத்துறை மாவட்ட அரச வைத்தியசாலைகளின் அனைத்து வைத்தியர்களும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.


களுத்துறை மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்ற அமைதியற்ற சூழல் காரணமாக இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தினரால் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்கு எதிரான மனுவொன்றில் பொதுமக்கள் கையெழுத்திடும் நடவடிக்கை களுத்துறை மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அங்கு வருகை தந்த களுத்துறை நகர முதல்வர் அமீர் நஜீல் வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு வெளியிட்டபோது அமைதியின்மை ஏற்பட்டது. இதனைக் கட்டுப்படுத்தி பொலிஸார் களுத்துறை நகர முதல்வர் உள்ளிட்டோர் மற்றும் களுத்துறை மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளருடன் கலந்துரையாடினர்.

இதனிடைய களுத்துறை மாவட்டத்தின் அரச வைத்தியசாலைகளில் பணிப்பகிஷ்கரிப்பு ஆரம்பிக்கப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)





# தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்கத்தயார்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

(கம்பஹா)

நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்கத்தயார் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

கம்பஹாவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டால் முன்னிலையாகி சாட்சியம் வழங்கத்தயார்.

இந்த தெரிவுக் குழு தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருப்பினும் அதன் பிரதான நோக்கம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து மக்களை



தெளிவூட்டுவதேயாகும்.

தற்போது எதிர்க்கட்சி, தெரிவுக்குழு தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தாலும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்திருந்ததாகவும் அவர் இதன்போது சுட்டிக் காட்டினார். (இ-7)

# தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சிக்கு பதிவினை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சால் யாழ்.பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில்,

Computer Hardware, Graphic Designing, Comp uter networking, Mobile Phone Repairing, LCD Monitor T.V Repairing ஆகிய பயிற்சி நெறிகள் இலவசமாக நடைபெறவுள்ளன.

இதில் பங்கு பற்ற விரும்புவோர் தமது சுய விபரக் கோவையுடன் எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் விதாதா வள நிலையத்தில் (பழைய பிரதேச செயலக வளாகம்- சென் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக) பதிவினை மேற்கொள்ளுமாறு யாழ்.பிரதேச செயலாளர் எஸ். சுதர்ஷன் அறிவித்துள்ளார். (5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1760


### சந்தியா

அழகா இருந்தா Happy ஆ இருப்போமான்னு தெரியாது ஆனா... Happy ஆ இருந்தா கண்டிப்பா அழகா இருப்போம்



### பிரேம்

விக்கலுக்கு பயந்தால் வயிறு நிறையாது, சிக்கலுக்குப் பயந்தா வாழ முடியாது




### குமரன்

சுத்துறது நப்புன்னு அப்பா, அம்மா சொல்லும் போது புரியல... இப்போ டவுண்லோடு பண்ணும் போதுதான் புரியுது...




### இசையரசி

கலங்கிய நீரும் குழம்பிய மனமும் ஒருநாள் தெளிந்தே தீரும்... கவலை வேண்டாம் இதுவும் கடந்து போகும்



### உமையாள்

வாழ்க்கை ஒரு நிமிடத்தில் மாறுமா என்று தெரியவில்லை... ஆனால் ஒரு நிமிடத்தில் எடுக்கும் முடிவு நம் வாழ்க்கையை மாற்றிவிடும்



### கம்சன்

பிரச்சினைக்கு சிறந்த ஆயுதம் பொறுமைதான்... பொறுமை அனைத்திற்கும் பதில் தரும்... அதற்கு காலதாமதம் ஆகும்... ஆனால் ஒருபோதும் தோற்றுப் போகாது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஈழப்போராட்டம் தமிழ் பேசும் மக்களுக்காகவே முஸ்லிம்கள் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்

## தலைவர் பிரபாகரன் தெரிவிப்பு

(ஏறாவூர்)
ஈழ விடுதலைப்போராட்டம் அனைத்துத் தமிழ்பேசும் மக்களுக்காகவுமே முன்னெடுக்கப்பட்டதென்பதை முஸ்லிம்கள் கருத்திற்கொள்ள வேண்டுமென ஈழவர் ஜனநாயக முன்னணியின் தலைவர் ஆர்.பிரபாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படவேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை தற்போது அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கு சில இஸ்லாமிய அடிவருடிகள்தான் தடையாக உள்ளனர். அவர்களே அரசாங்கத்தைக்கொண்டு தடைசெய்து வருகின்றனர்.

இந்த விடயம் குறித்து வாதிடுவதற்கான அனைத்து அதிகாரமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உள்ளபோதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராமுகமாக இருக்கின்றது.

முஸ்லிம் பிரதேசங்களுக்குத் தேவையான நிர்வாக அலகுகளை வழங்கும்போது தமிழ் மக்கள் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில் அனைத்து இனமக்களும் ஒன்றாக வாழவே விரும்புகின்றோம்.

மேலும் ஈழ விடுதலைப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் தனியாக தமிழர்களுக்கான போராட்டமாக மட்டும் ஆரம்பிக்கப்படவில்லை.

வடக்கு, கிழக்கு, மலையகம் என தமிழ் பேசும் மக்கள் அனைவருக்காகவுமே முன்னெடுக்கப்பட்டுவந்தது. இதனை முஸ்லிம்மக்கள் கருத்திற்கொள்ளவேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார் (இ-7)

### "சுதந்திரத்தை இழந்த இலங்கை"

# புதிய நாட்டைக் கட்டியெழுப்ப சுயநலமற்ற, பேராசையற்ற, பொறுப்புள்ள தலைவர்கள் மேலெழ வேண்டும்

(மிலானோ)
தற்போது அரசியலில் தலைமை தாங்குபவர்கள் தங்களது அரசியல் வாழ்க்கையில் இருந்து ஓய்வு பெற்று புதிய தலைமைகளுக்கு இடமளிக்குமாறு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வேண்டுகோள் விடுத்தார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இத்தாலிக்கான விஜயமொன்றை மேற்கொண்டார். இந்நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ரோமில், பாப்பரசர் பிரான்சிஸை சந்தித்தார்.

பின்னர் மிலானோ நகரில் உள்ள தேவாலயத்தில் இடம்பெற்ற ஆராதனைகளில் பங்கேற்று உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் நாட்டை ஆட்சி செய்த பல தலைவர்கள் தாங்கள் தோல்வியடைந்தவர்கள் என்பதை நிரூபித்துவிட்டதாகத் தெரிவித்தார்.



அத்துடன், தற்போது அரசியலில் தலைமை தாங்குபவர்கள் தங்களது அரசியல் வாழ்க்கையில் இருந்து ஓய்வு பெற்று புதிய தலைமைகளுக்கு இடமளிக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

"எமது அரசியல் தலைவர்கள் கடந்த காலத்தில் செய்தது என்ன? பலருக்கும் அதிகாரத்திற்கு வர பேராசை உள்ளது. எனவே அவர்கள் அடுத்தவர்கள் மீது பழியைச் சுமத்திக்கொண்டுள்ளார்கள்.

அவர்கள் சில அதிகாரிகளைப் பிடித்து வைத்துக்கொண்டுள்ளார்கள். அரசியல்வாதிகள் வாக்குகளைப் பெறும் முனைப்பில் வேலையாற்றுவதில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் அரசியல் பார்க்காமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைவரும் உதவ வேண்டும். நாங்கள் புதிய இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டும் எனில், சுயநலமற்ற பேராசையற்ற, பொறுப்புள்ள தலைவர்கள் மேல் எழ வேண்டும்.

சுதந்திரத்திற்கு பின்னரான 71 வருடங்களில் இலங்கை ஏற்கனவே சுதந்திரத்தை இழந்துள்ளது. இதைத்தான் கடந்த ஆட்சியாளர்கள் எங்களுக்குத் தந்தார்கள். எனவே, பழையவர்கள் பதவி விலகி புதியவர்களுக்கு வழிவிட வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கல்முனை விவகாரம் போன்று ஏனைய பிரச்சினைகளுக்கும் பிக்குகள் குரல்கொடுக்க வேண்டும்

## சிறிநேசன் கூறுகிறார்



கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலக பிரச்சினைக்கு குரல்கொடுத்ததுபோல, தமிழர்களின் ஏனைய பிரச்சினைகளையும் தீர்க்க பௌத்த மதகுருமார் முன்வர வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலக பிரச்சினைக்கு அனைவரும் குரல் கொடுத்தனர். சிறுபான்மை மக்களுக்கு உதவி புரியும் நோக்கில் பௌத்த மதகுருமாரும் அந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.


சிறுபான்மையினத்தவர்களாக இருந்தாலும் அவர்களின் கோரிக்கை நியாயமானது என்பதற்காக அதனை ஏற்றுக்கொண்டார்களென்பது திருப்திகரமான ஒரு விடயமாகும்.

அதேபோன்று தமிழர்களின் ஏனைய பிரச்சினைகளையும் தீர்க்க பௌத்த மதகுருமார் முன்வர வேண்டும். இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமைக்கு ஒரு காலத்தில் பௌத்த குருமாரே காரணமாகவிருந்தனர்.

எனவே நாட்டில் இனப்பிரச்சினை இருக்கக்கூடாது என அவர்கள் உண்மையாகவே எண்ணுவார்களாகவிருந்தால், தமிழர்களின் ஏனைய பிரச்சினைகளையும் தீர்க்க அவர்கள் முன்வர வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கிழக்கு மாகாண வேலைத்திட்டங்கள் 3 இனங்களுக்கும் சமமாக வழங்கப்படும்

## புதிய ஆளுநர் உறுதி



கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் மூன்று இனங்களுக்கும் சமமானதாக வழங்கப்படவேண்டும் என்பதில் தான் உறுதியாகவுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் ஷான் விஜயலால் டி சில்வா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய செயற்பாடுகள் குறித்து ஆராயும் விசேட கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே கிழக்கு ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, கிழக்கு மாகாண ஆளுநராகப் பதவியேற்று முதன்முறையாக மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்ட ஆளுநருக்கு அதிகாரிகளால் வரவேற்பளிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி மற்றும் எதிர்காலச் செயற்றிட்டங்கள் குறித்து ஆராயப்பட்டன. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 60 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 360 | 400 |
| தக்காளி | 100 | 60 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 140 | 100 | 100 |
| கோவா | 100 | 70 | 70 | 80 |
| கரட் | 150 | 120 | 150 | 180 |
| பூசணி | 120 | 100 | 100 | 120 |
| புடோல் | 80 | 80 | 70 | 120 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 160 | 160 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 110 | 120 |
| பாகற்காய் | 140 | 120 | 190 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 50 | 60 |
| பயற்றங்காய் | 80 | 60 | 70 | 100 |
| லீக்ஸ் | 150 | 120 | 70 | 100 |
| பீற்றூட் | 80 | 70 | 60 | 80 |
| கறிமிளகாய் | 150 | 110 | 150 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 140 | 120 | 200 |
| போஞ்சி | 140 | 120 | 200 | 140 |
| கத்தரிப்புள்ள | 80 | 60 | 60 | 80 |
| கீரை-1பிடி | 40 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 300 | 200 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 150 | 110 | 140 |
| வெங்காயப்பூ | 140 | — | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 60 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 40 | --- | 110 | 80 |




# கஞ்ச வியாபாரியும் முட்டாள் உதவியாளர்களும்



முன்னொரு காலத்தில் பணக்காரத் துணி வியாபாரி ஒருவன் இருந்தான். பணக்காரனாக இருந்தாலும் படு கஞ்சன். அவனிடம் வேலை செய்தவர்கள் அனைவரும் படு முட்டாள்கள். எங்கே புத்திசாலிகளை வேலைக்கு வைத்தால் அதிக சம்பளம் கொடுக்க வேணும் என்றும் தன்னிடமே படித்து எங்கே தனக்குப் போட்டியாக வியாபாரம் தொடங்கிடு வாங்கன்னு நினைத்தான்.

ஒரு நாள் வழக்கம் போல விற்பனைக்காக வெளியூர் செல்ல முடிவு செய்தான். விலை உயர்ந்த துணிகளை எல்லாம் நான்கைந்து பெட்டிகளுக்குள் வைத்து மூடினான். எல்லாப் பெட்டிகளையும் ஒரு ஒட்டகத்தின் முதுகில் ஏற்றிவிட்டு மிகக்குறைந்த கூலிக்கு அமர்த்திய முட்டாள் வேலைக்காரர்கள் இருவருடன் புறப்பட்டான். அளவுக்கு அதிகமாக பொருட்களை ஏற்றியதால் வழியில் பாரம் தாங்காமல் ஒட்டகம் கீழே விழுந்து விட்டது.

வேலைக்காரர்களைப் பார்த்து அவன், "நீங்கள் இங்கேயே ஒட்டகத்தைப் பார்த்துக் கொண்டிருங்கள். நான் பக்கத்தில் இருக்கும் ஊருக்குச் சென்று இன்னொரு ஒட்டகம் கொண்டு வருகிறேன். பிறகு சுமையை இரண்டு ஒட்டகத்திலும் சமமாக வைத்துப் பயணத்தைத் தொடரலாம். நான் இல்லாத போது நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். நான் வருவதற்குள் மழை வந்து விட்டால் பெட்டிகளை எப்படியாவது நனையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி விட்டுச் சென்றான்.

வேலைக்காரர்கள் இருவரும் சரியான முட்டாள்கள். இது தெரிந்தும் குறைந்த கூலி கொடுத்து அவர்களை விலை பேசியிருந்தான் வணிகன். எல்லாரும் எவ்வளவோ சொன்னார்கள். ஆனால் வியாபாரியோ வழித்துணைக்குத்தானே இவர்களை அழைத்துச் செல்கிறேன். எடுபிடி வேலை செய்யணும். இதனால் எனக்கு ஒரு பாதிப்பும் வராது என்று நினைத்தான்.

சிறிது நேரத்தில் மழை பெய்யத் தொடங்கியது. நம் முதலாளி பெட்டிகளை நனையாமல் பார்த்துக் கொள்ளச் சொன்னார். இப்பொழுது என்ன செய்வது? என்று கேட்டான் ஒருவன். பெட்டிகளுக்கு உள்ளே இருக்கின்ற துணிகளை எல்லாம் எடுத்துப் பெட்டிகள் மேலே போட்டு மூடுவோம். பெட்டிகள் நனையாமல் பார்த்துக் கொள்வோம் என்றான் அடுத்தவன்.

இருவரும்பெட்டிகளுக்குள் இருந்த விலையுயர்ந்த துணிகளை எல்லாம் எடுத்துப் பெட்டிகளுக்கு மேல் போட்டனர். மழையில் நனைந்து துணிகள் எல்லாம் ஈரமாகி விட்டன.ஒட்டகத்துடன் திரும்பிய வணிகன், "ஐயோ! என்னடா செய்தீர்கள்? துணிகள் எல்லாம் நனைந்து வீணாகிவிட்டதே" என்று கோபத்துடன் கத்தினான்.

"முதலாளி நீங்க சொன்னபடி பெட்டிகள் நனையாமல் இருப்பதற்காகத் துணிகளை எல்லாம் அதன் மேலே போட்டோம். அந்தப் பெட்டிகள் நனையக்கூடவில்லை. நீங்களே பாருங்கள்" என்றான் அவர்களில் ஒருவன்.

"முட்டாள்களான உங்களுக்கு இனி என்னிடம் வேலை இல்லை" என்று அவர்களை விரட்டினான் வணிகன். கொஞ்சம் காசுக்கு சிக்கனம் பார்க்கப் போய் முதலுக்கே நஷ்டம் வந்ததை எண்ணி வேதனையுடன் ஊர் திரும்பினான் வணிகன்.

## விடுகதைகளும் விடைகளும்

• ஊருக்கெல்லாம் ஒரே ஆடை. அது என்ன?

**வானம்**

• கையுண்டு தலை இல்லை, உடல் உண்டு உயிர் இல்லை. அவன் யார்?

**சட்டைத்துணி**

• அள்ள முடியும் கிள்ள முடியாது. அது எது?

**தண்ணீர்**

• ஒற்றை முத்துக்கு ஒரு பெட்டி, இரட்டை முத்துக்கும் ஒரே பெட்டி. அது என்ன?

**வேர்க்கடலை**

• மூன்று கொண்டை வைத்திருப்பாள்,ஆனால் பெண் அல்ல. அது என்ன?

**அடுப்பு விளிம்புகள்**

• ஊரையே சுற்றுவான்,ஆனால் வீட்டிற்குள் வரமாட்டான். அவன் யார்?

**செருப்பு**

• பத்து திங்கள் இருட்டறையில் இருந்தவன், விடுதலையானதும் அழுகிறான். அவன் யார்?

**பிறக்கும் குழந்தை**

• தேவைப்படும்போது பையை நிரப்பலாம், ஆனால் தேவைக்கு மேலே பையை நிரப்ப முடியாது. அது என்ன?


**வயிறு**

• இரவிலே எழும் தீபம், பகலில் பார்க்க முடியாது. அது என்ன?

**நிலவு**

● **தயாரிப்பாளர்:** முதல்வர்கிட்ட இல்லே... இந்தப் பிரச்சினையைப் பிரதமர்கிட்டேயே கொண்டுபோகப் போறேன். இன்னும் கால்வாசி படம் ஷூட்டிங் பாக்கியிருக்கு. அதுக்குள்ள முழுப்படமும் திருட்டு வி.சி.டியில் வந்துடுச்சு ...

**இயக்குநர் :** ???



● **மருத்துவர்:** ஸாரி அம்மா...குழந்தை ஆணா, பெண்ணான்னு ஸ்கான்ல பார்த்து சொல்றது சட்டப்படி தப்பு.

**பெண் :** போனாப் போகுது... குழந்தை என் ஜாடைல இருக்கா, இல்லே அவர் ஜாடைல இருக்கான்னாவது சொல்லுங்க!

● **நோயாளி :** பல்லைப் பிடுங்கின அப்புறம் வலி இருக்குமா டாக்டர் ...?

**டாக்டர் :** பல்லைப் பிடுங்கின அப்புறம், அதுக்கு வலிச்சா உங்களுக்கு என்ன?

## மயிலே! குயிலே!



ஆடிக்களிக்கும் மயிலே வா
ஆட்டம் எனக்குச் சொல்லித்தா
ஓடித்திரியும் இளங்கன்றே வா
அம்மா என்று சொல்ல சொல்லித்தா!

பறந்து திரியும் காக்கா வா
பகுத்துண்ணும் பழக்கம் சொல்லித்தா!
பாடிக் களிக்கும் குயிலே வா
பாட்டுப் பாடச் சொல்லித்தா

தாவும் மானே அருகே வா
தாவிக் குதிக்கச் சொல்லித்தா
கூவும் கோழி இங்கே வா
கூவி எழுந்திடச் சொல்லித்தா!

தாவித் திரியும் அணிலே வா
சுவையான பழம் பறிக்கச் சொல்லித்தா!
குதித்து ஓடும் முயலே வா
கூடி வாழும் வழி சொல்லித்தா!

கிள்ளை மொழி பேசும் கிளியே வா
பிள்ளைத்தமிழில் பேச சொல்லித்தா!
வாலை ஆட்டும் நாய்க்குட்டியே வா
வீட்டைக் காக்கும் கலையை சொல்லித்தா!

நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை ~ *கண்ணதாசன்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அத்துரலிய ரத்ன தேரருக்கு ஓர் அன்பு மடல்

வணக்கத்துக்குரிய அத்துரலிய ரத்ன தேரர் அவர்களுக்கு அன்பு வணக்கம்.

கடந்த சில மாதங்களாக தாங்கள் முன்வைக்கின்ற கருத்துக்கள் கண்டு மனம் நிறைவடைகின்றது.

இதற்கு மேலாக, கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துதல் என்ற தமிழ் மக்களின் கோரிக்கைக்கு தாங்கள் நேரில் சென்று ஆதரவு வழங்கியமைக்கு முதற்கண் நன்றிகள்.

தவிர, தமிழ் சிங்கள மக்கள் ஒன்றிணைந்தால் அடிப்படைவாதத்தை முழுமையாக இல்லாதொழிக்க முடியும் என்ற கருத்தை முன்வைத்துள்ளீர்கள்.

எம்மைப் பொறுத்தவரை தமிழ் சிங்கள மக்கள் ஒன்றிணைந்தால் இலங்கை என்ற அழகிய நாடு உலகின் அமைதிக்குரிய நாடாகவும் இயற்கையின் அத்தனை பாதுகாப்புக்குமுரிய பிரதேச மாகவும் உலகத்தால் போற்றப்படும் என்பது நம் முடிவு.

எதுவாயினும் தமிழ் சிங்கள மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்ற தங்களின் கருத்தை வரவேற்பதில் தமிழ் மக்களிடம் இருவேறு கருத்திருக்க முடியாது.

தாங்கள் முன்வைத்த தமிழ் – சிங்கள மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்ற கருத்தியல் ஏலவே முன்வைக்கப்பட்டிருந்தால், எத்தனையோ ஆயிரம் தமிழ் மக்களின் உயிர்கள் பாதுகாக்கப்பட்டிருக்கும்.

என்ன செய்வது நடக்கக்கூடாதது நடந்து விட்டது. உறவுகளைப் பறிகொடுத்து கண்ணீரும் கம்பலையுமாக அலைகின்ற அவலத்துக்குத் தமிழ் மக்கள் ஆளாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிட்டது.

எனினும் நடந்த இழப்புகளை நினைந்து கொண்டு எதிர்காலத்தை பறிகொடுத்தால் அது இன்னமும் தீராத துன்பத்தையே தந்தாகும்.

ஆகையால் ஒற்றுமை ஒன்றுதான் இந்த உலகில் மானிடம் இன்புற்று வாழ்வதற்கான ஒரே வழி.

அந்த வகையில் தமிழ் சிங்கள மக்கள் ஒன்றுபட வேண்டும் என்ற தங்களின் கோரிக்கை நிதர்சனமாக வேண்டும் என்பது நம் பிரார்த்தனையாகும்.

அதேநேரம் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதற்கான பணியைத் தாங்களும் தங்களின் ஒற்றுமை என்ற கருத்தோடு ஒத்திசைந்து செல்லக்கூடிய பௌத்த துறவிகளும் சேர்ந்து முன்னெடுத்து வெற்றி கண்டால்,

தாங்கள் விரும்புகின்ற தமிழ் – சிங்கள ஒற்றுமை என்பது மிக விரைவாக எட்டப்படக் கூடியதாகும்.

தமிழ் மக்களின் உரிமை சார் விடயங்களை தமிழ் அரசியல் தரப்போடு பேச வேண்டுமென்றில்லை. மாறாக தமிழ் மக்களின் நலன் சார்ந்த மக்கள் அமைப்புகளுடன் பேச்சு நடத்தி ஒரு தீர்வுக்கு வர முடியும்.

ஆகையால் இது தொடர்பில் தங்களின் சாதகமான வெளிப்படுத்தல் தேவைப்படுகின்றது.

# “அந்தரத்தில் கூட்டமைப்பு எம்.பிக்கள்”

# பிரச்சினைகளை பின்வரிசையில் போட்டு

# தமிழ் மக்களை ஏமாற்றி விட்டது அரசு

# அமைச்சரவையில் மனோ கடும் காட்டம்

(கொழும்பு)

கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரச்சினை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தால், இந்த அரசாங்கத்தை தொடர்ந்து நல்லெண்ண நோக்கில் பாதுகாத்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களை ஏமாற்றி அந்தரத்தில் போட்டுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் இந்த அரசாங்கம பின்வரிசையில் போட்டு விட்டது. இதையிட்டு நான் வெட்கமடைகின்றேன்.

இன்று இந்நாட்டில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சரவை அமைச்சர்களாக நானும், அமைச்சர் திகாம்பரமும் தான் இருக்கிறோம். எனவே இந்நாட்டில் வாழும் ஒட்டு மொத்த தமிழர் தொடர்பில் எனக்கு கடப்பாடு இருக்கிறது.

வடக்கு, கிழக்கு, மலையகம், மேற்கு, தெற்கு திசைகளில் இந்நாட்டில் வாழும் அனைத்து தமிழ் மக்களும் தமது பிரச்சினைகள் தொடர்பில் நான் குரல் கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

ஆகவே நான் இவை பற்றி இந்நாட்டின் அதியுயர் சபையான இந்த அமைச்சரவையில் பேசுகிறேன். இந்த அமைச்சரவை கூட்டத்தில் கலந்துகொள்ள நான் வர முன் நானும், கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரனும் கலந்துரையாடினோம்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஒரு முழு நேர கணக்காளர் ஒருவரை நியமிப்பதாக அரசாங்கத்தின் துறைசார் அமைச்சர் வஜிர அபேவர்த்தன எழுத்து மூலமாக கூட்டமைப்புக்கு உறுதி கூறியுள்ளார் என அவர் எனக்கு கூறினார். அந்த கடிதத்தை நானும் நேரடியாக வாசித்தேன்.

இந்த நியமனம் நேற்று முனதினம் திங்கட்கிழமையே வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதும், அது இன்னமும் வழங்கப்படவில்லை எனவும் சுமந்திரன் குற்றம்சாட்டுகிறார். இதற்கு, துறைசார் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் என்ன பதில் கூறுகிறீர்கள் என நான் இங்கே தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

இன்று எங்கள் பிரச்சினைகளை நீங்கள் பின்வரிசையில் போட்டுள்ளீர்கள். இனியும் தமிழர்களாகிய எங்களது பொறுமையைச் சோதிக்க வேண்டாம் என தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் அமைச்சரவையில் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று அமைச்சரவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடியது. இதில் பிரதமர் ரணில் விககிரமசிங்க உட்பட அமைச்சர்கள் கலந்துகொண்ட போது, இவ்விவகாரம் தொடர்பில் பிரதமருடனும், துறைசார் அமைச்சருடனும், கடுமையாக வாக்குவாதப்பட்ட அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

இன, மத அடிப்படைகளில் கல்வி வலய, பிரதேச செயலக, உள்ளூராட்சி மன்ற எல்லைகளை நிர்ணயிப்பது தொடர்பில் மாறுபட்ட கருத்துகள் எனக்கும் இருக்கின்றன.

இருந்தாலும் இன்று நாடு முழுக்க இப்படியான இன மத அடிப்படையில் பிரதேச செயலகங்கள் உள்ளன. வவுனியா தெற்கில் நிலத்தொடர்பற்ற சிங்கள பிரதேச செயலகம் உள்ளது. முஸ்லிம் மக்களை மையமாக வைத்தும் பிரதேச செயலகங்கள் உள்ளன.

இந்நிலையில் தமிழ் மக்கள் தமது பிரதேச செயலகங்களைத் தரமுயர்த்த முயலும் போதும், அமைக்கும் போது மட்டும் ஏன் தடை போடுகிறீர்கள்? ஏன் இதை மாத்திரம் அரசாங்கம் இழுத்தடிக்கின்றது? ஏற்கனவே இயங்கி வரும் ஒரு உப-பிரதேச செயலகத்தையே, முழு-பிரதேச செயலகமாக தரமுயர்த்தும்படி தமிழர்களின் இக்கோரிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

உண்மையில் முஸ்லிம் மக்களுக்கு இந்த கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக எல்லைகள் தொடர்பில் பிரச்சினை இருக்கிறது. அது எனக்குத் தெரியும்.

ஆகவே அதையும் தொடர்ந்து இழுத்தடிக்காமல் பேசி தீர்க்க வேண்டும். அதற்கு முன் அரசாங்கம் உறுதியளித்தது போல் முதலில் முழு நேர கணக்காளர் ஒருவரை இந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நியமிக்க வேண்டும்.

வடக்கு கிழக்கின் ஏனைய பிரதேசங்களிலும் இந்த பிரச்சினை காரணமாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. வட கிழக்கில் தமிழ், முஸ்லிம் இனத்தவர் மத்தியில் இந்த பிரச்சினை மூலம் இன உறவு சீர்கெடுகிறது. அதை இனியும் அனுமதிக்க முடியாது.

வடக்கு, கிழக்கு, மலையகம், மேற்கு, தெற்கு திசைகளில் வாழும் தமிழர்கள் மிக அதிகமான சிறுபான்மை இன வாக்குகளை வழங்கி இந்த நல்லாட்சி ஜனாதிபதியை உருவாக்கினோம்.

அதேபோல் அரசாங்கத்துக்குள் இருந்து தமிழ் முற்போக்கு கூட்டணி உங்களை பாதுகாக்கிறது. வெளியே இருந்தபடி தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உங்களை பாதுகாக்கின்றது. இந்த உண்மைகளை ஜனாதிபதியும், பிரதமரும் மறந்து விடக்கூடாது.

உண்மையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை இந்த அரசாங்கம் பின்வரிசையில் போட்டு விட்டது. எங்கே நீங்கள் தருவதாக சொன்ன புதிய அரசியலமைப்பு? எங்கே அரசியல் தீர்வு? எங்கே அரசியல் கைதிகள் விடுதலை? நேற்று முன்தினம் ஒரு தமிழ் கைதி பதினைந்து வருடங்கள் சிறையில் இருந்து இறந்து போயுள்ளார் என்பது உங்களுக்கு தெரியுமா? இன்று புலிகளின் ஆயுதப் போராட்ட யுகம் முடிந்து, சஹ்ரானின் ஆயுதப் போராட்ட யுகம் ஆரம்பித்துள்ளது.

எனினும் இன்னமும் புலிகளின் காலத்தில் கைது செய்யப்பட்ட தமிழர்கள் பத்து,பதினைந்து, இருபது வருடங்கள் என நீண்ட காலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

எதிர்வரும் வாரத்தில் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் ஒரு அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை நான் கொண்டு வர உள்ளேன். இங்கே உள்ள அமைச்சர்கள் எவரும் அது தொடர்பில் தமது கருத்துக்களை தெரிவியுங்கள். தமிழ் மக்கள் உங்களை அடையாளம் கண்டு கொள்வார்கள் எனத் தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் மனோ கணேசனுக்கு பதிலளித்து பேசிய அமைச்சர் வஜிர அபேவர்தன, அடுத்த ஒரு வாரத்துக்குள் பிரதமர் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில், தானும், அமைச்சர்கள் மனோ கணேசன், தயா கமகே , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் கட்சிகள் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கல்முனை வடக்கு பிரதேச செயலக கணக்காளர் நியமனம் தொடர்பிலும், உப செயலகம் தரமுயர்த்தப்படுவது தொடர்பிலும் தீர்மானிக்கப்படும் எனக் கூறினார்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க, அமைச்சர் மனோ கணேசனுடன் தான் முழுமையாக உடன்படுவதாகவும், இந்த விடயத்தை இனியும் இழுத்தடிக்கக்கூடாது எனக்கூறினார்.

இதன்போது கருத்துக் கூறிய அமைச்சர் ராஜித சேனாரட்ன அமைச்சர் மனோ கணேசன் கூறிய தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் கூடிய விரைவில் முடிவுக்கு வர வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-7)

## திடீரென மயங்கி விழுந்த மாணவர்கள்

### வைத்தியசாலையில் அனுமதி

(காரைதீவு)

பாடசாலையில் கல்வி கற்ற நிலையில் மயங்கி விழுந்த ஆறு மாணவ மாணவிகள் பல்வேறு காரணங்களுக்காக சிகிச்சைக்கென காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றுக் காலை காரைதீவு சண்முகா மகா வித்தியாலயம் மற்றும் காரைதீவு ராமகிருஷ்ணா பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த குறித்த ஆறு மாணவ மாணவிகளே சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கடும் வெயில் காரணமாகவும் காலை உணவு உண்ணாமை மற்றும் இதர காரணங்களால் திடீரென மயக்கமுற்ற நிலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

## போக்குவரத்து விதிகளை மீறிய 4 பேருக்கு எதிராக

### *34 ஆயிரம் ரூபா அபராதம்*

போக்குவரத்து விதிகளை மீறிய 4 பேருக்கு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் 34 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து விதிகளை மீறிய நபர்களைக் கைது செய்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது முதலாம் நபருக்கு 7 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமும் 1 மாதத்துக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டது.இரண்டாவது நபருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய குற்றத்திற்கு 9 ஆயிரத்து ஐநூறு ரூபாய் அபராதமும் மூன்றாம் நபருக்கு 10 ஆயி ரத்து ஐநூறு அபராதமும் 1 மாத சாரதி அனுமதிப்பத்திரம் இரத்தும் நான்காம் நபருக்கு 7 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

(ம-10.114).

# நொதேண் வி.கழகம் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுத் தொடர்

## அரியாலை சனசமூக நிலையம் சம்பியன்





நொதேண் விளையாட்டுக் கழகம் நடத்திய அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அரியாலை சனசமூக நிலையம் சம்பியனாகியது.


நொதேண் விளையாட்டுக் கழகத்தின் நிரந்தர மின்னொளியிலான ஆடுகளத் திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சொங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

அமரர்களான கந்தையா இராசையா, கந்தையா செல்வராஜா மற்றும் செல்வராஜா தாமரைச்செல்வன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக மேற்படி போட்டி நடைபெற்றது.

அழைக்கப்பட்ட கழகங்கள் பங்கு பற்றிய மேற்படி போட்டியின் இறுதிப்போட்டியில் நொதேண் விளையாட்டுக்கழகமும் அரியாலை சனசமூக நிலையமும் பலப்பரீட்சை நடத்தின.

பரபரப்பாக நடைபெற்ற மேற்படி இறுதிப்போட்டியில் 3:0 என்ற செற் கணக்கில் அரியாலை சனசமூக நிலையம் சம்பியனாகியது. மேலும் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திறம்பட இயங்கிய நொதேண் விளையாட்டுக்கழக மகளிர் அணியினர் பின்னர் கால சூழ்நிலையினால் நீண்டகாலமாக செயலிழந்திருந்தது. இந்நிலையில் கழகத்தின் சமூக செயற்பாடு மற்றும் விளையாட்டு நிகழ்வுகளைப் பார்த்து பிரதேச பெண்கள் தம்மை ஆர்வத்துடன் கழகத்தில் அன்றைய தினம் இணைத்துக் கொண்டனர். (ம)





# கிளி.யுனைட்டட் கிண்ணத்தை வென்றது தர்மபுரம் இளம் தாரகை அணி




சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் பிரதான அனுசரணையில் கிளிநொச்சி யுனைட்டட் விளையாட்டுக் கழகம் நடத்திய மாபெரும் பத்துக்கு பத்து கடினப் பந்து சுற்றுப் போட்டியில் கிளிநொச்சி தர்மபுரம் இளம் தாரகை விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

12 அணிகள் பங்குபற்றிய போட்டியில் இறுதிப் போட்டியில் தர்மபுரம் இளம் தாரகை அணியை எதிர்த்து இந்து இளைஞர் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய இளந்தாரகை அணி 10 ஓவர்களில் நான்கு இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்து இளைஞர் அணி 9.1 ஓவர்களில் 78 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

போட்டியின் ஆட்ட நாயகனாக இளம் தாரகை அணியின் துஷ்யந்தன் தெரிவு செய்யப்பட்டார். (க-316)

# பிரஷாந் சிறப்பான அரைச்சதம் விக்ரோறியன்ஸ் அணி சம்பியன்



சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் முதலாவது ஒருநாள் போட்டியினை புத்தளம் சன்றைஸ் விளையாட்டுக் கழகத்துடன் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் மோதியது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சன்றைஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. 33.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. சன்றைஸ் அணி சார்பாக அசார் 54 ஓட்டங்கள், சுஜ்ஜி 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜெந்தூரன் 3, பிரியங்கன் 3, விஜயகுமார் 2, லதீல் 1, கிருஷாந் 1 இலக்குகளை வீழ்த்தினர்.

167 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை கொண்டு களம் இறங்கிய சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழகம் 23.3 ஓவர்களில் 167 என்ற வெற்றி இலக்கை 4 விக்கெட்டுகளைக் கொடுத்து வெற்றி இலக்கை அடைந்தது.

சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பாக சிறப்பாக துடுப்பெடுத்தாடிய பிரஷாந் 72 ஓட்டங்களையும் இன்பராஜ் 23 ஓட்டங்களையும் கிரிஷாந் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சுஜீவ, சஞ்ஜீ, நிருஷன், மனோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளை கைப்பற்றினர். இந்தப்போட்டியின் மூலம் தமது முதலாவது வெற்றியினை சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் பதிவு செய்து கொண்டது. (க)

## 6 மணி நேரம்...

அடுத்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறியுள்ளார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பான விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவில் பொய் சாட்சியம் வழங்கியதாக குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவர் நேற்று செவ்வாய்க்கிழமை காலை அந்த விடயம் தொடர்பாக வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஐஸ் போதை...

படை ஊடகம் தெரிவித்துள்ளது.

மன்னார் - ஊருமலை பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மேற்கொண்ட ரோந்து நடவடிக்கைகளின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்தது.

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த 22 - 27 வயதிற்கிடைப்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 60 கிராம் ஐஸ் போதைப் பொருள், மீன்பிடி படகு மற்றும் மீன்பிடித்தலுக்கு பயன்படும் உபகரணங்கள் சிலவும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## எதிர்காலத்துக்கு...

களை நினைத்து நாம் மிகவும் கவலையடைகிறோம்.

71 வருடங்களுக்கு முன்னர் சுதந்திரம் பெற்றுக்கொண்ட ஒரு நாட்டில் இதனையும் விட பல மடங்காக அபிவிருத்திப் பணிகள் முன்னெடுத்திருக்க வேண்டும்.

மக்களுக்கு இதைவிட வாழ்வதற்கான சூழல் சிறப்பானதாக இருந்திருக்க வேண்டும். மனச்சாட்சிப்படி நாம் சிந்திக்கும்போது, நாட்டில் பல்வேறு குழப்பங்கள் இடம்பெறுகின்றது என்பதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

இனவாதம், மதவாதத்தினால் இந்த நாடே நிறைந்து காணப்பட்டமையால், ஏனைய நாடுகள் முன்னேறிக் கொண்டிருக்கும்போது, நாம் மட்டும் பின்னோக்கி நகர்ந்து கொண்டிருந்தோம்.

இறுதியாக நடைபெற்று முடிந்த தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனை மக்கள் வழங்கிய எச்சரிக்கையாகவே நாம் கருதுகிறோம்.

அதாவது, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயத்திற்கு அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என்ற செய்தியே இதன் ஊடாக வெளியிடப்பட்டது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக இதனை நடைமுறைப்படுத்தக்கூட முடியாத நிலையில்தான் இன்று நாம் காணப்படுகிறோம்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் பாடசாலைகளை திறப்பதற்கும் அரசாங்கத்திலும் எதிர்க்கட்சியிலும் இருவேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இவ்வாறு அரசியல் பிளவுடன்தான் அனைவரும் பயணித்துக்கொண்டிருக்கிறோம். இது ஆரோக்கியமான ஒன்றல்ல. இப்போதுள்ள பிரச்சினைகளை எதிர்காலத்திற்கும் கொண்டு செல்லக்கூடாது.

எமது நாட்டின் அடுத்த சந்ததியினர் ஐக்கியமாக வாழும் வகையில், இப் போதுள்ள பிரச்சினைகளை இப்போதே தீர்க்க நாம் முயற்சிக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## கத்தோலிக்க...

பாடல் பெற்ற சிவத்தலமான திருக்கேதீச்சரத்துக்கென தோரண நுழைவாயில் வளைவு அமைப்பதற்கான அனுமதியை ஆலய நிர்வாகம் உரிய சட்ட முறைப்படி விண்ணப்பித்திருந்தது.

குறித்த விண்ணப்பத்தை பரிசீலித்த மன்னார் பிரதேச சபை, அதற்கான அனுமதியை வழங்கியது.

எனினும் அனுமதி வழங்கப்பட்டு 24 மணிநேரத்துக்குள் அந்த அனுமதியை இரத்துச் செய்வதாக மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர் ஆலய நிர்வாகத்துக்கு அறிவித்திருந்தார்.

இவ்வாறு தோரண நுழைவாயில் வளைவு அமைப்பதற்கான அனுமதியை இரத்துச் செய்யுமாறு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மதகுருமார் சிலர் பிரதேச சபைக்குக் கொடுத்த கடும் அழுத்தம் காரணமாகவே அனுமதி இரத்துச் செய்யப்பட்டதாக மன்னார் பிரதேச சபை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மிகப் பழைமை வாய்ந்த, பாடல் பெற்ற திருத்தலமாகிய திருக்கேதீச்சரத்துக்கான வளைவை அமைப்பதற்கு அனுமதி வழங்கிய பிரதேச சபை, அந்த அனுமதியை உடனடியாக இரத்துச் செய்ததன் பின்னணியில் கத்தோலிக்க மதகுருமார் சிலர் செயற்பட்டமை: மன்னார் மாவட்டத்தில் சைவ மக்களின் இருப்பை கேள்விக்குறியாக்கியுள்ளதுடன்,

மன்னாரில் உள்ள சைவ ஆலயங்களின் பாதுகாப்பையும் ஐய வினாவுக்கு உட்படுத்தியுள்ளதெனப் பலரும் கருத்துரைத்துள்ளனர். (ம)

## பாராளுமன்ற...

இராணுவ தளபதிக்கு தொலைபேசியில் அழைப்புவிடுத்து அழுத்தம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டு முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மீது முன்வைக்கப்பட்ட நிலையில் அது குறித்து விளக்கம் கோரவே இருவருக்கும் தெரிவுக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

ஈஸ்டர் தாக்குதலை அடுத்து இராணுவத் தளபதி ஊடகங்கள் முன்னிலையில் சில கருத்துக்களை முன்வைத்ததுடன் இந்தியாவில் இருந்து திட்டங்கள் வகுக்கப்பட்டதாக தெரிவித்திருந்தார்.

இந்த கருத்து அரசியல் மட்டத்தில் சர்ச்சையை கிளப்பிய போதிலும் தனது நிலைப்பாட்டில் எந்த மாற்று நிலைப்பாடும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார். ஆகவே இந்த விடயங்கள் குறித்து தெரிவுக்குழு விசாரணைகளை நடத்தும் என எதிர்பார்க்கலாம்.

அதேபோல் ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபட்ட நபர்களில் ஒருவருடன் வியாபார தொடர்புகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் மற்றும் அமைச்சராக இருந்த சந்தர்ப்பங்களில் தலையிட்டார் என்ற குற்றச்சாட்டு முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மீது சுமத்தப்பட்டுள்ள நிலையில் அவரையும் தெரிவுக்குழு முன்னிலையில் அழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று பிற்பகல் 2 மணிக்கு பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு கூடவுள்ளது. இதன்போது முதல் சாட்சியமாக இராணுவ தளபதி மகேஷ் சேனாநாயக்கவிடம் விசாரணைகள் நடத்தப்படும்.

அடுத்ததாக பிற்பகல் 3 மணிக்கு முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வரவுள்ளார். அதேபோல் மேலும் ஒரு அரச அதிகாரியும் வரவழைக்கப்படவுள்ளதாக தெரிவுக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## முள்ளிவாய்க்...

சாலை வளாகத்தில் அதிரடிப்படையினர் மீட்டுள்ளதாக தெரிவித்தனர்.

குறித்த கைக்குண்டு பாடசாலை விளையாட்டு மைதானத்திற்கு அருகில் புதைந்திருந்ததை மாணவர்களினால் அடையாளம் காணப்பட்டது.

இந்நிலையில் குறித்த பாடசாலைக்கு பாதுகாப்பு வழங்கிய இராணுவத்தினருக்கு பாடசாலை முதல்வர் தகவல் வழங்கியதை தொடர்ந்து பொலிஸாரும் அதிரடிப் படையினரால் குறித்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பாடசாலை வளாகப் பாதுகாப்பு கருதி ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-281,285,286)

## அரசியலமைப்பை...

தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணம் தங்கொட்டுவ வாரசந்தையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முஸ்லிம்களுக்கு வென்னப்புவ பிரதேச சபை தடை விதித்துள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காகவே இந்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதேச சபைத் தலைவர் சுசந்த பெரேரா பிரதேச அரச அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## இஸ்லாமிய அடிப்...

கொண்டு பௌத்த தேரர்கள், பொதுமக்கள் அனைவரையும் இணைத்துக்கொண்டு எதிர்வரும் ஜூலை மாதம் 7ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கண்டியில் மாநாடு ஒன்றை நடத்துவதற்கு பொதுபலசேனா அமைப்பு திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து விளக்கமளிக்கும் வகையில் நேற்று செவ்வாய்க்கிழமை கிருலப்பனையில் அமைந்துள்ள பொதுபலசேனா அமைப்பின் காரியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது அனைத்துத் துறைகளுமே மிக மோசமான நிலையை அடைந்திருக்கின்றன. மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராடி வருகிறார்கள். ஆனால் எந்தவொரு பிரச்சினைக்கும் முறையான நிரந்தர தீர்வு வழங்கப்படவில்லை. மேலும் தற்போது முஸ்லிம் அடிப்படைவாதப் பிரச்சினை முக்கியமானதாக மாறியிருக்கிறது. அதனை முழுமையாகக் களைவதற்கு பாரம்பரிய முஸ்லிம்கள் உட்பட சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ அனைவருமே நல்ல மனிதர்கள். அவர்களிடம் நல்ல குணாதிசயங்கள் பல உள்ளன. ஆனாலும் இன்று முழு நாடும் நாசமடைந்து போய்விட்டதே. அரசியல்வாதிகள் தமது சொத்துக்கள், பாதுகாப்பு, தமது பிள்ளைகளின் எதிர்காலம் என்பன தொடர்பில் வெகு அக்கறையுடன் இருக்கிறார்கள்.

ஆனால் மக்களின் நல்வாழ்க்கை குறித்து அவர்கள் கருத்திற்கொள்ளவில்லை. இத்தகைய பின்னணியில் இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு முழுமையாகத் தீர்வு காண்பதற்குரிய ஒரு முறையான திட்டமிடலோ அல்லது இணக்கப்பாடோ இன்னமும் எட்டப்படவில்லை. எனவே இவை தொடர்பில் பகிரங்கமாகக் கலந்துரையாடுவதற்கும், யோசனைகளை முன்வைப்பதற்கும் அனைவரையும் கண்டிக்கு வருமாறு அழைக்கின்றோம் என்றார்.

## புகையிரதத்துடன்...

இவ்விபத்து நேற்று மதியம் 1.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மதிய நேர கடுகதி புகையிரதத்தில் ஏ9 வீதியிலிருந்து பாரதிபுரம் நோக்கி பயணித்த இராணுவத்தின் மருத்துவப் பிரிவின் ஹன்டர் ரக வாகனம் மோதியதில் இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

புகையிரதம் அருகில் வருவதனை அவதானிக்காத இராணுவ சாரதி புகையிரத பாதையினை கடக்க முற்பட்டபோதே புகையிரதத்துடன் மோதுண்டு விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த புகையிரத கடவையானது பாதுகாப்பற்ற புகையிரத கடவையாகும். இதற்கு முன்னரும் இரண்டு விபத்துக்களில் மூவர் பலியாகியிருந்தனர். இது மூன்றாவது விபத்து.

இறந்த இராணுவத்தினரின் உடல்கள் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டதோடு, மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,281,312)

### நடப்பு வருடத்தில்
## டெங்கு தொற்றால் 22,873 பேர் பாதிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிவரை டெங்கு நோய் தொற்று காரணமாக 22 ஆயிரத்து 873 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் டெங்கு நோய் தடுப்பு பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

டெங்கு நோய் தொற்று காரணமாக மேல் மாகாணத்தை சேர்ந்தவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் மேல் மாகாணத்தில் மாத்திரம் 9 ஆயிரத்து 645 பேர் டெங்கு நோய் தொற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## கடல் அட்டைகளுடன் முல்லையில் மூவர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பகுதியில் சட்டவிரோதமான முறையில் கடல் அட்டைகளை தம்வசம் வைத்திருந்தார்கள் என தெரிவித்து மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் தினம் கைது செய் யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 237 கிலோகிராம் கடல் அட்டைகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவிற்கு ஏற்றுமதி செய்வதற்காகவே இவர்கள் கடல் அட்டைகளை வைத்திருந்துள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

கொவிசெத
திகதி 2019.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 2159
E 23 24 33 70

நீரோகா
திகதி 25/06/2019
சீட்டிழுப்பு இலக்கம் 0563
மகரம் 08 21 32 52

மஹஜன சம்பத
திகதி 2019/06/25
சீட்டிழுப்பு இலக்கம் 3946
F 3 2 4 6 3 3

சேவன
திகதி 25/06/2019
சீட்டிழுப்பு இலக்கம் 0195
R 07 22 24 44

## மகிந்த தலைமையிலான எதிர்க்கட்சியினர்

# அரசியல் அபிலாஷைகளை பூர்த்திசெய்ய பொதுமக்களை தொடர்ந்து ஏமாற்றுகின்றனர்

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான எதிர்க்கட்சியினர் தங்கள் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்துகொள்வதற்காக பொதுமக்களை தொடர்ந்து ஏமாற்றி வருகின்றனர் என மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) செயலாளர் டில்வின் சில்வா குற்றம் சுமத்தினார்.

இவர்கள் பொதுமக்கள் மத்தியில் அமைதியை உறுதிப்படுத்துதல் மற்றும் தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் இவ்வாறு ஏமாற்றி வருவதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்வின்போது இன மற்றும் மத தீவிரவாதத்தை தோற்கடித்து நாட்டில் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கான திட்டங்களை தொழிற்சங்கத் தலைவர்களிடம் ஜே.வி.பி. கையளித்தது.

இதனை அடுத்து அங்கு கருத்து தெரிவித்த அவர், எதிரணியினர் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதாக கூறிக்கொண்டு மறுமுனையில் இன பாகுபாட்டை ஊக்குவிக்கின்றனர். அவர்கள் பதவியில் இருந்த காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கில் 240 மசூதிகளை நிர்மாணித் திருந்தனர். ஆனால் தற்போது நாட்டில் மசூதிகள் அதிகரித்துள்ளதாக குற்றம் சாட்டி வருகின்றனர்.

இவர்களே மத தீவிரவாத குழுக்களுக்கு சம்பளம் கொடுத்தது, இப்போது அவர்களின் அரசியல் ஆதாயங்களைப்பெற இன பாகுபாட்டைப் பயன்படுத்த முயற்சி செய்கின்றனர்.

எதிர்க்கட்சியின் இத்தகைய நடவடிக்கையினால் மக்கள் தவறாக வழி நடத்தப்படுகிறார்கள்.

நாட்டில் அனைத்து சமூகங்களும் மதத்தினரும் இணைந்து வாழக்கூடிய சூழலை உருவாக்குவதன் மூலமே நாட்டில் அமைதியை உறுதிப்படுத்த முடியும்.

தற்போது பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டிருந்தால், பாடசாலைகளுக்கு அருகில் இராணுவம் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டிருக்க மாட்டார்கள். வீதியில் சோதனை சாவடிகள் இருந்திருக்காது. என்றும் அவர் கூறினார். (ம-3)

# 19ஆவது திருத்தத்தில் உள்ள குறைகளை ஜனாதிபதி மைத்திரி ஏற்றமை மகிழ்ச்சி

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த



(கொழும்பு)

19 ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக முதன்முதலில் அங்கீகாரம் வழங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இப்போதாவது இந்தத் திருத்தச்சட்டத்தில் குறைகள் உள்ளதாக கூறுவது மகிழ்ச்சிகரமான விடயமென்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும், தனது காலத்தில் கொண்டு வரப்பட்ட 18ஆவது திருத்தச்சட்டத்தில் குறைகள் இருப்பதாக தான் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்றும் அவர் கூறினார்.

கல்கிஸ்ஸையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இங்கு மேலும் தெரிவித்த அவர், 18ஆம் திருத்தச் சட்டத்தில் எந்தவொரு சிக்கலும் இருக்கவில்லை. நமதுநடாங்கள் கடந்து விட்டன. ஆட்சிக் காலத்தில் நாம் இதஇப்போதாவது, 19ஆவது திருத்தச் மூலம் நாட்டை சிறப்பாகத்தாட்டத்தில் குழப்பமிருக்கிறது என வழிநடத்தியிருந்தோம். அவர் தெரிந்துக்கொண்டமை

18ஆவது திருத்தச்சட்டத்துக்குாளது உண்மையில் பெரிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடயமாகவே நாம் கருதுகி வும் அன்று ஆதரவு வழங்கி இருந்தோம்.

தார். எனினும் தற்போது, ஒட்டு

அதேபோல், 19ஆவது திருத்தமாத்த அரசியலமைப்பையும் தச்சட்டமும் நாட்டுக்கு உகந்ததுாற்றத்தான் இவர்கள் முயற்சித்து என்று அவர் தான் முதன் முதருகிறார்கள்.

லில் அங்கீகாரம் வழங்கியிருந் இதற்கான மறை முகமான தார். வேலைகளும் நடந்துக் கொண்டு

இது நடைமுறைக்குக் கொண்டின் இருக்கின்றன என மேலும் வரப்பட்டு தற்போது நான்கணிதரிவித்தார். (ம-3)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**ராஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (9369)

**நெல்லியடியில்...**

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.

UK - 525.00, Germany - 675.00, France - 830.00

நிபந்தனைகள் எதுவும் இல்லை

**அருள்** இல.1, பெற்றோல் செற் லேன், நெல்லியடி.
076 443 1576 (C-6615)

**முகவர்கள் தேவை**

யாழில் நீண்ட காலமாக நன்மதிப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் கூரியர் சேவை நிறுவனத்திற்கு முகவர்கள் கீழ்வரும் நகரங்களில் நம்பிக்கையும் நேர்மையுமுள்ள தனிநபர்/வியாபார நிறுவனங்கள் தேவை.

- பளை
- கைதடி
- கோண்டாவில்
- உரும்பிராய்
- மருதனார்மடம்
- மானிப்பாய்
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- அச்சுவேலி
- புத்தூர்.

கவர்ச்சிகரமான கொடுப்பனவுகள் மற்றும் வியாபார ஊக்குவிப்புக்கள் வழங்கப்படும்.

(9335) தொடர்புக்கு: 071 867 6424

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

சகல வசதிகளுடன் வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. 3ஆம் வட்டாரம், மந்துவில் புதுக்குடியிருப்பு.

தொடர்புகளுக்கு : 077 057 9506, 076 217 6817, 077 943 5606 (C-6779)

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவும் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலடி,

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்

நரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்

முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா –திருகோணமலை

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு

| | |
|---|---|
| UK – 550 | /=Kg |
| கனடா – 900 | /=Kg |
| ஜேர்மனி – 700 | /=Kg |
| நெதர்லாந்து – 700 | /=Kg |

DELIVERY IN 3-5 DAYS

0768226240 (C-6533)

மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை

V2 TRAVELS

**துரித தபால்கள் பொதிகள் சேவை**

DHL மூலம் அனுப்பப்படும் பொதிகள் 3 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும்

**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.

0777 554 528 (9192)

**சிங்கள வகுப்புகள்**

அடிப்படை வகுப்பு தொடக்கம் க.பொ.த சாதாரணதர இரண்டாம் மொழி சிங்கள பாட வகுப்புகள் நடைபெறும்.
தரம் 6 முதல் 11 வரையான வகுப்புகளும் நடைபெறவுள்ளன
அரச ஊழியர்களுக்கான பரீட்சை வகுப்புகளும் நடைபெறும்.
நிலையம் - யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சுன்னாகம்

தொடர்புகளுக்கு (9378)

077 086 4649

**Techno World**

(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்ப்பாணம்)

A/L 2021

தொழில்நுட்பப் பிரிவு

மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா...

கண்டி நுவரெலியா

(ஆராய்ச்சி நிலையம், பண்ணை, Tissue Culture Lab பார்வையிடப்படும்.)

தொடர்புகளுக்கு : 077 017 5346, 077 170 8549


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

## வினாத்தாள் பகுதி-II மேல்மாகாணம்

பகுதி II

1. கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைகளை தரப்பட்ட பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக?
ஒரு குளத்தில் நீர் நிறைந்திருந்தது. இதனால் மீன்கள் எல்லாம் துள்ளிக்குதித்து விளையாடின. ஒரு சிறிய மீன் துள்ளித்துள்ளிப் பாய்ந்தது.இதை அவதானித்த ஒரு கொக்கு விரைவாகப் பறந்து சென்று "லபக்" என்று அந்தச்சிறிய மீனைக்கௌவிக் கொண்டு பறந்தது. அகப்பட்ட சிறிய மீன் பயப்பட்டாலும் துணிவுடன் அன்புள்ள கொக்காரே இன்னும் சிறிது நேரத்தில் நீங்கள் என்னை உண்பீர்கள். நான் இறந்துவிடுவேன் என்றது.

❖ மேற்குறித்த பந்தியை பயன்படுத்தி (i) தொடக்கம் (vi)வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.
(i)மீன்கள் எல்லாம் துள்ளிக் குதித்து விளையாடக் காரணம் யாது?...............
(ii)பந்தியில் வந்துள்ள பெயரடைமொழியை எழுதுக?....................
(iii)வேகமாக என்பதன் ஒத்த கருத்து யாது?............
(iv)இங்கு இடம்பெற்றுள்ள இணைமொழி யாது?..............
(v)நிறைந்திருந்தது என்பதைப் பிரித்து எழுதுக?...........
(vi)அஃறிணை பன்மை இறந்த கால வினைமுற்றுச் சொல் எது?..............

02. (அ)அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.
(i)சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட ஏனைய விலங்குகள் ஓடி .....ந்தன.(ஒளி, ஒழி)
(ii)அவன் எய்த ...............பட்டு மான் கீழே விழுந்தது.(பானம், பாணம்)
(iii)நல்ல கருத்துக்களை........ ஆர்வம் வேண்டும்.(அரிய, அறிய)
(ஆ) பின்வரும் விடுகதைகளுக்குரிய விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.
(i)மழை பெய்த பின் குடை பிடிப்பான். அவன் யார்?
.................................................................................
(ii)ஒற்றைக்கால் மனிதனுக்கு எட்டுக்கை .அவன் யார்?
.................................................................................
(iii)சுடுபட்டுச்சிவந்தவன் வீடு கட்ட உதவுவான்.அவன் யார்?
.................................................................................

03. பின்வரும் வெற்றிடங்களை மரபுச்சொற்களுடன் தொடர்புபடுத்தி எழுதுக.
(i)பனைக்கு நுங்கு என்பது போல பலாவுக்கு......................
(ii)ஆட்டுக்கு பிழுக்கை என்பது போல் கழுதைக்கு......................

04. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.
(i) ஐயோ ஏன் பூனைக்கு அடித்தீர்கள்
(ii) உணவு உடை உறையுள் என்பன அடிப்படைத் தேவைகளாகும்

05. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.
(i)Very good.................................
(ii)I live in Sri Lanka......................
(iii)I want to play...........................

06. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஆங்கிலத்தில் எழுதுக.
இது எனது குடை...................................

07. படத்தைப் பார்த்து அவை ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பெயரை ஆங்கிலத்தில் எழுதுக.


..................


..................


08. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
(i)மிருகக்காட்சிச்சாலைக்குப் போவோமா?
.................................................................................
(ii)பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.
அ)வா டிவென்ன:...............................
ஆ)குருள்ள: ...................................
இ)இர பாயனவா :.........................

09. சரியாக எழுதிக் காட்டப்பட்டுள்ள சொல்லைத் தெரிந்து கோடிடுக.
(i)(முயற்சி, முயட்சி, முயச்சி)
(ii)(யால்ப்பாணம், யாழ்ப்பானம், யாழ்ப்பாணம்)


♦ பின்வரும் வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.
10. பத்திரிகை வாசிப்பதால் எமது ................ வளர்ச்சி அடைகின்றது.
11. அண்ணா! எனக்கு இந்த எல்லே விளையாட்டின் ........... பற்றிக் கூறுவீர்களா?
12. முன்னொரு காலத்தில் ............................ கோசல நாட்டை ஆண்டு வந்தான்.

♦ வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.
13. .................. (இவன்/இ) வகுப்பாசிரியரைப் போல சட்டம் பேசுகின்றான்.


14. பிரபுவும் பாபுவும் ஒரே கிராமத்தில் ...........(வாழ்ந்தார்/வாழ்ந்தார்கள்)
15. சுகமாக வாழ்வதற்கு தூய காற்று, தூய நீர், தூய உணவு, தூய சூழல் என்பன ............ (அவசியமாகின்றது/அவசியமாகின்றன)
16. "ஒழுக்க விழுமியங்களைப் பேணுவோம்" எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும்.எழுவாய், பயனிலைத் தொடர்புகள் எடுத்துக் கூட்டல் ஆகியன இருக்க வேண்டும்).
(i).........................................................................
.................................................................................
(ii).........................................................................
.................................................................................
(iii).........................................................................
.................................................................................

♦ தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் சரியான விடையை எழுதுக.
17. எண் கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் வெற்றிடத்தில் முறையே எழுதுக.
6030, 6040, 6060, ............... 6130, ...............
18. "அறுபத்தொன்பதாயிரத்து தொண்ணூற்று ஒன்பது" என்பதை இலக்கங்களில் எழுதுக.
.................................................................................
19. 0.8, 1, 1/2, 0.3, 25/100 எனும் எண்களை ஏறுவரிசைப்படுத்துக.
.................................................................................
20. பெட்டி ஒன்றில் இருந்த மாம்பழங்களுள் 3/5 பங்கு பழுதடைந்து விட்டன. பழுதடையாத மாம்பழங்களின் எண்ணிக்கை 24 எனின் பழுதடைந்த மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?
.................................................................................
21. 

மாத்தறையில் இருந்து முறையே காலி,கொழும்பு வழியாக கண்டிக்கு உள்ள தூரம் பின்வரும் தேசப்படத்தில் கிலோ மீற்றரில் காட்டப்பட்டுள்ளன. காலியிலிருந்து கண்டிக்கு உள்ள தூரம் யாது.
..............................
22. காலை 7.00 இற்கு புறப்படவிருந்த பேருந்து ஒன்று 10 நிமிடங்களுக்குப் பின்னர் பயணத்தை ஆரம்பித்தது. அப்பயணத்திற்கு 3 மணித்தியாலம் 25 நிமிடம் எடுத்தது. பேருந்து பயணத்தை பூர்த்தி செய்த நியம நேரம் யாது?
.................................................................................
23. ஓர் இனிப்பான போத்தல் 3 பேரை உபசரிக்க போதுமானது.19 பேரை உபசரிக்கத் தேவையான இனிப்பான போத்தல்களின் எண்ணிக்கை யாது?............................
24. 2014 ஆம் ஆண்டு 60 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் திரு.சேகர் தாது 40 ஆவது பிறந்த தினத்தை எந்த ஆண்டில் கொண்டாடியிருப்பார்?.
..............................
25. உருவில் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?.




26. ஒரு போத்தலின் உள்ள நீரின் கனவளவு 850 ஆகும் அத்தகைய 9 போத்தல்களில் உள்ள நீரின் கனவளவை லீற்றர், மில்லிலீற்றரில் தருக.
..............................
27. காட்டப்பட்டுள்ள உருவின் சுற்றளவு யாது?




28. 1Kg வாழைப்பழத்தின் விலை ரூபா 90.00 ஆகும் .1Kg 800g வாழைப்பழத்தின் விலை யாது?
29. கழிக்குக.
7/8-1/2=: .....................
30. ஒரு சதுரத்தின் சுற்றளவு 24 எனின் அச்சதுரத்தின் பரப்பளவு யாது?
.................................................

♦ 31 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
31. காற்றின் மூலம் பரம்பலடையும் விதை எது?
1. மூக்கிளறச்சி 2.முருங்கை 3. நாயுருவி 4.அம்மணக்கு
32. நான்கு இதழ்களைக் கொண்ட பூ எது?
1.அலரிப்பூ 2. தென்னம்பூ 3.ஜந்தூரியம் 4. நாமலர்
33. எமது நாட்டுக்கு உரித்தான தாவரம் அல்லாதது.
1.தேயிலை 2.நிலவேம்பு 3.காட்டிலுப்பை 4.எண்ணை
34. வெப்பமான காலங்களில் நீர் நிலைகளில் படுத்திருக்கும் பிராணி எது?
1.நாய் 2.எருமை 3.பசு 4.யானை
35. தாய்ப் பூனை அதன் குட்டியின் எப்பகுதியைக் கௌவிச் செல்லும்?
1.கால் பகுதியை 2.காதுப் பகுதியை
3.கழுத்துப் பகுதியை 4.வயிற்றுப் பகுதியை

# தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

## வினாத்தாள் பகுதி-II

## மேல்மாகாணம்

36. மகா மேகவனம் எனும் நந்தவனம் அமைந்துள்ள இடம் எங்குள்ளது.
1.அநுராதபுரம் 2.கண்டி 3.பொலநறுவை 4.குருநாகல்

37. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளின் படிநிலைகள்
1.3 2.5 3.4 4.2

38. சிவப்பு, நீலம் ஆகிய இரு நிறங்களையும் கலக்கும் போது பெறப்படும் நிறம்
1.பச்சை 2.செம்மஞ்சள் 3.ஊதா 4.கறுப்பு

39. சூழல் சமநிலையைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிப்பது?
1. பறவைகள் 2.விலங்குகள் 3.தாவரங்கள் 4.பூச்சிகள்

40. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் டின் மீன் நஞ்சாகும்?
1.உற்பத்தி திகதியிலிருந்து ஒரு மாத கால முடிவில்
2.டின் மீன் நசிவடையும் போது
3.காலாவதியாகும் திகதிக்கு முன்
4.ISO தரச்சான்றிதழ் இல்லாத போது

41. மடைக் கதவு என்பது
1.அரண்மனைகளின் நுழைவாயில் கதவு
2.குளத்தில் இருந்து மேலதிக நீரை வெளியேற்றும் இடம்
3.மலைகளிலிருந்து நதிகள் உற்பத்தியாகும் இடம்
4.வயல் வரம்புகளில் வெட்டப்படுவது.

42. இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்
1.கொழும்பு 2.கண்டி 3.மாத்தறை 4.தலவாக்கலை


43. கிராமப்புற விவசாயிகளினால் பள்ளத்திலுள்ள நீரை மேட்டு நிலத்திற்குப் பாய்ச்சப் பயன்படும் இவ் உபகரணத்தின் பெயர் யாது



1.அலரி
2.ஏத்து
3.வாரிக்கலன்
4.கரப்பு

44. பற்சில்லு பயன்படுத்தும் உபகரணம் எது?
1. வயலின் 2.தொலைபேசி 3.கடிகாரம் 4.மின்னழுத்தி

45. உருவில் உள்ள உடுக்கோலத்திற்கு வழங்கும் பெயர் யாது?



1.கலப்பை
2.சிறுகரடி
3.பெருங்கரடி
4.சிம்மம்

46. ஆழமற்ற குளம், நீர்க்குட்டை என்பவற்றில் மீன் பிடிக்கப்பயன்படுத்தப்படும் உபகரணம் எது?
1.நாம்புவ 2.மடி 3.கரைவலை 4.அத்தாங்கு

47. நுவரவாவி(திஸ்ஸவாவி)யைக் கட்டுவித்த மன்னன்
1.மகாசேனன் 2.தாதுசேனன்
3.பராக்கிரமபாகு 4.தேவநம்பிய தீசன்

48. இக்குறியீட்டினால் குறிக்கப்படுவது யாது?




1.இடியுடன் கூடிய மழை
2.மின் தாக்கம் ஏற்படலாம்.
3.ஈரலிப்பில் இருந்து பாதுகாக்கவும்
4.நீள் சூழற்சிக்கு உட்படுத்தவும்

49. உருவில் மஞ்சள் நிறப்பின்னணியில் கருமை நிறத்தில் உள்ள வீதிக் குறி குறிப்பிடுவது.



1.முன்னால் பாதை ஒடுங்குகிறது
2.முன்னால் ஒடுங்கிய பாலம் உள்ளது
3.முன்னால் பாதை வேலை
4.முன்னால் பாதை வழுக்கும்

50. இவ் இசைக்கருவியின் பெயர்



1.தபேலா
2.டோலக்
3.தம்பட்டம்
4.உடுக்கை

51. கடதாசிகளை மடித்து பல வண்ண உருவங்களை செய்து கொள்ளும் ஆக்கத்தை எவ்வாறு அழைக்கப்படும்?
1.கொலாஜ் 2.அச்சுப் பதித்தல்
3.ஸ்டென்சில் 4.ஓரிகாமி

52. தச்சன் பயன்படுத்தும் உபகரணம் ஒன்றல்லாதது?



1 2 3 4

53. இலைகள், பூக்கள் போன்ற உருவங்களை தைப்பதற்கு ஏற்ற தையல் முறை
1.பெருநூலோடி 2.சிறுநூலோடி
3.நரம்புத் தையல் 4.சோம்தையல்


54. வானவில்லில் உள்ள நிறம் அல்லாதது
1.பச்சை 2.வெள்ளை 3.சிவப்பு 4.நீலம்

55. சுதந்திர இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி யார்?



1 2 3 4

56. அருகில் உள்ள நீர் வடிகட்டியில் A யினால் காட்டப்படும் பொருள் யாது?




1.சிறிய கற்கள்
2.மணல்
3.பஞ்சுத்திரளை
4.கரித்துண்டுகள்

57. வெண்டிப்பயிர்ச் செய்கையில் சேதம் விளைவிக்கும் பூச்சி
1.நெல்தண்டுக்கோதி 2.பனிப்பூச்சி
3.அழுக்கணவன் 4.மீலிமூட்டைப் பூச்சி

58. சர்வதேச ஓட்டப்போட்டியில் தொடக்கமும் முடிவும் ஒரே இடத்தில் அமையும் ஓட்ட நிகழ்ச்சிகள்
1.100m ,200m 2.200m ,400m
3.400m , 800m 4. 100m , 800 m

59. நீரில் அமிழக்கூடிய திண்மப்பொருள் அல்லாதது.
1.செங்கல் துண்டு 2.தேங்காய் எண்ணெய்
3.மரப்பலகை 4.இரசம்

60. இலங்கையில் பால் உற்பத்தியில் பங்களிப்புச் செய்யும் நிறுவனமொன்று
1.கால்நடை வளங்கள் அமைச்சு
2.சுகாதாரத் திணைக்களம்
3.கல்வித் திணைக்களம்
4.பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

## 21.06.2019 அன்று வெளியான தரம்-5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாளுக்கான விடைகள்

### பகுதி-I விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 3 | 11. | 1 | 21. | 1 | 31. | 2 |
| 2. | 2 | 12. | 1 | 22. | 2 | 32. | 3 |
| 3. | 3 | 13. | 3 | 23. | 2 | 33. | 2 |
| 4. | 1 | 14. | 1 | 24. | 2 | 34. | 3 |
| 5. | 3 | 15. | 2 | 25. | 3 | 35. | 3 |
| 6. | 2 | 16. | 2 | 26. | 1 | 36. | 1 |
| 7. | 2 | 17. | 1 | 27. | 1 | 37. | 2 |
| 8. | 1 | 18. | 3 | 28. | 2 | 38. | 1 |
| 9. | 2 | 19. | 1 | 29. | 2 | 39. | 3 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 3 | 40. | 1 |